பெப்ரவரி - 2008

நேர்காணல்:



தமிழீழத்தின்
வரைந்தோ சங்க தலைவரும்,
போகாலை ஆசிரியருமான

திரு. ரட்ணசோதி

# எரிமலை
# ERIMALAI





## போர் நிறுத்தல் உடன்பாட்டின் முறிவும் ஈழப்போரின் இன்றைய பரிமாணமும்

ஓர் சிறப்புப்பார்வை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கேணல் சாள்ஸ்

உட்பட நான்கு வேங்கைகள் நினைவாக....



கேணல் சாள்ஸ்/ அருள்வேந்தன்



லெப். சுகந்தன்



லெப். வீரமாறன்



லெப். காவலன்

நினைவு நாள்: 05.01.2008










கட்டுரைகள்

| | |
|---|---|
| நாதன் | 04 |
| ஜெயராஜ் | 10 |
| நே.ருசாந்தன் | 13 |
| இ.சசிக்குமார் | 14 |
| சேனாதி | 18 |
| வேலவன் | 22, 29 |
| முரளிமாறன் | 28 |
| சு.தமிழினி | 32 |
| அன்பரசு | 40 |
| மு.கந்தசாமி | 50 |
| இரத்தினசபாபதி | 58 |

நேர்காணல்கள்

| | |
|---|---|
| திரு. ரட்ணசோதி | 42 |

தமிழீழத்தின் கராத்தே சங்க தலைவர், யோகாசன ஆசிரியர்

சிறுகதை

| | |
|---|---|
| சு.ஞாலவன் | 56 |


கவிதை

| | |
|---|---|
| அம்புலி | 60 |











திரு. ரட்ணசோதி




வரலாற்று நதிகள்

| | |
|---|---|
| தமிழ்க்கவி | 52 |



நாம் வாழும் உலகிலே புதிய பூகம்ப மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. உலகமே ஆசியாவை நோக்கித் திரும்பியிருக்கிறது. இருபத்தோராம் நூற்றாண்டும் ஆசியாவின் சகாப்தமாக ஆரம்பித்திருக்கிறது. எமது பிராந்தியத்தைச் சேர்ந்த, எமது கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் சமூக, பொருளாதார, விஞ்ஞானத்துறைகளிலே பெருவளர்ச்சியீட்டி முன்னேறி வருகின்றன. அண்டவெளி ஆராய்ச்சிகள், சந்திரமண்டல ஆய்வுகள், அணுக்கருப் பரிசோதனைகளெனப் புதிய பாதையிலே பயணிக்கின்றன. மனித சமுதாயம் முன்னெப்போதும் காணாத புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து, இயற்கையின் எண்ணற்ற புதிர்களுக்கு விடைகள் காணவும் தீராத வியாதிகளுக்குத் தீர்வுகள் தேடவும் புதிய பயணத்திலே இறங்கியிருக்கிறது. அரிய உயிரினங்களையும் தாவர வகைகளையுங்கூடக் காத்து, பூகோள முழுமையையும் பாதுகாக்கின்ற புனித முயற்சியிலே காலடி எடுத்துவைத்திருக்கிறது. ஆனால், சிங்களத் தேசம் மாத்திரம் நேரெதிர்த் திசையிலே, அழிவு நோக்கிய பாதையிலே சென்றுகொண்டிருக்கிறது. தன்னையும் அழித்து, தமிழினத்தையும் அழித்து வருகிறது. இதனால், அழகிய இலங்கைத்தீவு இரத்தத்தீவாக மாறியிருக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# தலைவாசல்

## முறிந்த ஒப்பந்தம்

இன்று, நாளை என்றிருந்த ஒப்பந்தம் முறிந்தே விட்டது. 1920ஆம் ஆண்டு தொடக்கம் இது தமிழ் - சிங்கள உயர்மட்ட உறவின் வரலாறு. எத்தனை ஒப்பந்தங்களை இந்தத் தீவு கண்டுவிட்டது. நன்றாகத் தொடங்கி மிக எளிதாக முறிக்கப்படும் வரலாறு அனைத்திற்கும் பொதுவாக உள்ளது. தம்மைப் பலப்படுத்திக்கொள்ளும் இடைவெளியாகவே சிங்களவர்கள் ஒப்பந்தங்களைக் காலம்காலமாகப் பயன்படுத்துகிறார்கள். தமிழர்கள் ஏமாளிகள் என்பது சிங்களவர்களின் நம்பிக்கை. இது ஓரளவுக்கு உண்மைதான். ஏமாறுவது எமது வாடிக்கை, அதாவது எமது கடந்தகால வாடிக்கை. புலிகளின் தலைமையில் தமிழர்கள் ஒன்றிணைந்த கட்டத்தில் ஏமாற்றுவது சிங்களவர்களுக்குக் கடினமாக இருக்கிறது. பெப்ரவரி 22, 2002 ஆம் நாள் நோர்வே நேரப்படி காலை 10.00 மணியளவில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு அமைதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாகப் பிரகடனஞ் செய்தார். அவர் அவ்வாறு பிரகடனஞ் செய்யும்போது அருகில் நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கேசன், விசேட அமைதித் தூதுவரும் ஆலோசகருமான எரிக் சூல்கைம் நின்றனர். போர் நிறுத்தம் பெப்ரவரி 24, 2002 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைமுறைக்கு வரும் என்றும் ஜான் பீற்றர்சன் சொன்னார். நோர்வேயின் ஈடுபாடும் மத்தியஸ்துவமும் சிறிலங்கா விவகாரங்களில் புதிய அத்தியாயத்தைத் தொடக்கியது. ஜூலை 29, 1987 இல் தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வாக இந்தியாவும் சிறிலங்காவும் செய்துகொண்ட இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம், ஜனவரி 08, 1995இல் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களும் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்காவும் செய்துகொண்ட பகை நடவடிக்கை நிறுத்தமும் இரு பகுதியினர் செய்துகொண்ட ஒப்பந்தங்கள். ஆனால் நோர்வே உருவாக்க உதவிய 2002ஆம் ஆண்டின் ஒப்பந்தம் ஒரு சர்வதேச ஒப்பந்தம். இதில் நோர்வே மாத்திரமல்ல ஸ்கன்டிநேவிய நாடுகளும் இணைந்துள்ளன. எம்.ஓ.யூ எனப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் மூன்று அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கூறிய பெப்ரவரி 22, 2002ஆம் நாளின் போர் நிறுத்தம் ஒப்பந்தம். தமிழீழத் தரப்பினரும் சிறிலங்காத் தரப்பினரும் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வதாக நோர்வேப் பிரதமருக்கு வழங்கிய வெவ்வேறு கடிதங்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் நடைமுறைகள். இன்றைக்கு இந்த விரிவான சம்பிரதாயங்கள் அனைத்தும் செல்லாக்காசாகி விட்டன. தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைச் செய்வதற்கு சிங்களத்திற்குச் சம்மதமில்லை. இது பாரம்பரிய நிலைப்பாடு. போர்மூலம் அடக்கி ஒடுக்கவேண்டும் என்பது சிங்களவனின் நீண்டகாலத் தீர்மானம்.

இனிமேல் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் சமாதானம் ஏற்பட வாய்ப்பில்லை. நிலமை எல்லை கடந்துவிட்டது. கடும்போக்குவாதிகளின் கை ஓங்கிவிட்டது. அவர்களின் பின்னணியில் சில உலக நாடுகள் அணிவகுத்துள்ளன. பிக்குகளும், செஞ்சட்டைத் தேசியவாதிகளும் ஒரு துரும்பைக்கூடத் தமிழர்களுக்குக் கொடுக்க உடன்பட மாட்டார்கள். ஈழத்தமிழர்களுக்கு உள்ளது ஒரேயொரு பாதை மாத்திரமே. விடுதலைப் போராட்டத்தில் வெல்வோம், விடுதலையை வென்றெடுப்போம்.

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு

பெப்ரவரி 2008

இருபத்தேழாம் ஆண்டு

தாய்மண் வெளியீடு,
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, பிரான்ஸ்

# போர் நிறுத்தல் உடன்பாட்டின் முறிவும்

நாதன்

(தமிழீழ விடுதலைப் போர் வெறுமனே அரச அதிகாரத்தினை கைகளில் வைத்துள்ள சிங்கள தேசத்துடனான போர் மட்டுமல்லாது சர்வதேச நலன்சார் அரசியல் விரிப்பிலே வைத்துப்பார்க்கப்படும் சர்வதேச விவகாரமுமாகும். இந்தப் போரினை வெல்வதற்கான 'அடிப்படைகளை' தமிழீழ விடுதலைப் போர் கொண்டுள்ளது. அந்த 'அடிப்படைகளை' தமிழர் தேசம் பாதுகாத்து - மேம்படுத்தினால் தமிழீழத்தினை மறுக்க முடியாத வரலாற்றுக்குழந்தையாக உலகம் ஏற்றுக்கொள்ளும் என இந்தக் கட்டுரை விவாதிக்கின்றது)



அடுத்த கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிவிட்டது. வலுவாக்கப்பட்டு - குவிக்கப்பட்ட ஆயுதப்படைகளின் துணையுடனும், போரின் மூலம் மட்டுமே தமிழீழ மக்களின் விடுதலை இலட்சியத்தினை தோற்கடித்துவிடலாம் என்ற முடிவுடனும் முரண்பாட்டின் மையத்திற்கு போரினை சிறீலங்கா மீள அழைத்து வந்துள்ளது. மறுபுறம், இந்தப் போரினை எதிர்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத காலகட்டத்திற்குள் தமிழீழ

இந்தப் பின்னணியில் இந்தப் போரின் எதிர்காலப் பரிமாணம் என்ன? ஈழப்போரின் புதிய அத்தியாயம் வெறுமனே தமிழர் (புலிகளின்) படைகளுக்கும், சிங்களப் படைகளுக்கும் இடையேயான போர் என்ற வரைவுக்குள் அடங்கிவிடுமா? அல்லது உலக, ஆசிய மற்றும் தென்னாசிய வல்லரசுகளும் சம்பந்தப்பட்ட பரந்த தளத்தில் இது இடம்பெறுகின்றதா?

இந்து சமுத்திர பிராந்தியத்தின் முக்கிய கடல் ஒழுங்கையில், அதிகம் அச்சுறுத்தப்பட்ட பகுதியாக கருதப்படும் (ஆப்கானிஸ்தான் போர், பாகிஸ்தான் அணுகுண்டு, அல் - காய்தா பதுங்குமிடங்கள் போன்ற விடயங்களால்) தென்னாசியாவின் பாதுகாப்பான வெளியெல்லையில் அமைந்துள்ள இலங்கைத் தீவில் இடம் பெறும் போர் சர்வதேச நலன்களுக்கு

# ஈழப்போரின் இன்றைய பரிமாணமும்

பரவலாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். நோர்வே மத்தியஸ்துவம், ஜப்பான் சிறப்புத்தூதுவர், இணைத்தலைமை நாடுகள் என்கின்ற வடிவில் மேற்குலகின் நிறுவனமயப்படுத்தப்பட்ட அணுகுமுறை இலங்கை இனச்சிக்கலுக்குள் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது ஒரு உண்மை. இந்தியா என்ற உலக வல்லரசாகும் அபிலாசை கொண்ட பிராந்திய சக்தி தனது செல்வாக்கு எல்லைகளுக்குள் இலங்கை விவகாரத்தினை முடக்கியாள முற்படுகின்றது என்பது சுமார் போரின் சுமார் முப்பது ஆண்டுகால வரலாறு கூறும் மற்றைய உண்மை. சீனாவின் முத்துசரம் எனும் கடல்சார் வியூக விரிப்பில் இலங்கைத்தீவும் ஒரு முத்தாக கோர்க்கப்பட்டுள்ளது என்பதும் பொருளாதார - இராணுவ வலுவுடன் துரித வலுவிரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள சீனா இலங்கைத்தீவில் தனது செல்வாக்கினைப் பெருக்கி வருகின்றது என்பது பிறிதொரு உண்மை. யப்பான், ஐரோப்பிய ஒன்றியம் எனப் பலதரப்பும் இலங்கைத்தீவின் புவிசார் அமைவிடம் காரணமாக இலங்கைத்தீவின் மீது ஆர்வத்தினைக் கொண்டவர்களாகவே செயற்படுகின்றனர்.

இத்தகைய சர்வதேச உண்மைகள் மத்தியில் சிறிய தேசிய இனமான தமிழீழ மக்கள் தமக்கான படைபலத்தினைக் கட்டியெழுப்பி - பிரபாகரன் எனும் வலுவான தேசிய தலைவரின் தலைமையில் - தங்களின் விடுதலைக்கான போரினை நடாத்துகின்றனர். சிங்கள தரப்பிடம் அகப்பட்டக்கிடக்கும் தமக்குரிய அரச அதிகாரத்தினை (state power) வசப்படுத்தி தமக்கான சுயமான அரசினை கட்டியெழுப்புவதற்கான போரில் தமிழர்கள் ஈடுபட்டுள்ளனர். மறுபுறம், இலங்கைத்தீவின் அரச அதிகாரங்களை வசப்படுத்தி வைத்துள்ள சிங்கள தேசம் சர்வதேச விரிப்பினுள் தன்னை பொருத்திக் கொண்டு தமிழ் மக்களின் போரினை நசுக்க முற்படுகின்றது.

இந்தப் பின்னணியில், தற்போது ஆரம்பமாகியுள்ள அடுத்த கட்ட ஈழப் போரில் சர்வதேச சக்திகள் தங்களை எவ்வாறு பொருத்திக் கொள்கின்றன என்று ஆராய்வது கற்றலுக்குச் சுவாரசியமானதும், விவாதிக்கப்பட வேண்டியதுமான முக்கிய விடயமாகும்.

போதும் இல்லாத அளவில் ஒழுங்கற்ற அச்சில் இயங்குகின்றது (anarchic order) என்று ஆய்வாளர்களால் விபரிக்கப்படுகின்றது. அமெரிக்கா முன்னெடுக்கும் வெளியுறவுக் கொள்கையில் காணப்படும் தன்னிச்சையான தன்மையும், சீனா முன்னெடுக்கும் கொள்கைகளில் காணப்படும் ஈவிரக்கமற்ற வணிகவலு விரிவாக்கமும், ஐரோப்பிய ஒன்றியம் தனது புதிய ஒருங்கிணைக்கப்பட்ட வடிவத்தில் உலக விவகாரங்களை அணுக முற்படுவதும், மீள வலுப்பெற்றுவரும் ருஸ்சியாவின் உலகப்பார்வையும் இந்த ஆய்வுப்பார்வையைப் பலப்படுத்துகிறது. தற்போது நிலவும் எரிபொருள் சிக்கல், சுற்றுப் புறச் சூழல் விவகாரம், பயங்கரவாதம் பற்றிய தன்னிச்சையான பார்வைகள், மாற்றங் காணும் வணிக வலுவிரிவாக்கம் போன்றன இத்தகைய அணுகுமுறைகளின் பின்னே புதிய திசைகளைப் பிறப்பிக்கின்றது. இதனால் உலக உறவுகளில் இப்போது நடைமுறைவாத அணுகுமுறை (realisme) வெளிப்படையானதாக வுள்ளது. இந்த நடைமுறைவாத இயக்கப் போக்கில் நலன்களும், வலுவுமே முடிவுகளை தீர்மானிக்கும். இதனால் இன்று சர்வதேச சட்டங்கள் எனப்படுபவையும், ஐநா போன்ற சர்வதேச அமைப்புக்களும் தங்களது செல்லுபடியாகும் தன்மையை இழந்து வருவதாக அல்லது புதிய சூழலிற்கு ஏற்ப மாற்றம் கண்டு வருவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. பொதுவாக உலகம் சட்டங்களாலும், மனிதநேய விழுமியங்களாலும் ஆளப்படாது நலன்களாலும், பலத்தினாலும் வழிநடத்தப்படுகின்றது என்கின்ற யதார்த்தம் வெளிப்படையாக இன்றைய உறவுகளில் ஆளுமை செய்கின்றது.

மறுபுறம், இந்தச் சர்வதேச ஒழுங்குகளில் அரசுகளே (states) இன்றைய உலகின் அடிப்படைக்கூறுகள் என்று வகுக்கப்படுகின்றன. சர்வதேச மன்றங்களும், செயற்பாடுகளும், சட்டங்களும் இந்த அரசு என்ற கூறுகளினால் ஆக்கப்பட்ட விவகாரங்களாகவே எழுந்துள்ளது.

இந்த நடைமுறைவாத கோட்பாட்டினூடு பொருத்திப் பார்த்தால் சிங்கள அரசு எவ்வாறு உலக விவகாரங்களை கையாளுகின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மனித

மானச்சட்ட மீறல்களும் மேற்குலாலும், சர்வதேச மனிதஉரிமைகள் அமைப்புக்களாலும், ஐநா போன்ற சர்வதேச மன்றங்களாலும் முக்கிய உலக விவகாரங்களில் ஒன்றாக மாற்றப்பட்டுள்ளது. ஐநா மனித உரிமை கவுன்சில், பாதுகாப்புச்சபையின் சிறுவரும் போரும் தொடர்பான பணிக்குழு போன்ற முக்கிய மையங்களில் சிறீலங்கா தொடர்பான விவகாரங்கள் விவாதத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது (கவனிக்க: இன்றுவரை தாக்கமுள்ள கண்டனங்கள், தண்டனைகள் சிறிலங்காவிற்கு எதிராக முன்னெடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு தமிழர்களினால் முன்வைக்கப்படுகின்றது).

சிறீலங்கா தனது இராஜதந்திரக் காய்களை நடைமுறைவாத உறவுகள் ஊடு நகர்த்துகின்றது. இன்று சர்வதேச விவகாரங்களில் தாக்கம் செலுத்தும் ஆசிய வலுநிலை மற்றும் ஆசியநாடுகளின் ஒற்றுமை என்பன மனிதஉரிமைகள் விவகாரங்களில் சிறீலங்காவிற்குச் சாதகமாக அமைகின்றது. இதனை நடைமுறையில் நோக்கினால், சிறீலங்கா பெரும் மனிதவதைகளை புரிகிறபோதும் பிராந்திய வல்லரசான இந்தியா இதில் கரிசனை கொள்ளவில்லை.

இந்த சூழலை எவ்வாறு சின்னஞ் சிறிய சிறீலங்கா எதிர்கொள்கின்றது. சிறீலங்கா தனது இராஜதந்திரக் காய்களை நடைமுறைவாத உறவுகள் ஊடு நகர்த்துகின்றது. இன்று சர்வதேச விவகாரங்களில் தாக்கம் செலுத்தும் ஆசிய வலுநிலை மற்றும் ஆசியநாடுகளின் ஒற்றுமை என்பன மனிதஉரிமைகள் விவகாரங்களில் சிறீலங்காவிற்குச் சாதகமாக அமைகின்றது. இதனை நடைமுறையில் நோக்கினால், சிறீலங்கா பெரும் மனிதவதைகளை புரிகிறபோதும் பிராந்திய வல்லரசான இந்தியா இதில் கரிசனை கொள்ளவில்லை. சீன வல்லரசு உச்ச உலக அமைப்பான பாதுகாப்புச்சபை வரையில் சிறீலங்காவின்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

படையான சூழலுள்ளது. மேலும், பாகிஸ்தான் தலைமை தாங்கும் இஸ்லாமிய நாடுகளின் அணி போன்றவை சிறிலங்கா சார்பு நிலைப்பாட்டினை எடுக்கின்றது. இந்த நிலைப்பாடானது மேற்குலகின் மனித உரிமைகள், சனநாயகம் போன்ற போதனைகளுக்கு (அல்லது மேற்குலகின் இராஜதந்திரக் கருவிகளுக்கு) எதிராகப் பொதுவாக ஆசிய அரசுகள் கட்டியுள்ள காப்பரண்களாகும். ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் மத்தியில் மேற்குலகு இந்த விடயங்களை தனது கருவிகளாகப் பயன்படுத்தி தங்கள் நாடுகளில் தலையிடுவதான எண்ணம் (பீதி) வலுவாயுள்ளது. சிறிலங்கா இந்த எதிர்ப்புணர்வினுள் மறைப்பெடுத்துப் பதுங்கியுள்ளது.

மறுபுறம், இராணுவ மற்றும் வியூக ரீதியான சிறிலங்காவின் அணுகுமுறையானது தனது புவிசார் நிலைப்பாட்டினை (geo - strategic) பாவித்து நிகழ்த்தப்படுகின்றது. ஒருபுறம், தமிழர்களுக்கு எதிரான போரில் கட்டற்ற இராணுவ, வியூக உதவிகளை வழங்கக் கூடிய சீனாவினையும், பாகிஸ்தானினையும் சிறிலங்கா தனது பிரதான இராணுவத் தளபாட விநியோகத்தர்களாக வைத்துள்ளது. இந்த நாடுகள் தங்கள் அணுகுமுறைகளில் அரச அதிகாரத்தினை மட்டுமே ஆதரிக்கும் வலுவான நிலைப்பாடுகளைக் கொண்டவை என்பதால் நம்பகமான - நீண்டகாலம் நின்றுபிடிக்கக் கூடிய நிபந்தனையற்ற வழங்கல் வழிகளாகவுள்ளன. ஆபிரிக்க விவகாரங்கள் பலவற்றில் சீனாவின் இத்தகையபோக்கு மேற்குலகு கடும் நடைமுறைவாத அணுகுமுறையினை கற்பித்தது. சூடானின் டர்பூர் (darfur) இனச்சுத்திகரிப்புப் பற்றிய மேற்குலக மற்றும் ஐநா குற்றச்சாட்டுக்களை சீனா உட்பட சில ஆசிய - ஆபிரிக்க - அரபு நாடுகளின் ஆதரவுகளுடன் வலுவாகவே எதிர்கொள்வதை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம். சூடானின் எண்ணெய் வளம் இந்த மாயஜாலத்தினைப் புரிகின்றது.

சிறிலங்காவிற்கு தான் வழங்கும் இந்த உறுதியான ஆதரவிற்குப் பிரதிபலனாக சீனா சிறிலங்காவில் தன் கால்களை ஆழமாகவே பதித்துள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்குள் நுழைவாயில்களைக் கொண்ட காலியில் உள்ள சீன ஆயுதக் களஞ்சியம், ஹம்பாந்தோட்டையில் உள்ள சீன துறைமுக வசதிகள் என்பன சீனாவின் இந்துப் புவிசார் ஆர்வத்தினை வெளிப்படுத்துகின்றன. பாகிஸ்தானைப் பொறுத்தவரை எப்போதும் இந்தியாவைச் சுற்றி தனது வியூக உறவுகளை வைத்திருக்கவே விரும்பும் என்பது வெளிப்படையானது. குறிப்பாக, இந்தியாவின் வியூக முக்கியத்துவமுள்ள தென்பிராந்

சிறிலங்காவில் கிடைக்கும் வசதிகள் பாகிஸ்தானிற்கு மிகுந்த பலனுள்ளவையாக அமைகின்றன. இந்த சீனா மற்றும் பாக்கிஸ்தான் அச்சுறுத்தல்களை சில பொதுவான காரணிகளால் இந்தியாவும் மேற்குலகும் கூட்டாக எதிர்கொள்ள விரும்புகின்ற போதும் இருதரப்புக்கும் இடையே நிலவும் வேறுபல முரண்பாடுகள் (கவனிக்க: இந்தியா தன்னை உலக வல்லரசாக விரிவாக்கம் செய்யும் முனைப்பிலுள்ளது) தவிர்க்க முடியாத பரஸ்பர நலன்சார் முரண்பாடுகளை உருவாக்குகின்றது. தனது காலடியில் சீனா, பாகிஸ்தான் மட்டுமல்ல மேற்குலகும் தளமமைப்பதை அடிப்படையில் விரும்பாது. இது இந்தியாவிற்கு நீண்டகால இராணுவ, வியூகமுனைகளில் இடையூறாக அமையும் என்பதை இந்திய கடற்படையும், பிறதரப்புகளும் தெளிவாக அறிந்து வைத்துள்ளன. எனினும், இலங்கைத்தீவின் இனச்சிக்கலைப் பாவித்து சீனாவும், மேற்குலகும் இலங்கைக்குள் கால் பதித்துவிட்டது என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் இந்தியாவிற்கு ஏற்பட்டது. இந்தியா இந்த ஏற்பாட்டிற்குள் ஒரு நுட்பமான கோட்டை வரையப்பார்க்கின்றது. கடந்த 20 வருடங்களாகவே புலிகளுடனான முரண்பாடு என்கின்ற தோற்றத்தைப் பாவித்து சிறிலங்காவுடன் (சிங்கள அரச அதிகாரத்துடன்) தன் நிலையை வலுப்படுத்த இந்தியா முயன்றது. மறுபுறம், தமிழர்களின் வலுவிரிவாக்கத்துடன் எப்போது தேவைப்பட்டாலும் சமரசத்தினை எட்டக்கூடியவிதத்தில் தமிழகத்திற்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையேயுள்ள நீர்க்கமான பிணைப்பை இந்தியா பாதுகாத்து வந்தது.


இந்த இரு தோணிகளில் பயணம் செய்யும் வித்தைக்கு, மேற்குலகின் நிறுவன வடிவப்படுத்தப்பட்ட தலையீடு அசௌகரிகத்தினை ஏற்படுத்துகின்றது. மேற்குலக ஏற்பாட்டிலான போர்நிறுத்தல் உடன்பாடும் - இனச்சிக்கல் தணிப்பு முயற்சிகளும் தளம்பலை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், இந்த மேற்குலகத் தலையீடு சிங்கள - தமிழ் முரண்பாட்டினை முதிர்ச்சியடைய வைத்து சர்வதேச விவகாரமாக்கிவிட்டது. மேற்குலகினை திருப்திப்படுத்துவதற்காக போர் நிறுத்தலையும், பேச்சுவார்த்தைகளையும் ஆதரிப்பதாக கூறிக்கொண்ட இந்தியா இரண்டையும் பலவீனப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டது என்ற தகவல் எப்போதும் வெளிவந்துகொண்டே இருந்தது. முடிவில் போர் நிறுத்தல் உடன்பாடு முடிவுக்கு வந்த போது இந்தியா ஆறுதல் பெருமூச்சு விட்டதை வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஐபிஎன் - சிஎன்என் தொலைக்காட்சிக்கு வெளி

சிறிலங்கா தங்களின் முரண்பாடுகளைப் பயன்படுத்தி தனது நலன்களுக்கான நகர்வுகளை முன்னெடுக்கின்றது என்பதை புரிந்து கொள்ளும் மேற்குலகும், இந்தியாவும், சீனாவும் பிறதரப்புக்களும் அந்த நகர்வுகளின் விளைவுகளை தங்களது அளவுகோள்களில் அளவிடுகின்றன. தங்கள் மத்தியகால - நீண்டகால நலன்களை பாதுகாப்பதற்கான பல வித முயற்சிகளையும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



விடுதலைப் போருக்கு தயாராகும் மக்கள்




றன. இந்தியா ஒருபோதும் இந்த உடன்பாட்டின் தரப்பல்ல என்றும், தங்களை இதற்குள் விழுத்தப் பலரும் முயன்ற போதும் தாங்கள் விழவில்லை என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறியமையானது சிறிலங்காவிற்கும், தமிழர்களுக்கும் சொல்லப்பட்ட செய்தி மட்டுமல்ல மேற்குலகிற்கு விடுக்கப்பட்ட செய்தியாகும். இது இலங்கை இனப்பிரச்சனையின் எல்லைகளை இந்திய உரிமை கோருவதையொத்த செயற்பாடு என்று சில தரப்புக்கள் நோக்குகின்றன.

இந்தியா இலங்கை இனச்சிக்கலை ஆரம்ப காலம் தொடக்கம் தனது தென்முனையில் பாதுகாப்பான (செல்வாக்குச் செலுத்தும்) நிலவரத்தினை உருவாக்கும் முடிவாகவே கையாண்டு வந்துள்ளது. தமிழர்களை பாவித்து சிறிலங்காவினை கையாளும் நடைமுறைவாத அணுகுமுறையினையே அது கையாண்டது. இன்றுவரை இந்த செல்நெறியில் மாற்றம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

மேற்குலகினைப் பொறுத்தவரை சீனாவின் வியூகத்தில் சிறிலங்கா இணையாமல் தடுப்பதற்கும், தங்களது செல்வாக்கின் கீழ் திருமலை உட்பட முக்கிய மையங்களை வைத்திருப்பதற்குமான அணுகுமுறையினை மேற்கொள்கின்றது. குறிப்பாக பாகிஸ்தானால் ஏற்பட்டுள்ள உள்நாட்டுச் சூழ்ப்பம் இந்த தேவைக்கு மேலும் வலுச்சேர்க்கின்றது. போர்நிறுத்தல் உடன்பாடு, சமாதானப் பேச்சுவார்த்தைகள், இணைத்தலைமை நாடுகள் உட்பட்ட நடவடிக்கைகளை மேற்கு மேற்கொண்டது. இவை வெளிப்படையாக சிறிலங்கா அரசினை மையப்படுத்திய நடவடிக்கைகளாகவே அமைந்தன. அல்லது அத்தகைய மையப்படுத்தலுடனான தலையீட்டையே சிறிலங்கா ஏற்றுக்கொண்டது. இந்த மேற்குலக வரைபடத்தில் தமிழர்களின் ஆயுதம்தரித்த விடுதலைப் போர் இடைநிறுத்தப்பட்டு, தமது கண்காணிப்புக்குள் - தாராளவாத பொருளாதார கொள்கைகொண்டதாக (liberal economic policies) அரச அதிகாரம் இயங்க வேண்டும். இங்கு முக்கிய விடயம் தமிழர்களின் ஆயுதம் தரித்த போரினை நிறுத்த வேண்டுமாயின் அதன் ஆதாரமான இனச்சிக்கல் தீர்க்கப்படல் வேண்டும் அல்லது தமிழர்களுக்கும் அரச அதிகாரத்தில் பங்கு வழங்கப்பட்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும் என்பதேயாகும். இங்கு இனச்சிக்கல் தீர்வுக்கான வழிமுறைகளில் இரு அரசுகளை (சிங்கள தமிழ் அரசுகள்) உருவாக்கினால் அதன் விளைவுகள் எவ்வாறு என்பது மேற்குலகிற்கு 'தெரியாத பூதம்' போன்ற சூழல் இருக்கின்றது. இந்த வரைபடத்தில் தமிழீழ கோரிக்கையைப் பற்றி நிற்கும் புலிகள்

இந்துசமுத்திரப் பிராந்திய கடற்பாதைகளில் தமிழீழத்தின் கிழக்குப்பகுதிக் கடற்கரைகள் அமைந்துள்ளன. திருமலை துறைமுகம் புதிய உலக அமைவில் செல்வாக்குப் பெறும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. மன்னாரின் புதிய எண்ணெய் வள கண்டுபிடிப்புக்களும், அதனை பன்னாட்டு நிறுவனங்களுக்கு கூறுபோட்டு விற்பதற்கு சிறீலங்கா எடுக்கும் முயற்சிகளும் முக்கியமானவையாகி விட்டன.



இயக்கம் குறுங்கால நோக்கில் பிரச்சனையானதாக உள்ளது. எனினும், இலங்கைத் தீவின் நடைமுறையில் புலிகளையும் உள்ளடங்கிய தீர்வுத்திட்டமே தேவைப்பட்டது. புலிகளின் இராணுவ வலு முக்கியமானதொரு கூறாக இலங்கைத்தீவினுள் செல்வாக்கு செலுத்துவது மறுக்க முடியாத பிராந்திய உண்மை என்பதை மேற்கு 'கணக்கில்' எடுக்கின்றது. இதனால் புலிகளையும் உள்வாங்கி பகுதியாக அங்கீகரித்துச் செயற்பட மேற்கு முனைகின்

சிறீலங்கா சர்வதேச சதிகளின் இந்த வியூக நலன்சார் அணுகுமுறைகளை புரிந்து கொண்டு காய்களை நகர்த்தி இராணுவவழிப்பட்ட தனது நோக்கினைப் பலப்படுத்திக் கொண்டது. படைப்பல வலு அதிகரிக்கப்பட்டது. பலதரப்பு அணுகுமுறைகள் மூலம் உளவு மற்றும் தொழில்நுட்ப தகவல்கள் பெறப்பட்டன.

எனினும், குறுங்காலத்தில் பயன்தந்த இந்த அணுகுமுறைகள் சிறீலங்காவின் மத்தியகாலம் அல்லது நீண்டகால நலன்களுக்குப் பயன்தருமா. சிறீலங்காவின் குறுங்கால நலன்களுக்கு உதவும் உலக சக்திகள் தங்களது நீண்டகால நலன்களை பிரதிபலனாகப்பெறும் என்பது வெளிப்படையான கணக்கு.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

சிறீலங்கா தங்களின் முரண்பாடுகளைப் பயன்படுத்தி தனது நலன்களுக்கான நகர்வுகளை முன்னெடுக்கின்றது என்பதை புரிந்து கொள்ளும் மேற்குலகும், இந்தியாவும், சீனாவும் பிறதரப்புக்களும் அந்த நகர்வுகளின் விளைவுகளை தங்களது அளவுகோல்களில் அளவிடுகின்றன. தங்கள் மத்தியகால - நீண்டகால நலன்களை பாதுகாப்பதற்கான பலவித முயற்சிகளையும் மேற்கொள்கின்றன.

இந்தியாவும், மேற்குலகும் தனது நடவடிக்கைகளுக்கு இயல்பாகவே இடையூறு செய்ய முற்படும் என்பதையும் சீனா கணித்தே வைத்துள்ளது. எனினும், சிங்கள தேசியவாதத்தின் வளர்ச்சியும், அதற்கு எதிரான தமிழர் ஆயுத எதிர்ப்பு இயக்கமும் தனது வாய்ப்புக்களை எப்போதும் பிரகாசமாகவே வைக்கும் என்பதையும் சீனா அறியும். மேலும், நீண்டகாலம் செல்வாக்குச் செலுத்தக் கூடிய மின்உற்பத்தி, பிற உட்கட்டுமானத்துறைகளில் சீனா முதலீடு செய்துவருகின்றது. தற்போது மன்னார் எண்ணெய் அகழ்வுப் பணிகளில் சீனாவும் ஈடுபடும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. சீனா தமிழர் தரப்புக்களுடனான தொடர்புகளை வியூக நோக்கில் தவிர்த்து வருகின்ற போதும் சிங்கள அதிகாரத்தின் பலதரப்புகளுடனும் நேச உறவுகளைப் பேணி வருகின்றது.

இலங்கைத் தீவின் இனமுரண்பாடு மிக முக்கியமானதொரு வியூக விடயம் (strategic factor) என்பதை எப்போதும் இந்தியா வெளிப்படுத்தியே வந்துள்ளது. இலங்கை இனச்சிக்கலின் தரப்புக்களான சிறீலங்கா அரசு, அரசியல் கட்சிகள், இராணுவத் தளபதிகள், தமிழ் துணைப்படைக்களப்பல தரப்புடனும் உறவாடல்களைப் புரிகின்றது. சிறீலங்காவின் பொருளாதாரத்தினை தனது வளர்ந்துவரும் பொருளாதாரத்துடன் இழுத்துப் பிணைத்து வைத்துள்ளது. எரிபொருட் களஞ்சியங்கள் முதல் பல வியூகநலன்சார் விடயங்களில் முதலீடுகளை செய்துள்ளது. மக்களின் பேராதரவு பெற்ற புலிகளின் தேசிய தலைமைப் பாத்திரமும் - இராணுவ வலுவினை பிரயோகிக்கும் ஆற்றல் கொண்ட புலிகளுடனான உறவுச்சிக்கலும் இந்தியாவிற்கு மிக முக்கிய சிக்கலான விடயமாகும். இதனால், இலங்கை விவகாரத்தில் இந்தியாவினால் முழுமையான செல்வாக்கினை செலுத்த முடியவில்லை - செலுத்த முடியாது.

மறுபுறம், மேற்குலகம் சிறீலங்காவின் அணுகுமுறையினையும், தனது சக போட்டிச்சக்திகளின் செல்வாக்குகளையும் சரியாகவே கணித்து காய்களை நகர்த்துகின்றது. போர் நிறுத்தல் உடன்பாடு மேற்குலகத்தரப்புக்கு நிறுவனமயப்பட்ட தலையீட்டு வடிவத்தினைத் தருகின்றது. புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட சூழல் நிலவினாலும் நோர்வே ஊடாக தமிழர்களின் பிரதான அரசியல், இராணுவ தலைமையின் தொடர்பாடல்கள் பேணப்படுகின்றது. கொழும்பின் மேட்டுக்குடிகளை பிரதிபலிக்கும் சிங்களத்தலைமைகள், இராணுவ - சமூக மற்றும் பொருளாதார தலைமைகளின் மீது மேற்குலகிற்குச் செல்வாக்குள்ளது. எனினும், தேசியவாத முரண்பாடு முற்றியுள்ள இலங்கைத் தீவில் பிற சக்திகளின் செல்வாக்குகளை இல்லாதொழிப்பதற்கும் முக்கிய துறைமுகங்கள் மற்றும் வியூக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை செல்வாக்கிற்குள் வைத்திருப்பதற்கும் தேவையான - தவிர்க்க முடியாத தலையீட்டினை செய்யும் எதிர்கால வாய்ப்புக்களை மேற்குலகம் கட்டியெழுப்பி வருகின்றது என்றே ஆய்வாளர்கள் நம்புகின்றனர். மனிதவுரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சிக்கல்களை மையப்படுத்திய மனிதாபிமான தலையீட்டிற்கான சாத்தியங்கள் இங்கு முக்கியமானது (கவனிக்க: சிறீலங்கா மீதும், புலிகள் மீதும் தொடர்ச்சியாக மேற்குலக ஊடகங்களும், நிறுவனங்களும் மனிதஉரிமை மீறல் பட்டியல்களை வெளியிடுகின்றன - ஐநா தலையீடு கோரப்படுகின்றது). மறுபுறம், சிங்களத்திடமுள்ள அரச அதிகாரங்கள் தமிழ் மக்களினால் வலிந்து பெறப்பட்டு - பிரயோகிக்கப்படும் சூழல் ஏற்பட்டால் இரு தரப்புக்கும் இணக்கமுள்ள தரப்பாக தன்னை மேற்கு நிலைநிறுத்தும் வாய்ப்புக்களும் உள்ளன (கவனிக்க: கிளிநொச்சிக்குப் போய்வருவதற்கு நிரந்தர உரிமை கோரும் இணைத்தலைமை நாடு

யில், நலன்கள் அச்சுறுத்தப்பட்டால், பிராந்திய சக்திகளுடன் இணைந்து இலங்கைத் தீவிலும் வலிந்த வழிகளில் செல்வாக்குச் செலுத்தவும் மேற்குத் தயங்காது என்கின்ற விவாதங்களும் நிலவுகின்றன.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

இத்தகைய சிக்கலான சர்வதேச ஆர்வத்தின் மத்தியிலேயே தமிழர்களின் ஆயுதம் தரித்த விடுதலைப் போர் இடம்பெறுகின்றது. தமிழர்கள் எதிர்கொள்வது வெறுமனே சிறீலங்காவை மட்டுமல்ல என்பதும் புரியப்படுகின்றது. இந்தப் புரிதலுடனேயே தமிழர்களின் 'வாய்ப்புக்கள்' எங்குள்ளது என்ற கேள்வி ஆராயப்படல் வேண்டும்.

அடிப்படையில் எமக்கான பிரதான நுழைவாயில்கள் எப்போதும் இந்த நடைமுறைவாத உறவு புள்ளிகளில் தமிழர்கள் செல்வாக்குச் செலுத்துவதில் தங்கியுள்ளது. இந்துசமுத்திரப் பிராந்திய கடற்பாதைகளில் தமிழீழத்தின் கிழக்குப்பகுதிக் கடற்கரைகள் அமைந்துள்ளன. திருமலை துறைமுகம் புதிய உலக அமைவில் செல்வாக்குப் பெறும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. மன்னாரின் புதிய எண்ணெய் வள கண்டுபிடிப்புக்களும், அதனை பன்னாட்டு நிறுவனங்களுக்கு கூறுபோட்டு விற்பதற்கு சிறீலங்கா எடுக்கும் முயற்சிகளும் முக்கியமானவையாகிவிட்டன. மேலும், மதவாத மற்றும் அடிப்படைவாத செல்வாக்கு அதிகரிக்கும் தென்னாசியப் பிராந்தியத்தில் ஈழத்தமிழர்களினதும், புலிகள் இயக்கத்தினதும் மதவாத அடிப்படை சாராத, சமூக முன்னேற்றத்தினை பொருளாதாரக் கொள்கைகளாகக் கொண்ட சிந்தனைகள் செல்வாக்குச் செலுத்துவது முக்கியமானதொரு சமூக நிலவரமாகும்.

இத்தகைய பலவித வாய்ப்புக்களின் மையமாக தமிழர்களின் வலுவிரிவாக்கம் காணப்படுகின்றது. முப்படைக்கட்டுமானங்களையும் கொண்டதும், தேவைப்படும் இடங்களில் அந்த வலுவினைப் பிரயோகிக்கக் கூடிய தலைமை தமிழர்களிடம் காணப்படுகின்றது. மறுபுறம், கட்டுப்பாட்டுப் பகுதியினையும், வடிவமைக்கப்பட்ட அரசகட்டுமானங்களையும் கொண்டதாக அங்கீகரிக்கப்படாத (de - facto state) தமிழீழ அரசு எழுந்து நிற்கின்றது. சர்வதேசம் இந்த தமிழீழ அரசுடன் தொடர்பாடல்களைப் புரிகின்றது. இந்த ஒழுங்குமுறை பல்வேறு போட்டியிடும் சர்வதேச சக்திகளுக்கு இலங்கைத்தீவு தொடர்பாக மாற்றுப் பாதையைக் கொடுக்கின்றது. இத்தகைய வாய்ப்புக்களினை தமிழர்க

முனைப்பு தமிழீழத் தேசிய தலைமையிடம் காணப்படுவது முக்கிய கோடிட்டுக் காட்டப்படும் கூறாகும்.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

இந்தப் பின்னணியில் தமிழீழ விடுதலைப் போர் என்பது வெல்லப்படும் அடிப்படைகளைக் கொண்டதொரு போர் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இந்த வெற்றிபெறும் 'அடிப்படைகளை பாதுகாப்பதும், வலுப்படுத்துவதுமே' இன்றுள்ள தமிழீழ மக்கள் திரளினதும், புலத்துத்தமிழ் மக்களினதும் செயற்பாடாக அமைகின்றன.

இந்தப் 'பாதுகாக்கும் - வலுப்படுத்தும்' செயற்பாடுகள் என்பது படைக் கட்டுமானங்களை வலுப்படுத்தல், கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் பாதுகாத்தல், விரிவடைய வைத்தல் என்பதுடன் நேரிடையாக தொடர்புபட்டது. மிகஅதிகளவு அதிகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுடன் சிறீலங்கா தற்போது முடுக்கிவிட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் தமிழர்களின் இந்தக் கூறினை வலுவிழக்க வைக்கும் வியூக நோக்கிலானதாகும். கட்டுப்பாட்டுப் பகுதிகளை இல்லாதொழிப்பதும், புலிகள் இயக்கத்தின் இராணுவ வலிமையை இல்லாதொழிப்பதும் இன்று சிறிலங்காவின் எதிர்கால ஆக்கிரமிப்பிற்கான இறுதியான வழியாகிவிட்டது. இது இலங்கைத்தீவினை முழுமையாகவே ஆக்கிரமித்து நிற்கும் சிறீலங்காவிற்கு 'சாவா - வாழ்வா' போர் என்று கூட விபரிக்கலாம். இங்கு சிறீலங்காவின் 'மனிதாபிமான' என்பது இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச அதிகாரம் தமிழீழத்தின் கைகளுக்குமாற்றப்படுவதல் என்று புரிந்து கொள்ளலாம்.

சர்வதேச அரங்கில் புலிகள் தலைமைதாங்கும் தமிழர்களின் 'அரசு' நிகழ்த்தும் உறவாடல்கள் இந்த 'அடிப்படைகளைப் பாதுகாத்தல் - நிலைப்படுத்தல்' நடவடிக்கையின் அடுத்த கூறாக அமைகின்றன. இந்த நடவடிக்கைகள் சர்வதேச வாய்ப்புக்களுடன் தமிழர் நலன்களைப் பிரதிபலிக்கும் உறவாடலில் ஈடுபடும். தமிழீழ நலன்களுடன் பலதரப்பு நலன்சார் அரசியலைப் பேசவைக்கும். தமிழர்களின் விடுதலைப் போரினை தமது எல்லைகளுக்குள் கட்டிப் போட முயலும் இந்தியாவுக்கும், சிங்களத்தின் வசமுள்ள சிறீலங்கா அரச அதிகாரத்தினை வலுப்படுத்துவதன் மூலம் தமது நலன்களை காக்கலாம் என்று நினைக்கும் சீனாவுக்கும், சிங

தமிழீழ தேசிய தலைமை கட்டியெழுப்பும் போரானது அடிப்படையில் ஒரு மக்கள் போராகும். மக்களின் கட்டற்ற ஆதரவுடனும், பங்குபற்றதலுடனும் இந்தப் போர் முன்னெடுக்கப் படுவதால் வெற்றி பெறும் முக்கிய அடிப்படை அங்கு வலுவாக முரசறைகின்றது!



மைத்தவாறு (state centric) தமிழர்களை கையாள முயலும் மேற்குலகும் தீவின் உண்மைகளுடன் பேசவேண்டியதான சூழல் ஏற்படும். இங்கு தமிழர் அரசு அதிகாரம் என்ற நடைமுறையை அங்கீகரிப்பதற்கான வாய்ப்புக்களை தமிழர்களின் இந்த உறவாடல் நடவடிக்கைகள் முயற்சிகளை மேற்கொள்ளும்.

இவ்வாறான வெற்றிகளுக்கான அடிப்படைகள் மீது தமிழீழ தேசியத் தலைமை கட்டியெழுப்பும் போரானது அடிப்படையில் ஒரு மக்கள் போராகும். மக்களின் கட்டற்ற ஆதரவுடனும், பங்குபற்றலுடனும் இந்தப் போர் முன்னெடுக்கப்படுவதால் வெற்றி பெறும் முக்கிய அடிப்படை அங்கு வலுவாக முரசறைகின்றது!

# புலிகளின் அசாதாரண பொறுமையும் சூழ்நிலை மாற்றமும்

ஜெயராஜ்

யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த அசாத்தியமான பொறுமை ஓரளவிற்கு நன்மையளித்துள்ளதென்றே கொள்ள முடியும் அதாவது சிறிலங்கா அரசை சர்வதேச நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் இனம் காண்பதற்கு அது பெரிதும் உதவியுள்ளது என்றால் அது மிகையாகமாட்டாது.

சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து ஒருதலைப் பட்சமாக வெளியேறியமையானது சர்வதேச சமுகத்திற்கு ஏமாற்றம் அழித்ததென்பது வெளிப்படையானது இதனைப் பல நாடுகளும் அதாவது அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் பிரதிபலிக்கவே செய்தன.

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் இதற்கு முன்னர் யுத்த நிறுத்த உடன்பாடுகளை இணக்கங்களை மேற்கொண்டிருந்ததாயினும் அவற்றிலிருந்து வெளியேறியதற்கான பழிகளைப் பெரும்பாலும் விடுதலைப் புலிகளே ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தது அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து வெளியேறும் வகையிலான நிர்ப்பந்தம் புலிகள் மீது திணிக்கப்பட்டு இதன் காரணமாக புலிகள் வெளியேறினர் ஆயினும் வெளியேறியதற்கான குற்றச்சாட்டை விடுதலைப் புலிகளே ஏற்க வேண்டியதாகியது.

> "சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து ஒருதலைப்பட்சமாக வெளியேறியமையானது சர்வதேச சமுகத்திற்கு ஏமாற்றம் அழித்ததென்பது வெளிப்படையானது இதனைப் பல நாடுகளும் அதாவது அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் பிரதிபலிக்கவே செய்தன."

ஆனால் இம்முறை விடுதலைப் புலிகள் பெரிதும் பொறுமை காத்தனர் சிறிலங்கா அரசாங்கம் பெரும் அழுத்தங்களைக் கொடுத்த போதும் புலிகள் உடன்பாட்டு விடயத்தில் நிலைப்பாட்டை மாற்றவில்லை சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகள் வெளியேறி விடுவார்கள் என எண்ணிக் கொடுத்த அழுத்தங்களின் போதும் புலிகள் உடன்பாட்டு விடயத்தில் அக்கறையாகவே இருந்தனர்.

இதற்கு மூன்று காரணங்கள் அடிப்படையாகவே இருந்தன. இது சர்வதேச உடன்படிக்கையான படியால் ஒருதலைப் பட்சமாக இதனை முறித்துக் கொள்ள விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. இனப் பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக கொள்ளத்தக்கதாகையால் இதில் அக்கறை காட்டினர். கடந்த காலத்தைப் போன்று யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து வெளியேறியதற்கான குற்றச்சாட்டை தவிர்த்துக் கொள்ள விரும்பினர்.

விடுதலைப் புலிகளின் இத்தகைய நிலைப்பாடானது குறிப்பிடத்தக்க அளவிற்கு அவர்களுக்கு வெற்றிநிலைத் தேடிக்



கொடுத்துள்ளது அதுவே இன்று போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து சிறிலங்கா வெளியேறியது தொடர்பாக சர்வதேசம் வெளிப்படுத்தி வரும் அதிருப்தியும் இனப் பிரச்சினை விடயத்தில் சர்வதேசம் வெளிப்படுத்தி வரும் உணர்வுகளுமாகும்.

யுத்த நிறுத்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட பாரிய மனித உரிமை மீறல்களும் தமிழர் தாயகத்தின் மீது மேற்கொண்டதான பாரிய படைநடவடிக்கைகளும் பெரும் மனித அழிவுகளும் சிறிலங்கா அரசு மனித உரிமை விடயத்தில் மட்டுமல்ல இன ரீதியிலான வகையிலும் ஒடுக்கு முறைகளை மேற்கொண்டு வந்தனை உறுதி செய்வதாகியது. யுத்த நிறுத்த உடன்பாட்டுக் காலத்தில் சில விடயங்கள் சர்வதேச அமைப்புகளினாலும் பல நாடுகளினாலும் அறியப்பட்டவையாக இருந்தன இது குறித்து தமது அக்கறையையும் அவை வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ அன்றி அதன் அதிகாரிகளோ இவற்றைப் பொருட்படுத்தவில்லை ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசிற்கு தமது பிரதேசத்திற்குள் எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரம் இருப்பதாகவே அது கூறிக்கொண்டது அவ்வாறே செயற்பட்டும் வந்தது.

குறிப்பாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சிறிலங்கா அரசின் மீது பாரிய குற்றச் சாட்டுக்களை கூறிய போது அதனை ஏற்றுக்கொள்ளவோ அவற்றை சீர் செய்யவோ அரசாங்கம் தயாராக இருக்கவில்லை மாறாக குற்றச்சாட்டுக்களை முன் வைத்த அமைப்புகளையும் உயர் அதிகாரிகளையும் சாடுவதிலும் குற்றம் சாடுவதிலுமே அது அக்கறை காட்டியது.

ஒரு வகையில் பார்க்கப் போனால் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவைகளை தரக்குறைவாக விமர்சிக்கவும் தகுதியற்றவர்கள் எனக் கூறவும் கூட அது தயங்கவில்லை இதனால் சிறிலங்கா அரசு மீது மனித உரிமை அமைப்புக்கள் சுமத்தி வந்த குற்றச்சாட்டுக்கள் படிப்படியாக மேற்கு நாடுகளினாலும் சுமத்தப்பட்டன.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இவற்றைப் பொருட்படுத்தாது மட்டுமல்ல யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து வெளியேறும் தீர்மானத்தையும் மேற்கொண்டது சிறிலங்கா அரசின் இத் தீர்மானத்திற்கு வலுவான அடிப்படையான காரணிகள் மூன்று இருந்தன.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்துவிட முடியும் என்ற நம்

சக்திகளின ஆதரவு அரசிற்கு அவசியமானதாக இருந்தமை. சர்வதேச நாடுகள் தொடர்பான புரிதலும் சர்வதேச அமைப்புகளின் பலவீனமும் ஆகும். சுருக்கமாகக் கூறுவதானால் கிழக்கில் கிடைக்கப்பெற்றதாகக் கருதும் இராணுவ வெற்றிகள் இராணுவத் தீர்விலும் வரவு செலவுத் திட்டம் உட்பட பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் தேவைப்பட்ட பௌத்த - சிங்கள அடிப்படைவாத சக்திகளின் ஆதரவும் அவசியமானதாக இருந்தன.

மற்றொரு புறத்தில் சர்வதேச நாடுகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பேசினாலும் தொடர்ந்து வழங்கி வந்த பொருளாதார மற்றும் இராணுவ உதவிகளால் மனித உரிமை விடயம் முக்கியம் வாய்ந்த தொன்றாக சிறிலங்கா அரசால் கொள்ளப்படவில்லை.

இதே சமயம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவரினும் அவர்களின் தீர்மானங்கள் போன்று அழுத்தங்களுடன் கூடியவையாக இருக்கப் போவதில்லை என்பது சிறிலங்கா அரசின் அபிப்பிராயமாகவும் இருந்தது.

ஆகையினால் அமைப்புக்களின் தீர்மானங்கள் பற்றி கவலைப்படவோ அது குறித்து அக்கறை கொள்ளவோ அது தயாராக இருக்கவில்லை மேலும் இத் தீர்மானங்களை சில நாடுகளின் ஆதரவுடன் முறியடித்து விடலாம் எனபது அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

சிறிலங்கா அரசின் இத்தகைய தீர்மானங்களே இறுதியில் யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து அது வெளியேறுவதற்கும் அடிப்படையாகியது இத்தகைய தீர்மானமானது சர்வதேச நாடுகளின் நிலைப்பாட்டில் சிறிதாயினும் தாக்கத்தையோ மாற்றத்தை ஏற்படுத்தும் என்றோ இது ஒரு அதிருப்திக்குரிய விடயமாக மாறும் என்றோ சிறிலங்கா அரசு எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து வெளியேறியமையானது சர்வதேச நாடுகளின் குறிப்பாக சிறிலங்காவிற்கு உதவிகளை வழங்கி வரும் இணைத் தலைமை நாடுகளுக்கு அதிருப்தியைத் தோற்றுவிப்பதாக இருந்தது சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கான கதவுகளை அடைத்து விட்டதாக அவை கருதின.

சிறிலங்கா அரசின் மனித உரிமை

கொண்டிருந்த சர்வதேச நாடுகள் யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து சிறிலங்கா அரசு வெளியேறியதோடு இராணுவத் தீர்வில் தீவிரத்தை வெளிக்காட்டத் தொடங்கியதும் தமது நிலைப்பாட்டையும் அதிருப்தியையும் வெளிக்காட்டத் தொடங்கின அது மட்டுமன்றி இதுவரை வெளிக்காட்டாதவாறு தமது செயற்பாட்டையும் வெளிக்காட்டின.

இதில் குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, போன்ற நாடுகள் சிறிலங்காவிற்கு படைக்கல உதவிகள் வழங்குவதில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தன இதில் பிரிட்டன் எத்தகைய படைத்துறை உதவிகளும் வழங்கப்பட மாட்டாது எனப் பாராளுமன்றத்தில் தெரிவித்தது அமெரிக்க சனாதிபதி ஆயுதங்களை வழங்குவதைக் கட்டுப்படுத்தும் ஆவணத்தில் கையொப்பம் இட்டார்.

இதற்கு முன்னதாகவே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஜேர்மனி, சுவீடன், போன்றவை சிறிலங்காவிற்கான உதவிகளை மட்டுப்படுத்தியிருந்ததோடு மனித உரிமை விடயத்திலும் இனப்பிரச்சினை தொடர்பான அரசின் அணுகு முறையிலும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தன.

இதே போன்று சில இராசதந்திர ரீதியிலான நடவடிக்கைகளும் வெளிக்காட்டப்பட்டன எடுத்துக்காட்டாக சிறிலங்காவின் 60 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நிராகரித்திருந்தார்.

அதாவது சிறிலங்காவுடன் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் தன்னை இணைத்து அடையாளப்படுத்திக் கொள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விரும்பாமையே இதற்குக் காரணமாகும்.

அத்தோடு ஐ.நா. மனித உரிமை அமைப்புக்கள் போன்றவையும் சிறிலங்கா குறித்து பொறுமை இழக்கும் கட்டத்தை அடைந்துள்ளன எனக் கொள்ளும் அளவிற்கு நிலைமை மாற்றியிருந்தது அவ்வாறு இல்லாது விட்டால் ஐ.நா மனித உரிமை அமைப்பின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் குறித்து சிறிலங்காவின் பிரதிநிதியான தயான் ஜெயத்திலக கூறியவை கூற்று முட்டாள் தனமானது என ஐ.நா மனித உரிமை அமைப்பின் இயக்குனர் சாடியிருக்கமாட்டார்.

இந்த வகையில் பார்க்கையில் சர்வதேச அமைப்புகளும் பல சர்வதேச நாடு

கொண்டுள்ளன என்பது வெளிப்பட்டது இதில் ஒன்று சிறிலங்கா அரசாங்கம் இன ரீதியிலான ஒடுக்கு முறையை மேற் கொண்டுள்ளது என்பது இரண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இராணுவத் தீர்வையே அது முன்வைத்துள்ளது என்பது.

இந்நிலையிலும் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத் திற்கு இதுவரை ஆதரவு தெரிவிக்காது விடினும் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தின் நியாயப்பாட்டை ஓரள வேனும் புரிந்து கொள்ளவும் தலைப்பட்டுள் ளன எனக் கூறலாம் நம்பலாம்.

இதேவேளை சர்வதேச நாடுகளும் அமைப்புகளும் சிறிலங்கா அரசுடனான உறவையோ அன்றி நெருக்கத்தையோ கைவிட்டு விட்டதாகவோ சிறிலங்காவைப் புறம்தள்ளி விட்டதாகவோ இங்கு கொள் வதற்கும் இல்லை.

பல நாடுகள் தமிழ் மக்களின் பிரச்சி னையை முற்றாகவே புறம்தள்ளி விட்டு சிறிலங்காவிற்கு இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளன என்பதும் சில நாடுகள் இனப்பிரச்சினை மற்றும் மனித உரிமை விவகாரம் போன்ற விவகாரத்தில் அதிருப்தியையும் கவலை யையும் வெளிப்படுத்தும் போது தமது பூகோள பிராந்திய நலன்களை முனைப்புப் படுத்தி சிறிலங்காவுடன் நெருக்கமாகவும் இருக்கவும் செய்கின்றன என்பதும் யதார்த் தமானதே.

தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை கறுப்பின மக்களின் ஆட்சி நிலை நிறுத்தப் படுவதற்கு முன்னர் சிறுபான்மை இன வெள்ளையர் அரசு பாரிய இன ஒடுக்கு

> தென்னாபிரிக்கா கறுப்பின மக்களின் போராட்டம் நியாயப்பாடான தென்பதும் இன ஒடுக்குமுறைக்கு எதிரானது என்பதும் உலகால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களின் விடுதலை தவிர்க்கப்பட முடியாததொன்றாகியது இதற்காக தென்னாபிரிக்கா கறுப்பின மக்கள் பெரும் தியாகங்களை செய்யவேண்டியதாகவே இருந்தது.

முறையில் ஈடுபடுகின்றது என உலகால் அறியப்பட்டே இருந்தது பல நாடுகள் கண் டிக்கவும் செய்தன இருப்பினும் பல நாடு கள் அதனுடன் இராஜீக உறவுகளைக் கொண்டே இருந்தன அதற்குச் சில உதவி களையும் வழங்கவுமே செய்தன.

ஆனால் தென்னாபிரிக்கா கறுப்பின மக்களின் போராட்டம் நியாயப்பாடான தென்பதும் இன ஒடுக்குமுறைக்கு எதிரா னது என்பதும் உலகால் ஏற்றுக் கொள் ளப்பட்ட போது தென்னாபிரிக்காவில் கறுப் பின மக்களின் விடுதலை தவிர்க்கப்பட முடியாததொன்றாகியது இதற்காக தென் னாபிரிக்கா கறுப்பின மக்கள் பெரும் தியா கங்களை செய்யவேண்டியதாகவே இருந் தது.

இதனை ஒத்ததானதொரு வரலாறு உருவாகும் வரையிலான முனைப்புக் களை தமிழ் மக்கள் தற்பொழுது மேற் கொள்ளுதல் வேண்டும் அதாவது சர்வதேச ரீதியில் தற்பொழுது உருவாக்கியுள்ள சாத கமான சூழ்நிலையை அதாவது எமக்கு பூரண ஆதரவு என்ற நிலை இல்லாது விடினும் மாறிவரும் சாதகமான சூழலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதில் முக்கியமான பாத்திரத்தை உல கின் பல பாகங்களிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் முன்னெடுத்தல் வேண்டும் ஏனெனில் அவற்றை முன் னெடுப்பதில் அங்குள்ள மக்களுக்கு தடை கள் எவையும் இருப்பதாக இல்லை எமது நியாயப்பாட்டை எம் மீதான அடக்கு முறையை சனநாயக முறைக்குள் உட்பட்ட விதத்திலேயே அவர்களால் வெளிக் கொணரவே முடியும் அதற்கான வாய்ப்புக் கள் அங்கு மறுக்கப்படுவதாக இல்லை.

■



# ஊடகத்துறைக்கு சிறிலங்கா அரசே அச்சுறுத்தல்

'கருத்து ஒருவனைப் பற்றிக் கொண் டால் அவனை எந்த ஒரு சக்தியாலும் ஒன்றும் செய்ய முடியாது' என்பது கால் மாக்ஸின் கருத்து மக்களிடத்தில் கருத்துக் களை காவிச் செல்பவை ஊடகங்களே ஆட்சியாளர்களின் அநீதிகளை மக்கள் முன் கொண்டு செல்லும் போது ஊடகங் கள் தாக்கப்படுவதோடு சில ஊடகவிய லாளர்கள் கடத்தப்பட்டு பின்னர் படு கொலை செய்யப்படுகின்றனர் இதன் மூலம் ஆட்சியாளர்கள் மேலும் மேலும் பல குற்றங்களை மக்கள் முன் செய்கின் றனர். ஒரு ஊடகவியலாளன் துணிந்து செயற்படுவானாயின் அவனைக் கொல்வ தாலோ அல்லது தாக்குவதாலோ இத் தகைய செயல்களை செய்ய முயல்பவர் களுக்கு இதனால் எதுவித பயனும் ஏற் பட்டு விடப்போவதில்லை ஒரு ஊடகவிய லாளனின் பேனா சாய்கின்ற போது அதை ஏந்த இன்னொரு ஊடகவியலாளன் நிச்ச யம் வந்து கொண்டேயிருப்பான்.

உலகத்தில் இன்னொரு ஊடகத்துறை மிக மோசமாகப் பாதிப்படைந்த நாடு களின் தரவரிசையில் சிறிலங்கா மூன்றா வது இடத்திற்கு முன்னேறியுள்ளது சென்ற வருடத்தில் சிறிலங்காவில் மட்டும் ஏழு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ள தாக ஜெனிவாவைத் தளமாகக் கொண்டி யங்கும் 'பிரஸ் எம்பம் கப்பெய்ன்' என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

சிறிலங்காவில் உக்கிரமடைந்து வரும் சிவில் யுத்தத்தின் காரணமாக 2006 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நான்கு ஊடக வியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு சென்ற வருடத்தில் ஏழு ஊடகவியலா ளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 18 மாதங்களில் 18 ஊடகவியலாளர்கள் படு கொலை செய்யப்பட்டுள்ளனர் பத்திரிகை நிறுவனம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள் ளது வானொலி சேவை ஒன்று இடை நிறுத்தப்பட்டுள்ளது தமிழீழத்தில் தமிழ் மக்களின் குரலாக சிறிலங்கா அரசு தமிழ் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் மனிதப் பேரவலங்களையும் அட்டூழியங்களையும் உடனுக்குடன் உலகுக்குத் தெரிவித்து வந்த புலிகளின் குரல் மீது சிறிலங்கா வான்படை தாக்குதல்களை மேற்கொண்டு அதனை அழித்துள்ளது இதில் ஊடகவி யாளர் தொழில்நுட்பவியலாளர் என மூவர் கொல்லப்பட்டனர்.

2006 ஆம் ஆண்டு நான்கு தமிழ் ஊடகவியலாளர்களும் 2007 ஆம் ஆண்டு ஏழு தமிழ் ஊடகவியலாளர்களுமாக மொத்தம் 11 தமிழ் ஊடகவியலாளர்கள் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட செயற்பாடு களினால் கொல்லப்பட்டுள்ளனர் என்பது இங்கு முக்கியமாக சுட்டிக்காட்டத் தக்க

படி சென்ற வருடத்தில் உலகத்தில் 27 நாடுகளில் 110 ஊடகவியலாளர்கள் கொல் லப்பட்டனர் குறைந்தது 2/3 பங்கு சென்ற வருடத்தில் முரண்பாடு சண்டை ஏற்படும் பிரதேசங்களான ஈரான், சோமாலியா, சிறி லங்கா, ஆப்கானிஸ்தான், மற்றும் கொங் கோ குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டை விட 2007 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட ஊடகவியராளர் களின் தொகை 14 சதவீதத்தினால் அதி கரித்துள்ளது. நியாயமான உண்மையான தகவல்களின் படி ஊடகத்துறை மோச மடைந்த நாடான ஈராக்கில் சென்ற வரு டத்தில் 50 ஊடகவியராளர்கள் கொல்லப் பட்டுள்ளனர் 2003 ஆம் ஆண்டு மார்ச்சி லிருந்து இன்றுவரை குறைந்தது 250 ஊடக வியராளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் ஈராக்கில் ஊடகப் பணியில் ஈடுபடுபவர் களுக்கான பாதுகாப்பு நிலைமைகள் சீர ழிந்து இருப்பதையே இந்நிலைமை காட்டு கின்றது.

2006 ஆம் ஆண்டைப் போன்று சென்ற வருடத்திலும் சோமாலியாவில் எட்டு ஊட கவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகவியலாளன் பல சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து உயிரை பணயம் வைத்து உண்மைத் தகவல்களை மக்களுக்கு வழங்குவதற் காக உலகின் மூலை முடுக்கெல்லாம் அலைந்து திரிகின்றான் இவ்வாறு உன் னதமான தொழிலைச் செய்பவர்களின் உயிர்கள் வீணாகப் பறிக்கப்படுகின்றன.

ஈராக் சோமாலியா போன்ற நாடு களைப் பொறுத்தவரை அங்கு பல்வேறு இயக்கங்கள் இயங்குகின்றன அங்குள்ள மக்களின் உயிருக்கு எந்நேரத்திலும் எந்தப்பிரச்சினையும் ஏற்படலாம் அது மட்டுமன்றி மேற்குலகு சார்ந்த கைப் பொம்மையான அரசாங்கங்களே ஆட்சி யில் இருக்கின்றன.

சீரான நிர்வாகம் அங்கில்லை போன்ற பிரச்சினைகள் இருநாடுகளிலும் இருக் கின்றன. ஆனால் சிறிலங்காவைப்பொறு த்த வரை ஆட்சிக்கு வரும் அரசாலே ஊட கம் சார்ந்த பிரச்சினைகள் உருவாக் கப்படுகின்றன காலங்காலமாக இப்பிரச் சினை இருந்து வருகின்றது இதற்கு இது வரை எந்தப் பரிகாரமும் கண்டதாக வர லாறு இல்லை இதற்கு உதாரணமாக அண்மையில் நடந்த இரு சம்பவங்களைக் குறிப்பிடலாம். மேர்வின் சில்வா பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனம் ஒளிபரப்புச் செய்யாமையினால் அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையி லான குழுவினர் செய்திப் பணிப்பாளரைத் தாக்கியுள்ளனர். இது சம்பந்தமாக சிறி

லங்கா அரசு எதுவித நடவடிக்கைகளை யும் இதுவரை எடுக்கவில்லை இச்சம்ப வத்தை ஊடக அமைப்புக்கள் இலங்கை வரலாற்றில் கறைபடிந்த சம்பவம் என வர்ணித்துள்ளதுடன் அவருக்கெதிராக அரசு நடவடிக்கை எடுக்காது அவரைப் பாதுகாப்பதாகவும் சாடியுள்ளன.

அற்றையது புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை நம் மத்தியில் பணியாற்றும் சில சில பத்திரிகையாளர் களால் மேற்கொள்ளும் தேசத்துரோகம் பின்னடையச் செய்கின்றது என அரச சார்பு பத்திரிகையான 'தினமின' வுக்கு சிறிலங்கா இராணுவத் தளபதி தெரிவித் துள்ளார். இவரது கருத்துக்கு அனைத் துலக செய்திப்பாதுகாப்பு நிறுவனம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது இது தொடர் பாக இந் நிறுவனத்தின் பணிப்பாளர் ரொட்னிபிரண்டர் கூறுகையில்.

"இராணுவத் தளபதியின் கூற்றானது ஊடகவியலாளர்களின் மீதான அடக்கு முறை நடவடிக்கைகளை எதிர்காலத்தில் ஊக்குவிப்பதாக அமைந்திருக்கின்றது மனிதனின் அடிப்படை உரிமைகளில் கருத்துச் சுதந்திரமும் ஒன்று அனைத்து சமூகத்தினது கருத்துக்களையும் வியூகங் களையும் வெளிக்கொணர்வது ஒரு ஊடக வியலாளனின் கடமை யுத்த வலையங் களில் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்புப் போன்று பத்திரிகையாளர் களுக்கு வழங்க வேண்டும் என்பது ஜெனீ வாப் பிரகடனங்களில் ஒன்று" எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச அதிகாரிகளால் நேரடியாக ஊட கவியலாளர்கள் மீது அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன இந்நிலையில் பல் வேறு ஊடகவியலாளர்கள் புலம்பெயர்ந் தும் பலர் உயிராபத்துகளுக்கு மத்தியில் தமது பணிகளை மேற்கொண்டும் வருகின் றனர்.

2004 ஆம் ஆண்டு பல நாடுகள் ஒன்றி ணைந்து ஊடகவியலாளர்களைப் பாது காப்பதற்காக ஜெனிவாவை தலைமைப் பீடமாகக் கொண்டு இயங்குகின்றன. ஊடகவியலாளர்களுக்குச் சட்டரீதியாக பாதுகாப்பு அளித்து முரண்பாடுள்ள பாது காப்பற்ற சண்டை நடக்கும் பிரதேசங் களில் இருந்து இவர்களைப் பாதுகாப்பதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

இவ்வமைப்பு தோற்றம் பெற்ற பிறகும் படுகொலைகள் நடப்பது கவலைக்குரிய விடயமாகும் இந்நிலைமை நீடிக்குமா யின் ஊடகவியலாளரின் உயிருக்கு எந் நேரத்திலும் எதுவும் ஏற்படலாம் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

# படுகொலை வெறியாட்டத்தின் உச்சத்தில் சிறிலங்கா அரசு

இ.சசிக்குமார்.



2007 ஆம் ஆண்டு வன்னிப்பெரு நிலப்பரப்பில் வாழும் மக்கள் மீது பலதடவைகள் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொண்டு 51 இற்கும் மேற்பட்டோரைப் படுகொலை செய்தும் 126 இற்கும் மேற்பட்டோரைப் படுகாயங்களுக்கு உள்ளாக்கியும் சிறிலங்கா அரசு தனது படுகொலை வெறியாட்டத்தின் உச்சத்தை வெளிப்படுத்தியுள்ளது. இவற்றை விட வன்னி பெருநிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலும் ஆழ ஊடுருவும் அணிகள் கிளைமோர்த் தாக்குதல்களை மேற்கொண்டதன் மூலம் 30இற்கும் மேற்பட்ட பொதுமக்களைப் படுகொலை செய்து 28 இற்கு மேற்பட்டோ[illegible]

இவை தாக்குதல்களை அடுத்து வெளியான தகவல்களின் அடிப்படையில் படுகொலையானோரின் எண்ணிக்கைகளோ இவற்றைவிட கிழக்கை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையின் போது 300 இற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். கடந்த 05.09.2007 ஆம் திகதி சிறிலங்காப் பாராளுமன்றத்தில் கொலை செய்யப்பட்ட மக்களின் பெயர் விபரங்களுடன் அவர் இதனை நிரூபித்திருந்தார். சிறிலங்காவின் தேசநிர்மாண அமைச்சர் [illegible]

படையினரால் எந்தவொரு பொது மக்களும் கொல்லப்படவில்லை என்பதற்காக பாராட்டுத் தெரிவிப்பதற்காகக் கூறியதற்குப் பதிலளிக்கும் போதே சம்பந்தன் இத்தகவலை திட்டவட்டமாக நிரூபித்திருந்தார். இந்த 300 பொதுமக்களும் சிறிலங்காவின் விமானப்படையினரின் தாக்குதல்களிலும் மற்றும் எறிகணைத் தாக்குதல் பல்குழல் வெடிகணைத் தாக்குதல்களிலுமே கொல்லப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவற்றை விட நாட்டின் பல்வேறு பகுதி[illegible]

னோரை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் படுகொலை செய்துள்ளனர்.

இவை சிறிலங்கா அரசின் கொலை வெறியாட்டங்களை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன. இனப்பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வைக்காண முனைவதாகக் கூறி சர்வதேசத்தை ஏமாற்றிவரும் அரசாங்கம் அத்தீர்வானது தமிழினத்தை முற்றாக அழிப்பதனூடாகவே காணப்படுமென்பதை அதன் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்துகின்றது.

2007 ஆம் ஆண்டு பிறந்த மறுநாளன்றே மன்னார் இலுப்பைக்கடவை படகுத்துறை மக்கள் குடியிருப்புக்கள் மீது

இல்லை எனவும் அவர் உறுதி செய்திருந்தார்.

ஆனால் இதைத் தொடர்ந்தும் அரசின் இனவெறித் தாக்குதல்கள் தீவிரமடைந்ததே தவிர குறைவடையவில்லை. இவ்வாறு தொடர்ந்த தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தன. அதேவேளை சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற போர் விதிமுறைகளையும் அரசு மதித்து நடக்கத் தவறியது. இதனால் சிறுவர் இல்லங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், இடம்பெயர் குடியிருப்புக்கள் என மக்கள் பெருமளவாக ஒன்றுகூடும் இடங்களை இலக்கு வைத்து ஈவு இரக்கமற்ற தாக்குதல்களை நடத்தவும் அரசாங்கம்

தயங்கவில்லை. இதன் ஒரு கட்டமாக கடந்த 19.03.2007 அன்று வடமராட்சிக் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து சுண்டிக்குளத்தில் இயங்கி வந்த பாடசாலையின் மீது பாடசாலை ஆரம்பமாகி சிறிது நேரத்தில் இரண்டு கிபிர் விமானங்கள் மூலம் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய பலகுண்டுகள் வீசப்பட்டன. இதில் ஆசிரியர் ஒருவரும் 8 மாணவர்களும் படுகாயமடைந்திருந்தனர். அத்தோடு நெடுங்கேணியில் ஒரு பாடசாலை கட்டடங்களும் தாக்குதலில் அழிக்கப்பட்டன. தாக்குதல்கள் பகல்வேளைகளில் மட்டுமன்றி இரவு வேளைகளிலும் தீவிரமடைந்தன. நாள் ஒன்றுக்கு மூன்றிற்கும் மேற்பட்ட தடவைகள் பறப்புக்களை மேற்கொண்டு குண்டுத்



ஒளிப்படங்கள்: சிறிலங்கா அரசின் மக்கள் நோக்கி விமானக்குண்டு வீச்சின்போது மக்கள் படும் அவலங்கள்


கோரத் தாக்குதலை நடத்தி பதின்நான்கு பேரைப் படுகொலை செய்ததுடன் சிறிலங்கா அரசின் அவ்வாண்டு படுகொலை வெறியாட்டம் ஆரம்பமானது. இந்தத் தாக்குதலானது அரச பயங்கரவாத செயல். இத்தப்பயங்கரவாதச் செயற்பாடுகளை சர்வதேசம் புரிந்து கொண்டு சிறிலங்கா அரசை வழிக்குக் கொண்டு வரவேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இராயப்பு யோசப் ஆண்டகை உலகிற்கு வேண்டுகோள்விடுத்திருந்தார். அத்தோடு தாக்குதல் நடத்தப்பட்ட இடம் முற்றுமுழுதாக மக்கள் வாழ்கின்ற குடிசைகளே எனவும் இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்களோ தளங்களோ எவையும்

"இனப்பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வைக்காண முனைவதாகக் கூறி சர்வதேசத்தை ஏமாற்றிவரும் அரசாங்கம் அத்தீர்வானது தமிழினத்தை முற்றாக அழிப்பதனூடாகவே காணப்படு மென்பதை அதன் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்துகின்றது.

தாக்குதல்களை நடாத்தின. இந்தத்தாக்குதல்கள் உக்கிரமடைந்ததன் விளைவாக 20.09.2007 ஆம் திகதியை அண்டிய காலப்பகுதியில் தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளே முற்றாக முடங்கும் நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கல்விச் சமூகத்தினர் அரசின் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்தனர். ஏனெனில் அக்காலப்பகுதியானது முற்றுமுழுதாக மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் வகையில் பாடசாலைகளையும் அவற்றை அண்டிய பகுதிகளையும் இலக்கு வைத்தே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இக்காலப்பகுதியில் மக்களின் தொழிற்[illegible]





நுழைகளை முடக்கும் வகையிலும் தாக்குதல் நடத்தப்பட்டது. தமிழ்மக்களின் பொருளாதார வளங்களில் ஒன்றான கடல் வளத்தை முடக்குவதற்காக அம்மக்களின் வாழ்விடங்களையும் தொழில் உபகரணங்களையும் விமானத்தாக்குதல் மூலம் அழித்து துவசம் செய்தது. அத்தோடு மீனவர்களையும் படுகொலை செய்து பலரைப் படுகாயப்படுத்தியும் மேலும் பலரை அங்கவீனர்களாகவும் ஆக்கியது.

இவ்வாறான தாக்குதல்களுக்காக வடமராட்சிக் கிழக்குத் தொடக்கம் நாயாறு வரையான கடற்கரைப் பகுதியைத் தெரிவு செய்து ஆங்காங்கே நெருக்கமாகக் குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்த மக்களின் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன. இதில் முல்லைத்தீவு அளம்பில் பகுதி மக்களின் குடியிருப்புக்கள் அதிகடவைகள் தாக்குதல்களுக்கு இலக்காகின. இதன் காரணமாக அக்குடியிருப்புக்களை விட்டு மக்கள் வெளியேறி வீதிகளிலும் மரநிழல்களிலும் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தாக்குதலின் போது மக்கள் அதிகளவில் கொல்லப்பட வேண்டும் என்பதற்காக பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய விமானக் குண்டுகளைக் கொள்வனவு செய்து தொடர்ந்தும் மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் மக்களின் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன. மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். விசுவமடு, புதுக்குடியிருப்பு, தருமபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து இவ்வாறு இலக்குத் தவறாத தாக்குதல்களில் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியதோடு பலர் அங்கவீனர்களாகவும் ஆக்கப்பட்டனர். தருமபுரம் பகுதியில் நடத்தப்பட்ட

> "தாக்குதலின் போது மக்கள் அதிகளவில் கொல்லப்பட வேண்டும் என்பதற்காக பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய விமானக் குண்டுகளைக் கொள்வனவு செய்து தொடர்ந்தும் மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் மக்களின் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன. மக்களும் படுகொலை செய்யப்பட்டனர்."

லொன்றில் குடும்பமொன்று முற்றாக அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த 27.11.2007 ஆம் திகதி புலிகளின் குரல் வானொலி நிலையம் மீது தாக்குதலை நடத்தி ஒன்பது பொதுமக்களை ஒரே நேரத்தில் படுகொலை செய்திருந்தது. இதனைத் தொடர்ந்து இன்று வரையும் சிறிலங்கா அரசின் விமானத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இது ஒரு புறமிருக்க இவ்வாண்டு அரசாங்கம் தனது ஆழ ஊடுருவும் அணிகளை ஏவிவிட்டும் தமிழ்மக்கள் மீதான படுகொலை வெறியாட்டத்தை தீவிரப்படுத்தியது.

இதனூடாக நோயாளர் காவுவண்டிகள் மனிதாபிமானப் பணியாளர்கள் அரச திணைக்களத்தினர் என சகல தரப்பினர் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 05.01.2007 ஆம் திகதி வவுனியா நெடுங்கேணி [illegible]



நடத்தப்பட்டது. இதில் ஒரு அதிகாரி பலியாகினர். இருவர் காயமடைந்தனர். தொடர்ந்து மடு விளாத்திக் குளம் பாடசாலை அதிபர் மற்றும் மடு கோட்டக்கல்வி அதிகாரிகளின் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்கள் இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

05.04.2007 ஆம் திகதி மன்னார் பாலம்பிட்டிப் பகுதியில் தாக்குதல் நடத்தி கணவன் மனைவி இருவரைப் படுகொலை செய்தனர். 24.05.2007 அன்று மூன்று முறிப்புப் பகுதியில் தாக்குதல் நடத்தி சகோதரன் சகோதரி ஆகிய இருவரையும் படுகொலை செய்தனர். இவ்வாறு தொடர்ந்து பல பகு









திகதியன்று ஐயன்கன் குளம் அ.த.க. பாடசாலை மாணவர்கள் பயணித்த நோயாளர் காவு வண்டிமீதும் தாக்குதல் நடத்தப்பட்டு 9 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவற்றைவிட கடல்வழியாகவும் கரையோரங்களை அண்டிய பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நாயாற்றுப்பகுதியில் சிறிலங்காக் கடற்படையினரின் தாக்குதலில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்திருந்தார். அளம்பில், முல்லைத்தீவு, வடமராட்சிக் கிழக்கு ஆகிய பகுதிகளில் இவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்டு மீனவர்களின் தொழில் உபகரணங்களும் அழிக்கப்பட்டன. மீனவர்கள் சிலரும் காணாமற் போயினர்.

இவ்வாறாக 2007 ஆம் ஆண்டு முழுவதும் சிறிலங்கா அரசால் தமிழினப் படுகொலை ஆண்டாகவே கடைப்பிடிக்கப்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது.

இதேபோன்று 2008ம் ஆண்டும் இவ்வாறான ஆண்டாகவே அமையக் கூடும் என்பதை முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் 04.01.2008 ஆம் நாள் நடத்திய விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலின் மூலம் வெளிப்படையாக உறுதி செய்துள்ளது.

தொடர்ந்து இவ்வாறு தாக்குதல்களை நடத்தி [illegible]களைக் கொன்றொழிப்பதன் மூலம் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்துவிட முடியுமென்பது சிங்களப் பேரினவாதிகளின் எதிர்பார்ப்பாகும். நினைத்திருக்கலாம். ஆனால் இத்தாக்குதல் சம்பவங்கள் மக்கள் மனங்களில் போரில் உத்வேகத்தையும் தொடரும் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும் உத்திகளையும் கற்பிப்பதாகவே அமைந்தன. எனவே பிறப்பெடுத்துள்ள 2008 ஆம் ஆண்டு உத்வேகம் பெறும் விடுதலைப் போரின் போது எதிரியின் எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாகவே மக்கள் உருப்பெற்றுள்ளனர்.

தமிழ் ஆவணக்காப்பகம்

# கிழக்கு: மகிந்தவிற்கு

"சிங்கள இராணுவம் நாம் விரித்த வலைக்குள் வகையாக விழுந்து, பெருந்தொகையில் படையினரை முடக்கி, ஆளில்லாப் பிரதேசங்களை இன்று ஆட்சிபுரிகிறது, என்ற பொறியிற் சிங்களம் மீளமுடியாதவாறு மீளவும் விழுந்திருக்கிறது. இதன் பாரதூரமான விளைவுகளை அது விரைவிற் சந்தித்தே ஆகவேண்டிவரும்."

(2007 மாவீரர் நாள் உரையில் கிழக்கு நிலைபற்றித் தேசியத் தலைவர்)

நவம்பர் 22 ஆம் திகதி அம்பாறை வக்குமுட்டியா சிறப்பு அதிரடிப்படைத் தளத்தின் வெளிக்காவல் நிலைமீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் கிழக்கு பற்றி அவதானிகளுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் தீர்த்துவைத்துள்ளது.

அங்கே விடுதலைப் புலிகளின் அணிகள் கட்டமைப்போடு திட்டமிட்டுச் செயற்படுகின்றனர் என்ற யதார்த்தம் ஒருவாரத்திற்குள் அம்பாறையில் மட்டுமே மூன்று தடவை தாக்குதல் நடத்தப்பட்டதினால் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாத நடுப்பகுதியில் அரச படைகளால் புறக்கணிக்க முடியாத பல படைத்துறைச் செயற்பாடுகளில் புலிகள் ஈடுபட்டு வருகின்றார்கள். ஒக்டோபர் 15ம் திகதி அம்பாந்தோட்டை மொனராகலை எல்லைப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்காப் படையினரின் சிறிய முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலோடு அங்குள்ள பாதுகாப்பு நிலவரம் பற்றிய கவலைகள் தென்னிலங்கையின் பல மட்டங்களிலும் எழத் தொடங்கின.

தொடர்ச்சியாக அதேமாதம் 25ம் திகதி கடற்படையினரை பயணித்த பஸ் வண்டியின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். அப்படியொரு தாக்குதலே நடக்கவில்லை என்றும் அந்த வண்டியின் சில்லுறை வெடித்ததால் ஏற்பட்ட சத்தத்தால் எச்சரிக்கையடைந்த கடற்படையினர் சூடு நடத்திய சம்பவமே அது என்றும் சிறிலங்கா படைத்தரப்பு மறுத்தது. தாக்குதல் செய்தியை வெளியிட்ட காரணத்தினால் மகிந்த இழுத்து மூடிய ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இன்னமும் திறக்கப்படவில்லை.

ஆயினும் இரண்டொரு தினங்களிலேயே சம்பந்தப்பட்ட வண்டியிலிருந்த சூட்டுத் துவாரங்கள் வெளியில் இருந்து உள் நோக்கிச் சுடப்பட்டதால் உண்டானவை என்ற செய்தியை தென்னிலங்கையின் சிங்களத் தினசரி ஒன்று வெளியிட்டது.

நவம்பர் 9ம் திகதி இருவேறு சம்பவங்கள் நடந்தன. புலிகள் அம்பாறையின் நாமல் பகுதியில் இருக்கும் சிறப்பு அதிரடிப்படை முகாம் மீது குறிசூட்டு இலகு இயந்திரத் துப்பாக்கிச் சூடு மற்றும் 81 மி.மீ மோட்டார் சூடுகளால் தாக்கியிருந்தனர். அதேநேரம் அம்பாந்தோட்டை மொனராகலை எல்லையில் மேலும் ஒரு வெளிக் காவல் நிலை தாக்குதலுக்கு உள்ளானது. இவ்விரண்டு தாக்குதல்களிலும் படைத்துறை வகையில் அரசதரப்பிற்கு ஏற்பட்ட சேதம் மறைக்கப்பட்டாலும் பரப்புரை வகையில் அதற்கு ஏற்பட்ட வீழ்ச்சி பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.

தென்னிலங்கையில் முதல் முறையாக போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வு நிகழ்ந்தது.

அவ்விடப் பெயர்வு மற்றும் குழப்பங்கள் அரசு முன்னெடுக்கும் மூலோபாயத்திற்கான தெற்கின் ஆதரவை வலுவிழக்கச் செய்து விடும் என்ற அச்சத்தால் அதை மட்டுப் படுத்துவதற்கும் மூடிமறைப்பதற்கும் அரசாங்கம் அவதிப்பட்டது.

அம்பாந்தோட்டையில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் தடய ஆய்விற்காக மாத்தறைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது போரின் வாடை அங்கே திட்டமும் தெளிவாக உணரப்பட்டது. மக்கள் பதற்றமடைந்து கூட்டம் கூட்டமாகச் சேரத் தொடங்கினர். அதைக் கட்டுப்படுத்த முடியாத மாத்தறை மாவட்ட காவற்துறை மேலதிகாரி கூடியிருந்த மக்களிடம் புலிகள் படையினரை மட்டும் தாக்குவார்கள் பொது மக்களை ஒன்றும் செய்யமாட்டார்கள், என்ற நற்சான்று வழங்க வேண்டிய





# மகுடமா? முள்ளா?

"அம்பாந்தோட்டையில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் தடய ஆய்விற்காக மாத்தறைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது போரின் வாடை அங்கே திட்டமும் தெளிவாக உணரப்பட்டது. மக்கள் பதற்றமடைந்து கூட்டம் கூட்டமாகச் சேரத் தொடங்கினர். அதைக் கட்டுப்படுத்த முடியாத மாத்தறை மாவட்ட காவல்துறை மேலதிகாரி கூடியிருந்த மக்களிடம் புலிகள் படையினரை மட்டும் தாக்குவார்கள் பொது மக்களை ஒன்றும் செய்யமாட்டார்கள், என்ற நற்சான்று வழங்க வேண்டிய அளவிற்கு தெற்கு உள்ளூர அலைப்பட்டது."

அளவிற்கு தெற்கு உள்ளூர அலைப்பட்டது. என்ன முயற்சிசெய்தும் சில விளைவு அரசாங்கத்தால் தடுக்க முடியவில்லை. சுமார் 12,500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தொழில் இழந்து நிற்பதை எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றம் வரை கொண்டு வந்தன. தெற்கின் எதிர்காலம் பாதுகாப்பு பற்றிய வாக்குவாதங்கள் எழுந்தன. புலிகளை வன்னிக்குள் முடக்கி விட்டோம் இதோ ஓங்கிக் குத்திக் கொல்லப்போகிறோம் என்பது போன்ற நாடகமான வாய்ச்சவால்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு தெற்கைக் காப்பாற்றுவதற்கான தீவிர படைய மூலோபாயம் ஒன்றைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு உண்டாயிற்று.

அம்பாந்தோட்டை, மொனராகலை எல்லைப்புறப் பாதுகாப்பிற்காக நடவடிக்கைக் கட்டளைப் பணியகம் ஒன்று நிறுவப்படும். அதன் பொறுப்பில் ஒரு பிரிகேடியர் தர நடவடிக்கைக் கட்டளையதிகாரி நியமிக்கப்படுவார். அக்கட்டளையகத்தின் கீழ் ஒரு பட்டாலியன் வரையான தரைப்படையினரும் 1500 வரையான ஊர்காவற்படையினரும் மேலதிகமாக காவற்றுறையினரும் நிறுத்தப்படுவார்கள், என்ற பகிரங்க அறிவிப்பை அரசாங்கம் விடுத்தது. தரைப்படை, காவற்துறை, ஊர்காவற்படை உள்ளிட்ட தொகை 3000 வரை வரும் காட்டு நடவடிக்கையில் அனுபவம் கொண்ட சிறப்புப்படைக் கொம்பனியொன்று அங்கே நகர்த்தப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஆக அங்கே ஒரு போர்முனை திறக்கப்பட்டதை நடைமுறையளவில் சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

அதாவது கிழக்கில் அரசாங்கம் கடந்த ஒன்றரை வருடமாக நிரூபிக்க முயன்ற நிலைப்பாட்டைக் கைவிட்டு மூலோபாயத்தையும் மீளமைத்திருக்கிறது.

மாவிலாற்று நடவடிக்கையோடு ஆரம்பித்த பழைய மூலோபாயத்தின் படி பெருமெடுப்பு நடவடிக்கைகளின் மூலம் புலிகள் கிழக்கிலிருந்து அகற்றப்பட்ட பின் அங்கே படைச்சிக்கனம் அமுல்படையில் பெரும்பாலான பகுதியாக சிறப்பு அதிரடிப்படையினர் கையில் கொடுக்கப்படும் ஊர்காவற்படையினர் அதிகரிக்கப்படுவர். அந்நிலையில் அங்கிருக்கும் தரைப்படைத் துருப்புக்களில் பெரும் பாலானவை வன்னிப் பெருநிலப்பகுதியில் இருக்கும் புலிகளின் வலுநிலைகள் மீதான நடவடிக்கைக்குத் திருப்பி விடப்படும்.

அண்மைக்காலம் வரை அந்த அடிப்படையில் தான் சம்பவங்கள் நகர்ந்தன. நந்திமித்திர பிரிகேட்டிற்கான ஆளணி கிழக்கில் அதிகரிக்கப்பட்டது. முன்னர் அம்பாறை மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கும் பொறுப்பாக இருந்த சிறப்பு அதிரடிப்படையினர் மட்டக்களப்பு மட்டணயும் படையினர் புதிதாக ஆக்கிரமித்த படுவான்கரையும் ஏ - 5 சாலையின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியும் கொடுக்கப்பட்டன.







# இறுதி மடலல்ல உறுதி மடல்

அநுராதபுரம் சிறிலங்கா வான்படைத்தளம் மீது சிறப்புக் கரும் புலிகள் நடாத்திய வீரம் செறிந்த தாக்குதலின் அதிர்வு தமிழ் மக்களின் மனங்களைத் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் எழுச்சி கொள்ளச் செய்துள்ள நிலையில் இத்தாக்குதல் அணியின் தலைவனாகச் செயற்பட்ட கரும்புலி லெப்.கேணல் இளங்கோ இறுதியாக எழுதிச்சென்றுள்ள மடல் தமிழினத்திற்கு அவர் எழுதிய இறுதிமடல் என்று கூறுவதைவிட உறுதிமடல் என்றே கூற வேண்டும்.

"தலைவர் இருக்கிற காலத்திலே நாங்கள் நிச்சயம் தமிழீழம் மீட்போம். இதுஉறுதி அதற்கு உங்கட பங்களிப்புத்தான் மிகவும் முக்கியம். அண்ணைக்கு நீங்கள் தான் தோள் கொடுக்க வேண்டும். உங்கட பங்களிப்பால தான் எங்கட மண்ணை மீட்கமுடியும்" என அவர் தமிழினத்திற்கு வரைந்த இறுதிமடலில் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கரும்புலி வீரர்கள் புரியும் தியாகமும் அளப்பரிது அது அப்வகைக்கு அப்பாலானது.

கரும்புலி வீரர்களின் உளப்பாங்கும் அவர்கள் புரியும் உன்னதமான தியாகத்தின் மகிமையும் சிங்கள ஒடுக்குமுறையாளர்களின் கோரத்தாண்டவத்திற்கு முகம் கொடுத்து வரும் தமிழ் மக்களின் மனங்களில் அழியாத இடத்தைப் பிடித்துள்ளது என்பது வெளிப்படையானது.

ஆனால் தன்னுடைய நாட்டுக்காகத் தனது மக்களுக்காக ஒருகுடிமகன் உயர்ந்த அளவில் எத்தகைய தியாகத்தை சேவையைப் புரிய முடியுமோ அதனைச் செய்பவனே அந்த இனத்தின் மகிமைக்குரிய மனிதனாவான்.

தமிழின விடுதலைக்காகத் தம்மையே அழித்துவிடத் துணியும் கரும்புலி வீரர்களின் நாட்டுப்பற்றையும் கடமை உணர்வையும் எவராலும் மிஞ்சிவிட முடியாது. இந்த நிலையில் தமிழினம் ஒரு வரலாற்று நெருக்கடிக்கு முகம் கொடுத்துவரும் நிலையில் அதனைக் களைவதற்காகத் தம்மையே ஆகுதியாக்கத் துணிந்துவிட்ட ஒரு கரும்புலி வீரன் தனது இனத்திற்கு ஒரு வேண்டுகோளை விடுகிறான். எனின் அதுஒரு வரலாற்று வேண்டுகோளாகவே நோக்கத்தக்கது.

கரும்புலி.லெப். கேணல் இளங்கோ.அவர்களின் தமிழீழத் தனியரசின் மீதான உறுதியையும் அதற்காகத் தமிழர் தலைமைக்குத் தமிழினம் வழங்க வேண்டிய பங்களிப்பையும் வேண்டுகின்ற அந்த வீரன் மக்களின் உறுதிமிக்க பங்களிப்பே தமிழர் தாயகத்தை மீட்கும் என்ற அசைக்கமுடியாது யதார்த்தத்தை தனது அரசியல் தெளிவை தமிழினத்திற்கு உணர்த்தியுள்ளார்.

இது தமிழினத்தின் விடுதலைக்காகத் தன்னை வெடிப்பதற்குத் தயாராகிவிட்ட ஒரு கரும்புலி வீரனின் உறுதியான தியாகத்திற்கு அப்பால் அவர் மக்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் அதற்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தையும் மிகத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்மக்களின் அரசியல் விடுதலையைப் பொறுத்த வரையில் உறுதிமிக்க போராட்டமும் அசைக்கமுடியாத தலைமைத்துவமுமே உண்மையான விடுதலையைப் பெற்றுக் கொடுக்கும் என்பதை அவர் நன்குணர்த்தியிருக்கிறார்.

இந்த நிலையில் லெப். கேணல் இளங்கோ தமிழினத்திற்கு இறுதியாக எழுதிச் சென்ற மடலானது தமிழினத்தை தமது இலட்சியத்தில் உறுதியாக நிற்பதுடன் தமிழர் தலைமைக்கு உறுதியாக வழங்கவேண்டிய பங்களிப்பைச் சுட்டி நிற்பதாகவுள்ளது.

உண்மையில் ஒரு இனத்தின் அறிவுரையைக் கூறும் எல்லாத் தகுதிநிலையையும் கொண்ட இந்த உயரிய வீரனின் இறுதிவார்த்தைகள் தமிழினத்தின் வரலாற்றில் சத்திய வாக்காகவே கொள்ளத்தக்கது.

தோற்றுப் போய் எதிரியின் முன் மண்டியிட்டு அடிமை வாழ்வை ஏற்றுக் கொள்வதை விடப் போராடி வீரச்சாவடைவதையே எந்தவொரு தன்மானமுள்ள தமிழனும் விரும்புவான்.

இந்தவகையில் ஒருவீரன் மட்டமல்ல ஒட்டுமொத்த தமிழினமுமே தமது விடுதலைக்காக உறுதி கொண்டு திடம் கொள்ள வேண்டுமென்பதை தெரிவித்துள்ளார். எனவே லெப்.கேணல் இளங்கோ ஒரு உண்மையான வீரன் எத்தகைய அறிவுரையைக் கூறவேண்டுமோ அதனை ஒரு வேண்டுகோளாகத் தம் மக்கள் முன்வைத்ததன் மூலமாக ஒரு உறுதியுரையை இறுதியாக எழுதிச் சென்றுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தின் நீண்ட நிகழ்ச்சி நிரல்களை தனது நிகழ்ச்சி நிரலின் ஒரு அம்சமாக மாற்றிவிடுவதை புலிகளின் தலைமை பலமுறை செய்து காட்டியிருக்கிறது. ஆரம்பத்தில் மிடுக்கோடு தோற்றமளிக்கும் சிறிலங்காவின் செயற்றிட்டங்கள் காலம் போகப் போகத் தொய்வடைந்து தம்மை அறியாமலே புலிகள் விரும்பும் திசையில் செல்வது முன்னரும் நிகழ்ந்திருக்கிறது.



சேனாதி



# அதிகாரத்திற்கான தேசப்பற்று





"எல்லாம் எங்களிலேயே தங்கியிருக்கின்றது. நாம் தோற்றால் நாடு தோற்கும் நாம் வென்றால் நாடு வெல்லும்" என்கிறார் சிறிலங்காவின் தேசப்பற்றாளர் விமல் வீரவன்ச.

அநுராதபுரம் வான்படைத் தளம் மீது கரும்புலிகளும் வான் புலிகளும் தாக்குதல் நடத்திய தினத்தன்று தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியின் பொதுக் கூட்டமொன்றில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இங்கே அவர் 'நாம்' என்று குறிப்பிடுவது தேசப்பற்றாளர்கள் எனக் கருதிக் கொள்ளும் அவரைச் சூழவுள்ள வட்டத்தினரையே.

ஆனால் இவர்களின் செயற்பாடுகள் இவர்களின் எண்ணங்கள் அவர்களது நாட்டை வெற்றியடையச் செய்யும் வகையில் அமைந்துள்ளனவா? என்று பார்க்க வேண்டும். அவர் அந்தக் கூட்டத்தில் தமது சாதனை பற்றிக் கூறுகையில் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி ஒரு தேசியச் சக்தியாகச் செயற்பட்டுப் புலிகளின் பயங்கரவாதத்திற்கு எதிராக மகிந்தவை நடவடிக்கை எடுக்கவைத்திருக்கின்றது. இதனது அழுத்தம் காரணமாக ரணில் விக்கிரமசிங்க சமஷ்டி பற்றிய கூச்சலைத் தற்காலிகமாகவேனும் கைவிட்டிருக்கின்றார். இந்தச் சக்தி நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், யப்பான் ஆகிய சக்தி வாய்ந்த இணைத்தலைமை நாடுகளால் பாதுகாக்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தங்களைச் சாதாரண ஒரு வெற்றுத்தாளாக மாற்றியிருக்கின்றது. எனப் பெருமைப்பட்டிருக்கின்றார்.

நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்லக்கூடிய தகுதியையும் உறுதிப்பாட்டையும் கொண்டுள்ளது. இதன் காரணமாக எமது நாட்டின் தலைவிதியை எமது கைகளில் எடுத்துக் கொள்வோம் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இதனை அவர் கூறுகின்ற போது சிறிலங்கா விமானப்படை 400 கோடி ரூபா சொத்தழிப்பைச் சந்தித்து சிலமணி நேரம் கூட ஆகவில்லை என்பது இங்கே சுட்டிக்காட்டப்பட்டதாகும். சிங்களத்தின் தேசப்பற்றாளர்கள் அனைவரும் தேசத்தின் தலைவிதியை மாற்றுவதாகக் கூறிக் கொண்டு தேசத்தை படுகுழிக்குள் தள்ளுவதையே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது.

ஏனெனில் முதலாவதாக அவர் மகிந்தவை யுத்தத்திற்குள் தள்ளிய பெருமையைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறார். அதாவது மகிந்த தமிழ்மக்களுடன் இணக்கப்பாட்டிற்கு வர முயன்றதாகவும் தாமே அவரை நேர்வழிப்படுத்தியதாகவும் அவர் பெருமைப்பட்டிருக்கின்றார்.

இரண்டாவதாக ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்குச் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை வழங்கத் தயாராக இருந்ததாகவும் அதனைத் தடுத்து நிறுத்தி விட்டதாகவும் பெருமைப்படுகின்றார்.

இங்கு மகிந்த ராஜபக்ச என்றாலும் சரி ரணில் விக்கிரமசிங்க என்றாலும் சரி தேசப்பற்றுக் குறித்துப் பெருமைப்பட்டுக் கொள்

வேலவன்

கவலைப்படுவோர்களாக இல்லை. இவையெல்லாம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான உத்திகளே.

அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அவர்களது போட்டியில் மையப் பொருளாக இருப்பது 'இனவாதமே' என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டே இருக்கின்றனர்.

இவர்கள் மட்டுமல்ல; இவர்களது முன்னோடி அரசியல்வாதிகளும் கூட, அதே செயற்பாட்டைக் கொண்டிருந்தமையாலேயே இன்று சிறிலங்கா பெரும் இடர்பாட்டிற்குள் சிக்கிக் கொண்டுள்ளது.

ஒருநாடு இலங்கை எனவும் இதனைக் கூறுபோட முடியாது எனவும் கூறிக்கொள்ளும் இவர்கள் அந்த நாட்டில் வாழ்கின்ற ஒரு இனத்தின் அழிவு மீது தாம் வாழ்ந்துவிட முடியுமென எண்ணிச் செயற்பட்டு வந்துள்ளனர். செயற்பட்டுக் கொண்டும் இருக்கின்றனர்.

ஐ.தே. கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முதலாளித்துவக் கட்சிகள் அவை அடக்கு முறையையே தொழிலாகக் கொண்டவை என எடுத்துக் கொண்டால் இடதுசாரிகள் எனக் கூறிக் கொள்ளும் ஜே.வி.பியினரும் அதேவழியே தேர்ந்தெடுத்திருக்கின்றமை அவர்களும் அதே குட்டையில் ஊறிய மட்டைகளே என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இப்போது ஜே.வி.பி, இணைத்தலைமை நாடுகளின் போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செயலிழக்கச் செய்தமைக்கான பெருமையைத் தான் தட்டிச் செல்ல முயன்றிருக்கின்றது. ஆனால் போர்நிறுத்தம் ஏற்பட்ட சூழ்நிலையில் சிறிலங்கா என்ன நிலையில் இருந்தது என்பதை அது ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது.

12 வருடங்களுக்கு மேலாக யுத்தம் நடத்திய ஐக்கிய தேசியக் கட்சி என்ன செய்வதென்ற கையறு நிலையில் யுத்தத்தை எங்கு நடத்துவது எந்தத் திசையில் கொண்டு செல்வது என்று தெரியாத நிலையில் தடுமாறி நின்று கொண்டிருக்கையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டு ஆட்சிப்பீடம் ஏறினார்.

அன்றைய நிலையில் சிங்கள தேசத்திற்கு சமாதானம் தேவையான ஒன்றாக இருந்ததால் சந்திரிகாவை அது ஆட்சியில் ஏற்றியது. பின்னர் சந்திரிகா அம்மையார் ஏறத்தாழ 7 வருடங்கள் தொடர்ச்சியாக யுத்தம் நடத்தி இறுதியில் அவரும் அதே கட்டத்தை அடைந்தார். சிறிலங்காவின் பொருளாதாரம் மீளமுடியாத நெருக்கடிக்குள் சிக்கியது. யுத்தம் அசைக்கமுடியாத கட்டத்தை அடைந்து இந்தியா முதல் சகல நாடுகளிடமும் சரணாகதியடைய வேண்டிய நிலையில் சிக்கிக் கொண்ட போது ரணில் விக்கிரமசிங்க சமாதானம் பற்றிப் பேசினார். அப்போழுதே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

இவர்கள் எல்லோரும் தமிழ்மக்களுக்குச் சவால் விடுக் கொண்டு ஆட்சிக் காலத்தைக் கழித்த போதிலும் இறுதியில் தமிழ்மக்களின் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாது போனதே

இப்போது மகிந்த ராஜபக்சவினது முறை அவர் தேசப்பற்றாளரின் தூண்டுதலால் யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. தேசப்பற்றால் கூட யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. அவ்வாறு அவர் தேசப்பற்றுடன் எதனையாவது செய்யவிரும்பியிருந்தாரானால் ஜே.வி.பியின் தூண்டுதலுக்கெல்லாம் இடம் கொடுத்திருக்கவும் முடியாது.

ஏனெனில் தமிழ்மக்கள் தமது வாழ்வுக்காக நடத்துகின்ற போராட்டமாக இருக்கையில் இவர்களது போராட்டமோ ஆக்கிரமிப்புக்கானதாக இருக்கின்றது.

இப்போது மகிந்த ராஜபக்சவினது முறை. அவர் தேசப்பற்றாளரின் தூண்டுதலால் யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. தேசப்பற்றால் கூட யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. அவ்வாறு அவர் தேசப்பற்றுடன் எதனையாவது செய்யவிரும்பியிருந்தாரானால் ஜே.வி.பியின் தூண்டுதலுக்கெல்லாம் இடம் கொடுத்திருக்கவும் முடியாது.

இப்போது சிறிலங்காவில் வாழும் மக்கள் சந்திக்கின்ற வாழ்வாதார நெருக்கடியை உணர்ந்து கொள்ளாதவர் எவருமே இருக்கமுடியாது. இந்த நெருக்கடிக்குச் சொல்லப்படும் காரணங்கள் இரண்டு.

ஒன்று, யுத்தம். இரண்டாவது, மகிந்த ஆட்சியின் ஊழல் மோசடிகள், நிர்வாகத்திறமின்மை. இவற்றிலே ஊழல் மோசடியும் நிர்வாகத்திறமின்மையும் பலவழிகளில் நிரூபணமாகியிருக்கின்றது. எனவே அவரது தேசப்பற்று வெளியாகியிருக்கின்றது. ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள 107இற்கு மேற்பட்ட அமைச்சர்கள் அவர்களது பயணங்கள் சனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள் எல்லாம் நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு சீர்குலைக்கின்றன.

அத்தகையதொரு ஆட்சியைத் தொடர்ந்தும் நீடிக்க ஜே.வி.பி அனுசரணை வழங்கும். அதேவேளை தான் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான தருணம் வரும்வரை தனது 38 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காகச் சிங்கள மக்களை துன்பம் அனுபவிக்க விட்டிருக்கின்றது ஜே.வி.பி.

உண்மையிலேயே இவர்களுக்குத் தேசப்பற்று இருக்குமானால் தமிழ்மக்களின் இறைமையை ஏற்றுக் கொண்டு சிங்கள தேசத்தின் நலனைப் பேணுவதே ஒரே வழியாக இருக்கும்.

# உள்ளிருந்து ஒரு குரல்

## அன்பான அப்பா...


எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இரண்டு நாட்கள் தொடர்ந்து பெய்த மழையில் நன்றாக நனைந்து கைகள் குளிர்ந்து விட்டதால் எழுத முடியவில்லை நேற்று நல்ல வெயில் எறித்தது கைகளும் காய்ந்து விட்டன நான் நிற்கும் நிலமும் காய்ந்து விட்டது.

அப்பா, சில ஆச்சரியமான உண்மைகளைக் காணும் வேளையிலெல்லாம் உங்களுக்குக் கடிதம் எழுதும் நினைவு எனக்கு வந்து விடும். ஒருநாள் முழுதும் மழை பெய்தாலே இந்த நிலத்தில் நடக்க முடியாது நிலத்தின் மேற்பரப்பு களி போலாகி விடும் இரண்டு நாட்கள் மழை பெய்தால் கேட்கவே வேண்டாம். நடக்கவும் முடியாது. ஓடவும் முடியாது. முழங்கால் வரை புதைந்த காலை வெளியில் தூக்கும் போது செருப்பு இருக்காது எங்களிடம் சிரிப்பு மட்டும் தான் இருக்கும் ஈர மண்ணின் கீழ் தாழ்ந்து கிடக்கும் முட்கள் எங்கள் கால்கள் உறுதியானவைதானா என்று அடிக்கடி சோதிக்கின்றன.

அப்பா, எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக என்னிடம் ஒரு விடயம் பற்றி அடிக்கடி கதைத்தீர்கள். "நீ நன்றாகப் படி உன்னை நான் நோர்வேக்கு அனுப்புவேன் நோர்வேயில் நிறையப் பனி இருக்கிறது மலைகளை மூடி, மரங்களை மூடி, வீடுகளை வீதிகளை மூடிப் பனி படியும் கோடை காலத்தில் மட்டும் பனி உருகும் பனி காலத்தில் இலைகளை உதிர்த்து விட்டு மொட்டையாக நிற்கும் மரங்கள் கோடை காலத்தில் துளிர் விடுவது மிக அழகாக இருக்கும்..." அதிக தொலைவிலிருக்கும் நோர்வேயை அறிமுகப் படுத்திய உங்களுக்கு அருகில் இருக்கும் மன்னாரை அறிமுகப்படுத்த விரும்புகிறேன் அப்பா.

மன்னார் ஒரு வறள் வலயம் என்றுதான் புவியியலில் நான் படித்தேன் காலத்தின் அலைப்பை ஏற்றுக் களத்துக்கு வந்திருக்காவிட்டால் மன்னாரை ஒரு பகுதி பறக்கின்ற பாலைவனமாக கற்பனை செய்தபடி தான் பல்கலை கழகத்தில் இரண்டாம் வருட மாணவியாக இப்போது நான் இருந்திருப்பேன். நேரில் பார்க்கும் போதுதான் மன்னாரின் அழகு தெரிந்திருக்கின்றது அப்பா.

கட்டுக்கரை எந்தப் பெரிய குளம் தெரியமா மன்னாரில் திரும்பிய இடங்களிலெல்லாம் குளங்களும் வயல்களும்தான் கண்ணுக்குத் தெரிகின்ற பாலியாறு பாய்ந்தோடினால் நான் முழுவதும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். வயல்கள், குளங்கள், வீடுகள், வெளிகள் எல்லாவற்றையும் ஊடறுத்து நீள்கின்றது 2ஆம் லெப் மாலதி படையணி நிலை கொண்டிருக்கும் போர் முன்னரங்கு மன்னாரை வறள் வலயம் என்று என்னால் சொல்ல முடியவில்லை.



இரண்டு நாட்கள் நிலைத்ததாகச் சொன்னேனே அப்பா எம்மை நடக்கவும் விடாமல் இழுத்த விழுத்திய நிலம் நேற்றைய ஒரு நாள் வெயிலுடன் காய்ந்து பாளம் பாளமாக வெடித்துக்கிடக்கின்ற விடத்தல் மரங்கள் மிகச் சிறிய இலைகளால் தம்மை மூடியபடி பூத்துக் கிடக்கின்றன இலைகளைப் போலவே பூக்களும் மிகச் சிறியவை தான் கிளைகளின் முடிவில் மணிமணிபோல கொத்துக் கொத்தாக இளம் பச்சை நிறத்தில் பூக்கும் இந்தப் பூக்களை நான் இப்போது தான் பார்க்கிறேன் அப்பா. வகைவகையான குரோட்டன் செடிகளைத் தேடித் தேடி நட்டு நீர் ஊற்றிய என்னை நினைக்க சில வேளைகளில் சிரிப்பு வருகிறது.



நான் பார்த்த உலகமும் இப்போது நான் பார்க்கும் உலகமும் மிக வேறுபாடானவை அப்பா. மண்ணும் மரங்களும் மட்டமல்ல மனிதர்களும் தான் ஒரு வாரத்தின் முன்னர் தான் தம்பனையில் இப்போது நான் நிற்கும் போர் முன்னரங்கு அமைக்கப்பட்டது முன்பு சற்றுப் பின்னே நின்றோம் ஒரு வாரத்தின் முன்புதான் முன்னே நிலை கொண்டிருந்த சிங்களப் படையினருடன் சண்டையிட்டு விரட்டிவிட்ட எமது முன்னரங்கை முன்னகர்த்தினோம் சில இடங்களில் சண்டை பிடித்தவாறும் சில இடங்களில் சண்டையில்லாமலும் முன்தள்ளிய பாரிய நடவடிக்கை அது.

எல்லோருக்கும் வேலைகள்கூட முன்னரங்கு முன்னே நகர நகரக் காப்பரண்களுக்கான குழிகளை வெட்டும் வேலைகளும் உடனேயே நடந்தன அமைக்கப்பட்டிருந்த முன்னரங்கின் ஆள் கூறுகளை கணித்து இலக்கங்களை அடையாளமிடும் வேலையை கப்டன் மாலதியும் கதிரும் செய்து கொண்டிருந்தார்கள் பூலோக நிலைகான் தொகுதிகளுடன் ஒவ்வொரு உதவியாளர்களுடன் இருவேறு வழிகளால் வந்த மாலதியும் கதிரும் சந்தித்த இடத்தில் திடீரென சிங்களப் படையினரும் வந்து விட மூண்ட மோதலில் கப்டன் மாலதி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார் மாலதியின் உதவியாளர் அவ்விடத்தில் நிற்கவில்லை கதிரின் உதவியாளரின் ஒரு சுடுகலம் மட்டுமே அவ்விடத்தில் இயங்கிக் கொண்டிருந்தது.

எங்களுடைய ஒற்றைக் காப்பரணைத் தாக்குவதற்கே பல காரணங்களை சுடுகலன்களுடன் பெருந் தொகையில் சிங்களப் படையினர் வருவது தான் வழமை முழங்கு முழங்கு என்று முழங்கிக் கொண்டிருந்த கனரக சுடுகலன்களுக்கு கெதிராக ஒற்றைச் சுடுகலத்தால் சுட்டு பத்துப் பதினைந்து மீற்றர் இடைவெளியில் நெருங்கி விட்ட சிங்களப் படையினர் ஆள் கூற்றைச் சொல்லி எறிகலன்களை விழுத்தி களநிலையை ஒரு மணித்தியாலங்கள் வரைதிறமையாகக் கையாண்டு உதவி அணி தன்னை நெருங்கும் வரை மாலதியின் வித்துடல் எதிரியின் கைகளுக்குப் போய் விடக் கூடாது என்ற உறுதியுடன் தனித்து நின்ற கதிரை நினைக்கப் பெருமையாக இருக்கின்றது அப்பா மன்னாருக்கு நான் வந்து ஒன்பது மாதங்களாகியும் எனக்கு இத்தகைய ஒரு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

வித்துடலை எதிரி எடுத்து விடக் கூடாது என்று முன்னே போய் வித்துடலான லெப். கேணல் மைதிலியைப் பற்றி எங்களுடைய கொம்பனிப் பொறுப்பாளர் தமிழ்த்தென்றல் ஒருமுறை சொல்லியிருக்கிறார் ஆச்சரியமாக அன்று நான் கேட்டதை இப்போது நேரிலேயே பார்த்தேன் அப்பா. சில பரம்பரை இயல்புகள் மாறாதிருப்பது போல 2ஆம் லெப் மாலதி படையணியின் சில மரபுகள் தலைமுறைகள் கடந்தும் மாறுவதில்லை என்பதை நான் கவனித்திருக்கிறேன். 2000ஆம் ஆண்டில் சாவகச்சேரி போர்முன்னரங்கை சிங்களப் படைகள்

கட்டளையை ஏற்க மறுத்து வீரச்சாவடைந்த மேஜர் கயல்விழியை பற்றி விழுதாகி வேருமாகி வரலாற்று நூலில் பயிற்சிப் பாசறையில் வாசித்திருக்கிறேன். கட்டுரையில் இதை நான் பார்த்தேன்.

கட்டுரையில் இருந்த எங்களுடைய காப்பரண் ஒன்றை இரு தடவைகள் சிங்களப்படைகள் தாக்கினர் முதல்முறை அவர்களால் காப்பரணைக் காப்பாற்ற முடியவில்லை முதல் முறை பெற்ற பட்டறிவால் இரண்டாவது முறை பெரும் ஆள் படைக்களசக்தியுடன் சிங்களப்படையினர் மிகக் கடுமையாக நடந்த சண்டையில் தனது சிறிய அணியோடு தப்பிவர வாய்ப்பிருந்த ஒற்றை வழியால் கப்டன் கோதை தப்பி வந்திருக்கலாம் ஆனால் அவர் அதை விரும்பவில்லை தன்னால் முடிந்த வரை சண்டையிட்டார் கயல்விழியைப் போலவே கட்டுக் கரையில் ஒரு வரலாற்றை கோதை எழுதினார்.

மனம் மிகவும் பாரமாக இருக்கிறது அப்பா. காலத்தின் குரலை சில காலத்தின் முன்பே நான் காதில் விழுத்தியிருக்க வேண்டும். காலதாமதத்தால் தான் விடுதலைக்கான நாட்கள் பின்தள்ளிப் போவதும் நிகழுகின்றதோ என்று யோசிக்கிறேன்.

அன்பான அம்மா, எனக்கு மிகவும் பிடித்தமான மாசி வடையை நாளாந்தம் வாங்கிச் சாப்பிடுவதற்கென உங்களுக்குத் தெரியாமல் அடிக்கடி அப்பா தந்த காசை எனது மேசையில் இழுப்பறையிலுள்ள சீஸ் பிஸ்கற் ரின்னில் வைத்திருக்கிறேன் இனி அது உங்களுக்குத்தானம்மா உங்களுடைய கனவுகளை உடைத்து விட்டு நான் தூரப்போனதாக நினைக்க வேண்டாம் அம்மா. மனதால் உங்களுக்கு மிக அருகே தான் உள்ளேன்

என்றும் அன்புடன்

மன்றநிலா

பெரிய தம்பனை

2007.12.18



# கெரில்லாப் போராட்டங்களை அரச பயங்கரவாதத்தால் அடக்கமுடியுமா?

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் பலநாடுகளிலும் வாழ்கின்ற சிறுபான்மை தேசிய இனங்கள் தமது தேசியத்தன்மை யை, பண்பாட்டு விழுமியங்களை வாழ் விடங்களை பெருந்தேசியவாதத்திலிருந்து பாதுகாப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதப்போராட்டங்களில் ஈடுபட்டு வரு கின்றனர். இந்த தேசியவிடுதலைப்போராட் டம் ஆரம்பத்தில் சாத்வீக வடிவில்தான் ஆரம்பித்திருக்கிறது. ஆனால் பலநாடு களில் ஆளும் வர்க்கத்தினர் சிறுபான்மை தேசிய இனங்களுடைய அடிப்படை அபி லாசைகளை புறந்தள்ளி அரசபயங்கர வாதத்தினூடாக அவற்றை ஒடுக்கியமை யால் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் மாற்று வழியின்றி ஆயுதப்போராட்டத்தி லீடுபட்டிருக்கின்றன.

இத்தகைய தென்கிழக்காசியப் பிராந் தியத்தில் முனைப்படைந்துள்ள தேசிய விடுதலைப்போராட்டங்கள் பற்றியும் தேசிய சிறுபான்மை இனத்தவர்களது ஆயுதவழி செயற்பாடுகள் பற்றியும் இந்தோனே சியாவை ஆய்வுக்குரிய களமாகக் கொண்டு சர்வதேச சஞ்சிகையான நியூஸ் வீக் அண்மையில் ஓர் கள ஆய்வினை ஆராய்ச்சிப் புலமைத்தரத்தில் வைத்து மேற்கொண்டது. முழுமையான ஆய்வின் பின் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார் கள் இந்த முடிவின்படி தேசியவிடுத லைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற கெரில்லாப் போராளிகளை எந்தவொரு அரசாங்கத்தினதும் மரபுவழி இராணுவப் படைகளால் தோற்கடித்துவிட முடியாது என்பதேயாகும்.

இந்த ஆய்வு முடிவுகளின் படி தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்திலுடைய கடந்தகால செயற்பாடுகளையும் அவற்றி னுடைய கணபரிமாணங்களையும் ஒப்பு

## ஜே.ஆர்.போட்ட சன்னதம்

1972ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட முத லாவது குடியரசு யாப்புக்கு எதிராக கோப் பாயில் மகாவளவில் கூடிய தமிழர் கூட் டணியினர் தமிழ்மக்களுடைய பிரச்சனை தொடர்பாக முன்வைத்த ஆறு அம்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் அகிம்சைவழிப் போராட்டங்களுக்குரிய களயதார்த்தங்கள் பெரும்பாலும் முடிவுக் குவந்தன இதன்பின் ஆயுதவழிப் போராட் டம் என்பது முனைப்படையத் தொடங்கி யது. ஆரம்பத்தில் இவை தலைமறைவு இயக்கங்களால் கரந்தடிப் போராட்ட முறை யாக முன்னெடுக்கப்பட்டன. ஆங்காங்கே சிங்களப் பொலிசார் மீதான தாக்குதல்கள், காட்டிக்கொடுக்கும் சுயமைத்தனங்களை இல்லாமல் செய்தல், போராட்டத்தேவைக் காக இரசாயனக்கலவைகளை பெற்றுக் கொள்ளல், பொருளாதாரத் தேவைகளைக்



படுத்தல், இவைபற்றிய புலனாய்வை மேற் கொள்ளும் சிங்கள இரகசிய பொலிசாரின் வலைப்பின்னலை உடைத்தெறிதல் என வடிவம்பெற்று மேற்கிளம்பின. ஆனால் 1983ம் ஆண்டில் இடம்பெற்ற இனப்படு கொலை நடவடிக்கைகள் போராட்டத்தை இன்னொரு கட்டத்திற்கு முன்னோக்கி நகர்த்தின. இதன்விளைவாக தமிழர் விடுத லைக்கான ஒருதேசிய இராணுவக்கட்ட மைப்பு உருவாக்கப்பட்டது. பல நூற்றுக் கணக்கான போராளிகள் இதனுள் உள் வாங்கப்பட்டார்கள் இந்தக்காலகட்டத்தில் இந்தியா தமிழர் தேசியவிடுதலைப்போராட் டத்தின் மீது முன்னைய காலங்களிலும் பார்க்க கூடிய அக்கறை காட்டியது இத னால் ஆத்திரமுற்ற அப்போதைய ஜனா திபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா 15.12.1985 அன்று வெளியான 'இந்தியா ருடே' சஞ்சி கைக்கு பின்வருமாறு பேட்டிகொடுத்தார்.

"இந்தியா ... [illegible]

குகிறது. இந்தியா விரும்பினால் இலங் கையை ஆக்கிரமிக்கட்டும் அவர்கள் நினைத்தால் 24 மணித்தியாலத்திற்குள் இலங்கையை கைப்பற்றலாம் அவர்கள் விரும்பினால் என்னைச்சிறையில் அடைக் கட்டும் இவையெல்லாம் நடக்குமாக இருந்தால் இலங்கைத்தமிழர்கள் முழுப் பேரும் கொன்றொழிக்கப்படுவார்கள்"

ஜனாதிபதி ஜே.ஆர் அவர்களுடைய இந்த அரசபயங்கரவாத எச்சரிக்கையும் அவற்றை நிறைவேற்றுவதற்கு தமிழர் தாயகத்திற்கு அனுப்பப்பட்ட பேரினவாதப் படைகளாலும் கெரில்லாப்போராளிகளை எதுவும் செய்துகொள்ளமுடியவில்லை. போராட்டம் கூர்மைபெற்றது. அது முனைப் படைந்தநிலையில் ஜே.ஆர் தேசிய பந் தோபஸ்து அமைச்சராக லலித் அத்துலத் முதலியை நியமித்தார். நியமிக்கப்பட்ட அத்துலத்முதலி தமிழர்போராட்டத்தை மூன்று மாதகாலத்திற்குள் முற்றாக அழித் துவிடுவேன் என்று இலங்கை வானொ லிக்கு பேட்டிகொடுத்தார். அத்தோடு பிர பல அவுஸ்ரேலியப் பத்திரிகையாளரான மன்டொனால்ட் அவர்களுக்கு கொடுத்த பேட்டியில் தீவிரவாதிகளை பேச்சுவார்த் தைக்கு வாருங்கள் என்று அழைத்தகாலம் போய்விட்டது போருக்கு வாருங்கள் என்று அழைப்புவிடுக்கும் காலம் வந்துவிட்டது என அறைகூவல்விடுத்தார்.

போராட்டத்தை இருவராலும் நசுக்க முடியவில்லை. போராட்டம் தொடர்ந்தது. 23.04.1993 அன்று அத்துலத் முதலி கொழும்பில் நடந்த குண்டுவெடிப்பில் இறந்தார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1995 ம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பு வைத்தியசாலையில் இறந்தார்.

> சர்வதேச சஞ்சிகையான நியூஸ் வீக் அண்மையில் ஓர் கள ஆய்வினை ஆராய்ச்சிப் புலமைத்தரத்தில் வைத்து மேற்கொண்டது. முழுமையான ஆய்வின் பின் அவர்கள் ஒரு முடிவுக்குவந்தார்கள் இந்த முடிவின்படி தேசியவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற கெரில்லாப்போராளிகளை எந்தவொரு அரசாங்கத்தினதும் மரபுவழி இராணுவப்படைகளால் தோற்கடித்துவிடமுடியாது

அவர்கள் இருவராலும் அரச பயங்கர வாதத்தை ஆயுதமாகக்கொண்டு தமிழ் கெரில்லாக்களை அடக்கமுடியவில்லை. போராட்டம் புதிய தளங்களில் வீச்சுப்பெற் றது.

## பிரேமதாசாவும், ரஞ்சன் விஜயரட்ணாவும் போட்ட சன்னதங்கள்.

1988ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ம் திகதி சிறிலங்காவில் இடம்பெற்ற நிறை வேற்று அதிகாரம் கொண்ட இரண்டாவது ஜனாதிபதித்தேர்தலில் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதி யாக தெரிவுசெய்யப்பட்டார். அவர் தனது யுத்தகால மந்திரியாக ரஞ்சன் விஜயரட்ணா வை நியமித்தார். யுத்தசன்னதம் புரிந்த ரஞ்சன் விஜயரட்ன 18.06.1990 அன்று பாரா ளுமன்றத்தில் பேசும்போது "நான் விடு தலைப்புலிகளை சண்டைக்கு வருமாறு சவால்விடுகிறேன். அவர்கள் மழைலைப் பட்டாளங்கள் அவர்கள் என்னுடைய இரா ணுவத்தை சந்திக்கவேண்டிய முறையில் சந்திக்கட்டும் நான் ஜே.வி.பியை முற்றாக அழித்தவன் அதேபோல் விடுதலைப்புலி களையும் முற்றாக அழித்துவிடுவேன்" என்றார் அவர்.

இவ்வாறு இராணுவவாதம் பேசிய யுத்தகால மந்திரி ரஞ்சன் விஜயரட்ணாவும் ஜனாதிபதி பிரேமதாசவும் கூட்டாக இணைந்து தமிழர் தேசியத்தலைமைக்கு தீங்கிழைப்பதற்கு சதித்திட்டங்களைத் தீட்டி னார்கள். இவர்களில் யுத்தகால மந்திரி ரஞ்சன் விஜயரட்ண 02.03.1991ம் ஆண்டு கொழும்பில் திம்பிரிகஸ்யாய என்ற இடத் தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல் லப்பட்டார். ஜனாதிபதி பிரேமதாசா 01.05.1993 அன்று கொழும்பில் ஆமர்வீதி யில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல் லப்பட்டார். இருவரதும் மரபுவழி இராணு வத்தால் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்கமுடியவில்லை. தமிழ் மக்களது கெரில்லாப்போராட்டம் படிப்படியாக மரபுவழி இராணுவமாக வளர்ச்சிபெற்றது.

## சந்திரிகா அம்மையாரும் ஜெனரல் ரத்வத்தையும் போட்ட சன்னதம்

இலங்கையினுடைய நிறைவேற்று அதி காரமுடைய ஜனாதிபதிக்கான மூன்றாவது தேர்தல் 09.11.1994 இல் இடம்பெற்றது. இந்தத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்

யக்க குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். தமிழ்மக்கள் மீது போரைத் தீவிரப்படுத்திய சந்திரிக்கா பண்டார நாயக்கா தனது யுத்தகால மந்திரியாக தனது மாமனான ஜெனரல் ரத்வத்தையை நியமித்தார். அவர் யுத்தசன்னதம் போட்ட தோடு 14.12.1997 அன்று கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கு கொடுத்தபேட்டியில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"எத்தகைய விலைகொடுத்தாயினும் இந்தப்போரில் நாம் வெல்லவேண்டும் விடுதலைப்புலிகளை நான் தோற்கடித்த பின்னர் அவர்களது தலைவர் பிரபாகரனோடு நான் கைகுலுக்குவேன் மற்றைய நாடுகளிலிருக்கும் மரபுவழி இராணுவங்களுக்கெல்லாம் நாம் கெரில்லாப்போராட்டத்தை எவ்வாறு தோற்கடித்தோம் என்பது ஒருபாடமாக அமையும்"

மேற்படி ரத்வத்தையின் கூற்று ஒருபோதும் நிறைவேறவில்லை மாறாக 1998ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவூடாக ஏ-9 பாதைவழியாக கண்டிக்கு சுதந்திரப் பொன்விழாவின் கலந்துகொள்ள செல்வேன் என்று சபதம் செய்த ரத்வத்த இந்தப் போரில் தோற்றுப்போனார். 05.12.2001 அன்று கண்டி உடத்தளவின்ன என்ற இடத்தில் இடம்பெற்ற 10 முஸ்லிம்கள் படுகொலைக்கு இவரும் இவரது இரண்டு புதல்வர்களும் காரணம் என குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஓயாத அலை - 03 நடவடிக்கை மூலம் ஆனையிறவு விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது. 10.04.2002 அன்று ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்திற்கு புலிகள் பயணம் மேற்கொண்டார்கள்.

விடுதலைப்புலிகளுடைய போரியல் அனுபவங்கள் மற்ற நாடுகளின் இராணுவ வித்துவான ஆய்வாளர்களால் மிகத்துல்லியமாக ஆராயப்பட்டதோடு ஜெனரல் ரத்வத்தை எதிர்பார்த்ததற்கு மாறாக மற்ற நாடுகளின் மரபுவழி இராணுவத்திற்கு விடுதலைப்புலிகளின் கெரில்லாப்போராட்ட அனுபவங்கள் பாடவிதானங்களாக மாற்றம்பெற்றன.

## மகிந்த கொம்பனி போடும் சன்னதங்கள்

கடந்த 17.11.2005 அன்று இடம்பெற்ற ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். சிங்களதேசம் அவரை ஜனாதிபதியாக ஏற்றுக் கொண்டது. தமிழர் தாயகம் இந்தத்தேர்



இன்று எழுந்துள்ள கேள்வி என்னவென்றால் இந்தப்பேரினவாத அரசாங்கத்தாலும் அவர்களது பேரினவாதப்படைகளாலும் தமிழர்தேசிய விடுதலைப்போராட்டத்தை ஒடுக்கமுடியுமா? சர்வதேச சமூகம் தமிழர்போராட்டத்தில் நியாயத்தின்பால் எத்தகைய வகிபாகத்தை இனிமேல் மேற்கொள்ளப்போகின்றது.

தெரிவுசெய்யப்பட்ட மகிந்த ராஜபக்ச தன் சகோதரரான கோத்தபாய ராஜபக்சவை பாதுகாப்பு செயலாளராக நியமித்தார். அவர் கடும் கோட்பாட்டாளரான சரத்பொன்சேகாவை இலங்கையின் இராணுவத் தளபதியாக நியமித்தார். இவர்களோடு ஜனாதிபதியினுடைய இன்னொரு சகோதரான பசில்ராஜபக்சாவை பிரதான ஆலோசகராக நியமித்தார். இவர்களோடு ஜனாதிபதியின் மூத்த சகோதரரான சமல் ராஜபக்ச முக்கிய மந்திரிப்பதவியில் அமர்த்தப்பட்டார்.

இவர்கள் காலத்திற்குக் காலம் தமிழர்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை நசுக்கப்போவதாக பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். சிங்களதேசத்தால் கிராமப் புறமக்கள் மத்தியில் யுத்தம் பற்றிய பரப்புரைகளைச் செய்து தமிழ்மக்களுக்கு எதிரான போரை

படுத்த முயன்றுகொண்டிருக்கிறார்கள். 20.07.2007 அன்று கொழும்பிலிருந்து வெளிவரும் லங்காதீப பத்திரிகை ஜனாதிபதி மகிந்தராஜபக்சவின் பின்வரும் செய்தியை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டது.

"தொப்பிக்கலையில் கிடைத்த வெற்றியைத்தொடர்ந்து கிழக்கிலங்கையை புலிகளிடமிருந்து கைப்பற்றி அவர்களது கூலிகளை எனது அரசாங்கம் அழித்து விட்டது" இதேபோல 22.07.2007 அன்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'லக்பிம' பத்திரிகையில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கூறிய கருத்து பின்வருமாறு வெளியிடப்பட்டது.

"தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் எமது படைகள் பலவெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டு பயங்கரவாதத்தை வெற்றிகரமாக முடிவடுத்துள்ளன."

தற்போது தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்டுள்ள பசில் ராஜபக்ச 10.03.2007 அன்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'திவயின' பத்திரிகையில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

"நாம் கிழக்கைக் கைப்பற்றிவிட்டோம் இதேபோல வடக்கையும் இன்று அல்லது நாளை கைப்பற்றிவிடுவோம் அப்போது எமதுபடையினரின் ஆற்றலைப்பார்க்கலாம்" இந்த மூவரதும் பேச்சுக்கள் தமிழர் தேசியப்பிரச்சினைக்கு அவர்கள் இராணுவத்தீர்வை முன்னெடுப்பதாக தீர்மானித்துவிட்டதை அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன. இவர்கள் இப்படிக் கூறியிருக்க அண்மையில் வெளிவந்த டெய்லி நியூஸ் பத்திரிகையில் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா கொடுத்தபேட்டியில் 2008 ஆவணி மாதத்திற்கு முன் இந்தப்போரை முடிவுக்குக் கொண்டுவரப்போவதாக சபதம் செய்தார். மகிந்த ராஜபக்ச அரசாங்கம் 2008ம் ஆண்டை யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. 03.01.2008 அன்று அனுசரணையாளரான நோர்வேக்கு அனுப்பிய கடிதத்தில் தாம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்கள்.

இன்று எழுந்துள்ள கேள்வி என்னவென்றால் இந்தப்பேரினவாத அரசாங்கத்தாலும் அவர்களது பேரினவாதப்படைகளாலும் தமிழர்தேசிய விடுதலைப்போராட்டத்தை ஒடுக்கமுடியுமா? சர்வதேச சமூகம் தமிழர்போராட்டத்தில் நியாயத்தின்பால் எத்தகைய வகிபாகத்தை இனிமேல் மேற்கொள்ளப்போகின்றது என்பதேயாகும்.

# வரலாற்றை மறந்து செல்லும் மகிந்த

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து சிறிலங்கா அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக விலகிக் கொண்டதன் மூலம் மேற்குலக நாடுகளின் தலையீடு நீக்கப்பட்டதாக ஜே.வி.பி. தெரிவிக்கின்றது. மேற்குலக நாடுகளின் சூழ்ச்சி காரணமாக உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்தினால் நாட்டிற்கு ஏற்பட்டிருந்த ஆபத்து நீங்கியுள்ளதாகவும் அது கூறுகின்றது. அத்துடன் இந்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கத்தை விலக வைத்த பெருமையையும் அது தனதாக்கிக் கொண்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதோ விலகிக் கொண்டு விட்டது என்பதே உண்மையாகும் ஆனால் இவ்வளவு காலமும் அது ஒப்பந்தத்திலிருந்து விலகி அல்லது ஒப்பந்தத்தை மீறி மேற் கொண்ட நடவடிக்கைகள் போர் நிறுத்த மீறல் என்ற அடிப்படையிலேயே பார்க்கப்படும். இந்த போர் நிறுத்த ஒப்பந்தமான மேற்கு நாடுகளின் அனுசரணையுடன் செய்து கொள்ளப்பட்டாலும் இவ்வாறான ஒரு ஒப்பந்தத்திற்கு விடுதலைப்புலிகளுடன் வரவேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள ஆட்சியாளருக்கு அன்று இருந்தது என்பது மறுக்க முடியாது.

ஆறு வருடகாலமாக பாரிய இராணுவ நடவடிக்கைகள் பலவற்றை எடுத்து பெருமளவு நிதியையும் வளங்களையும் இதற்காகப் பயன்படுத்தியும் யுத்தத்தில் வெற்றி பெற முடியாத நிலையில் சந்திரிகா அரசாங்கம் இருந்தது. நீண்ட பாரிய நடவடிக்கையான ஜெயசிக்குறு நடவடிக்கையைக் கைவிட்டு எவ்வாறாயினும் வன்னிப்பிரதேசத்தை ஊடறுத்து யாழ்குடாநாட்டுக்குத் தரைப்பாதையொன்று அமைக்கும் முயற்சியில் சந்திரிகா அரசாங்கம் தோல்வி கண்டது. அதுமட்டுமல்லாது விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள்- 03 நடவடிக்கைகளுக்கு ஈடு கொடுக்க முடியாத சிங்களப்படைகள் ஆக்கிரமித்த பகுதிகளை கைவிட்டு ஓடுவது மட்டுமல்லாது ஆனையிறவையும் கைவிட்டு முகமாலை வரை ஓடியது. புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவித்தலை அவர்களின் பலவீனமாக எடுத்துக் கொண்ட சிங்கள ஆட்சியாளர்கள் ஆனையிறவைக் கைப்பற்றும் கனவுடன் மேற்கொண்ட அக்கினிச் சுவாலை முகமாலையிலேயே முறியடிக்கப்பட்டு பாரிய இழப்பைச் சந்தித்தது. அது மட்டுமல்லாது சிறிலங்காவிற்கான அனைத்துலக முக்கிய நுழைவாயிலாகிய கட்டுநாயக்க விமானத்தளத்தில் பாரிய இழப்பைச் சந்தித்து திகைத்து நின்றது.

இந்நிலையிலேயே நோர்வேயிடம் சரணடைந்தார் சந்திரிகா அம்மையார். அத்துடன் சமாதானம் பற்றிப் பேசிய ரனில் விக்கிரமசிங்காவை சிங்கள மக்கள் ஆட்சியிலும் ஏற்றினர். இந்த ஒப்பந்தத்தில் மேற்குலக அனுசரணையுடன் ரனில் கையொப்பமிட்டாலும் இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் எண்ணத்தை அவர் கொண்டிருக்கவில்லை. அனைத்துலகை ஏமாற்றி விடுதலைப்புலிகளைச் சமாதானத்துக்கு விரோதமானவர்களாக காட்டி புலிகளுக்கு எதிராக சர்வதேசத்தின் உதவியைப் பெற்று தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்து விடுவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்தச் சதுரங்க விளையாட்டில் அவர் பதவியைப் பறிகொடுத்தது மட்டுமல்லாது சிறிலங்காவின் சனாதிபதிப் பதவியையும் அவரால் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது.

இதன் பின்னர் பதவியேற்ற மகிந்த ராஜபக்ச இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ஏற்றுக் கொள்ளாதவராக இருந்தார் அதாவது இந்த ஒப்பந்தம் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான வலுச்சம நிலையின் அடிப்படையில் இரு தரப்பையும் சமதரப்பாக ஏற்றுக் கொண்டது. இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போது அவரது கட்சியின் தலைவியாகிய சந்திரிகா அம்மையார் உயர் பதவியாகிய சனாதிபதிப் பதவியிலிருந்து கொண்டு அமைச்சரவைக்கு தலைமைவகித்துக் கொண்டிருந்ததன் மூலம் அதனை ஏற்றுக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் இப்போது மகிந்த ஒப்பந்தத்தை படிப்படியாகச் சிதைத்து அதனைச் செயலிழக்கச் செய்து அதனை இப்போது கைவிட்டு வெளியேறியிருக்கின்றார். அனைத்துலகம் அல்லது மேற்குலகத்தைப் பொறுத்தவரை பெயரளவிலேனும் இந்த ஒப்பந்தம் நீடித்துச் செல்ல வேண்டும் என்பதே விருப்பமாக இருந்தது ஆனால் இந்த விருப்பத்திற்கு மாறாக தொடர்ச்சியாக செயற்பட்டு போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி வந்த மகிந்த இப்போது அதிலிருந்து விலகி விடுவது என்ற நிலைக்கு வந்திருக்கின்றார்.

இதற்கு மேற்குலகம் கவலை தெரிவிப்பதற்கும் மேலாக என்ன செய்யப்போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும். இது ஒருபுறமிருக்கமகிந்த அரசாங்கம் இதன் மூலம் எதனைச் சாதித்து விட முடியும் என எதிர்பார்க்கிறது கடந்த இரண்டு வருடங்களாக அது எடுத்த இந்த இராணுவ நடவடிக்கையும் எதிர் கொண்டவர்கள் விடுதலைப்புலிகளே தவிர போர் நிறுத்த ஒப்பந்தத்தால் இவற்றில் ஒன்றைக் கூட தடுத்து நிறுத்திவிட முடியவில்லை அவ்வளவு தூரம் செயலிழந்து போன ஒன்றை வெளிப்படையாகவே கைவிட்டு விட்டதன் மூலம் ஜே.வி.பி பெருமைப்பட்டுக் கொள்ளவேனும் ஒரு விடயத்தை மகிந்த உருவாக்கிக் கொடுத்துள்ளார் என்றே கூறலாம்.

இப்பொழுது தொடர்ச்சியாகப் புலிகளைத் தடைசெய்தல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாதிருத்தல் என அடுத்ததாக ஜே.வி.பி. முன் வைத்திருக்கின்ற கோரிக்கைகளை மகிந்த அரசு ஏற்றுக் கொள்ள தயாராகவே உள்ளது. ஆனால் ஜே.வி.பி. தனது தேசப்பற்றுக்கு கிடைத்த வெற்றியாக இதனைப் பரப்புரை செய்யுமே தவிர மகிந்த ஆட்சி மக்களுக்கு நன்மைகளைச் செய்வதாக அது கூறப் போவதில்லை. அகிந்த அரசு இந்த விடயத்தில் மேற்கொள்கின்ற கண்மூடித்தனமான செயற்பாடுகளின் விளைவுகளையும் ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளப்போவதில்லை அவற்றையெல்லாம் மகிந்தவே ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

■ வேலவன்






சிறிலங்காவிற்கான ஆயுதஉதவியைக் கண்டித்து
இந்திய நாடாளுமன்றம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

06.02.08

















சு.தமிழினி

# புன்னகை மொழியினாலே புலிப்போர் வீரம் புகட்டியவர்

2007 நவம்பர் 2 ம் திகதி காலை புலர்ந்ததும் இரவு கழிந்ததும் எவ்வாறு நடந்ததெனப் புரிபடாதிருந்தது. சிறிலங்காவின் வான்படை அந்த அதிகாலைப் பொழுதில் கிளிநொச்சியில் வீசிய குண்டுகளின் சிதறல்கள் உலகெங்கும் வாழும் தமிழர்களின் இதயங்களைக் கிழித்தது. விழி வழியே நீரல்ல, குருதியே கொட்டிக்கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இரண்டரை தசாப்தங்களாக ஓயாது வீசிக்கொண்டிருந்த புயல் ஓய்ந்துவிட்டது. விடுதலைப் பயணத்தில் படிப்படியாகத் தன்னை வளர்த்து, தன் பணிகளை விரிவாக்கி, தன் போராளிகளை உருவாக்கிய வீரியம் மிக்க சீறும் புலியொன்று தன் உடனிருந்த ஆறு தோழர்களுடன் மூச்சடங்கிப்போனது. அந்த நாளில் தமிழர்கள் அனைவரினதும் வழமைகள் முடங்கிப்போயின. தம் வீட்டிலே ஒருவரை இழந்து விட்டாற்போல தேசமே துயரில் மூழ்கியது. உலகமெலாம் சிதறிக் கிடக்கும் இனமானம் மிக்க உறவுக்கொடிகள் இழந்து போன தம் விடுதலை வீரர்களின் உணர்வில் துயரத் தவிப்புடன் பிணைந்து கொண்டனர்.

பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் எத்தனையோ அன்னையர்க்கு பாசமகன், இனிய சகோதரன், போர்க்களத்திலும் போராட்டப் பணிகளிலும் கனிவுடன் கண்டிப்பும் மிக்க தளபதி, பொறுப்பாளன், கொள்கையால் ஒன்றுபட்ட அயலவர்களுக்கெல்லாம் அன்பு நண்பன். தமிழர் வாழ்வில் நிலையான சமாதானம் வேண்டி உலகமெல்லாம் புன்னகைப் பூ விரித்தபடி வலம் வந்த தமிழர்களின் பெருமை மிகு இராஜதந்திரி. எல்லாவற்றிற்கும் மேலாக எதற்கும் அசையாத மலை போன்ற தமிழினத்தின் தலைவர் திரு.வேபிரபாகரன் அவர்களினால் பன்முக ஆற்றல்களோடு பார்த்துப் பார்த்து வளர்த்தெடுக்கப்பட்ட அவரின் இதயம் கவர்ந்த தளபதி.

பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் போராட்ட வாழ்க்கை வரலாறு என்பதும் இனத்தின் விடுதலை மீதான இலட்சியப் பற்றுறுதி என்பதும் வெறும் வார்த்தைகளால் வரி விபரிப்புகளால் வரைந்து விட முடியாத நீள் சரிதம். அவரின் ஒவ்வொரு அசைவுகளிலும் ஒரு விடுதலை வீரனுக்கே உரித்தான வாழ்க்கையின் ஆயிரம் அர்த்தங்கள் மிளிர்ந்துகொண்டிருந்தன. தீர்க்கமான இலட்சியம் ஒன்றினை வரித்துக் கொண்ட புரட்சியாளனுக்கு அதுவே கடப்பாலான வாழ்க்கையின் இன்னொரு பக்கம் இருக்கவே முடியாது என்பதற்கான நேரடி சாட்சியம் தான் இவரது வாழ்க்கை.

பள்ளி வகுப்பிலே அனைவரையும் விட புத்தி சாதுரியம் மிக்க, அமைதியும் அடக்கமுமான, மெல்லிய தோற்றமுடைய ஒரு பள்ளி மாணவன் தனது பதினேழாவது அகவையில் மாற்றி உடுப்பதற்குரிய ஒரேயொரு சாரத்தோடு வீட்டை விட்டு வெளியேறுகின்றான். நாட்காட்டி ஒன்றிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட தாளின் மறுபக்கத்தில் எழுதப்பட்டிருந்த ஒரு சங்கேதக் குறிப்பு அவனை வழிநடத்தியது. 'குறிப்பிட்ட நேரத்தில் குறித்த இடத்தில் நிற்கவும்'. போராளிகளுக்குரிய அடிப்படை இராணுவப் பயிற்சியைப் பெறுவதற்காக [illegible] னோடு கடல் கடந்து தமிழ்நாட்டுக் கரையில் அந்த [illegible]

களிலும் சர்வதேச இராஜதந்திர உலகிலும் தமிழீழத்தின் முகவரியாக தன் புன்னகையைப் பதிவு செய்து கொண்ட பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் புரட்சிப் பயணம் இவ்வாறு தான் ஆரம்பமாகியது.

ஆரம்பப் பயிற்சி முகாமில் அதிகம் அறியப்பட்டிராத மெலிந்த உருவம். தேசியத் தலைவர் அவர்கள் பயிற்சியைப் பார்வையிட்ட நாளில் சூட்டுப் பயிற்சித் தளத்தில் தன் குறிபார்த்துச் சுடும் திறமையால் தலைவர் அவர்களின் கவனத்தைக் கவர்ந்தார். அந்த இளைஞனின் மெல்லிய கரங்களை அன்போடும் எதிர்பார்ப்போடும் பற்றியது தலைவர் அவர்களின் உறுதிமிக்க கரங்கள். "இவன் என்னோட வரட்டும்" என அழைத்துச் சென்றார். அவரின் தீர்க்க தரிசனம் மிக்க கூரிய விழிகள் மிகவும் துல்லியமாக ஒரு ஆற்றலாளனை இனங்கண்டு கொண்டது. தன் வாழ்வின் இறுதி நாள் வரை அந்தத் தலைவரிடம் மிகவும் நம்பிக்கைக்குரிய போராளியாக, பாசம் மிக்க தம்பியாக, வல்லமை மிக்க தளபதியாக அருகிருந்து போராட்டப் பணியாற்றினார் பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள்.

உலகப் புகழ் பெற்ற விடுதலைப் போராளிகள், தலைவர்கள் எனப்படுவோர் பல்வேறுபட்ட நூல்களைப் படித்து பல தலைவர்களின் வாழ்க்கைச் சரிதங்களைக் கற்றறிந்து பல தத்துவங்களை ஆய்வு செய்து தம் இலட்சியத்தையும் தலைமையையும் தெரிவு செய்ததை பற்றி அறிந்துள்ளோம். ஆனால் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டின் நவீன அரசியல் அரங்கத்திலும் சரி நவீன இராணுவ தொழிநுட்பத்திலும் சரி உலகப் புகழ் பெற்ற விடுதலைப் போராட்ட அமைப்பாக விளங்கும் எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உலகமெல்லாம் அறியப்பட்ட முக்கிய போராளியான பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் கற்றறிந்த, கற்றுக்கொண்டேயிருந்த ஒரேயொரு புத்தகம் எமது தேசியத் தலைவர் மேதகு வேபிரபாகரன் அவர்கள் தான். இது மிகைப்படுத்தல் அல்ல. சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட போராளிகள் ஒவ்வொருவரும் புரிந்துகொண்ட அவர்களின் ஆளுமையைத் தொட்டு அசைக்கின்ற சர்வ நிச்சயமான உண்மை. அவர் 'தமிழீழம்' என்கின்ற சுதந்திர தேசத்தை அதன் ஒளிமயமான எதிர்காலத்தை தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்தும் செயற்பாட்டிலிருந்துமே தரிசனம் செய்தார். அதனால் தான் தலைவரின் கட்டளைகளை மட்டுமே ஏற்று நடக்கும் தளபதி என்ற தன்மைக்கும் அப்பால் தலைவரின் சிந்தனை ஓட்டத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் செயல் வடிவம் கொடுக்கும் சிற்பியாக தன் தாய் நாட்டின் விடுதலையை செதுக்கிக் கொண்டிருந்தார்.

தாய்ப்பறவை ஒன்று தன் அலகுகளில் இரை மீட்டு தன் சின்னக் குஞ்சுகளுக்கு திகட்டத் திகட்ட தீத்துவது போல பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களும் தன் நீண்ட போர்ப்பயணத்தின் அனுபவங்களை இடையறாத பணிகளின் இடைவெளிகளில் இனிய புன்னகையோடு நினைவு மீட்பார். தன் இயல்பான விபரிப்புத் [illegible]

அழைத்துச்சென்றுவிடுவார். வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு அது பம்பலடித்துச் சிரித்து பழைய கதை பேசிக் கழியும் ஒரு பொழுதாகத்தான் இருக்கும். ஆனால் அந்த சிரிப்புக்கூடாகவும் கதைக்கூடாகவும் இரத்தமும் தசையுமான ஒரு போராட்ட வரலாறு போதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்.

போராட்டப் பயணத்தின் பாதை எப்பொழுதுமே ஒரே சீராக இருப்பதில்லை. கரடு முரடானதாகவும் சிலவேளைகளில் நீண்ட நெருப்பாறுகளை கடக்க வேண்டியதாகவும் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் மிகவும் வசீகரமானதாகவும் மலர்கள் தூவப்பட்டதாகவும் கூட இருக்கும். ஆனால் ஒரு இலட்சியவாதிக்கு இவை இரண்டுமே ஒன்றுதான். பட்டுக்கம்பளத்தின் மீது நாகுக்கான நடை பயிலவும், கூர் தீட்டப்பட்ட கத்தியின் முனையில் இரத்தம் சிந்தும் தீரத்தோடு நடை பயிலவும் முடியும். அப்போதுதான் அவன் தனது இலக்கை அடைய முடியும். அதுபோலவே இவரிடமும் எந்தக் காலத்திலும் எவ்விதமான குழப்பங்களும் இருந்ததில்லை.

"அப்ப இந்தியன் ஆமிக்கை கொஞ்சக் காலம் எனக்கு அண்ணையோடை தொடர்பே இல்லை. ஆனா நான் என்னோடை நின்ட பெடியளுக்குச் சொல்லுவன் அண்ணை இப்ப தான் என்னோடை கதைச்சவர். எங்களிட்டை நிறைய எதிர்பார்க்கிறார். நாங்கள் திறமாச் செய்ய வேணும். IPKF க்கு நல்ல அடி கொடுக்க வேணும். அது இதென்று. இவங்கள் நம்பிடுவாங்கள். பிறகொரு சண்டையிலை இந்தியனிட்டை ஒரு செற் எடுத்து அதைப் போட்டு திருகு திருகென்டு திருகி ஒரு மாதிரிக் கடைசிலை அண்ணையோடை தொடர்பு கிடைச்சது. பிறகு நான் அண்ணையைச் சந்திக்கிறதுக்கு மணலாத்துக்குப் போகேக்கை நினைச்சுக்கொண்டு போறன் அண்ணை காட்டுக்கை தானே, பாதுகாப்பாக இருப்பார் என்டு. போற வழி முழுக்க இந்தியன். சாப்பாடென்டா பெரிய பிரச்சினை. நான் எப்பவும் என்ர கோல்சருக்கை பம்பாய் வெங்காயம் வைச்சிருப்பன். போய்ச் சேருமட்டும் கொஞ்சம் கொஞ்சமா அதைக் கடிச்சுக்கொண்டு தான் சோறு சாப்பிடுறது. பிறகு அங்கை அண்ணையை இடத்துக்குக் கிட்டப் போய்ப் பார்த்திட்டு விறைச்சுப் போனன். ஏனென்டா அண்ணையை இடத்துக்காலை இந்தியன் நகர்ந்து கொண்டிருக்கிறான். அண்ணை ரைபிள் கோல்சர் எல்லாம் கட்டி சண்டைக்குத் தயாராக நிக்கிறார். பிறகு தென்மராட்சிக்குத் திரும்பி வந்து பெடியளோடை கதைக்க அவங்கள் அழுதவங்கள் அண்ணை இவ்வளவு நெருக்கடிக்கையோ நிக்கிறார் என்டு. பிறகு தென்மராட்சியிலை ஒவ்வொருத்தரும் நெருப்பு மாதிரித்தான நின்டவங்கள்."

"அந்தக் காலத்திலை ஆரம்பத்திலை ஒவ்வொரு நாளுமே பிரச்சினை தான். படுக்கவும் இடமில்லை. சாப்பாடும் இல்லை. மழை பெய்யப் பெய்ய மாட்டுக் கொட்டிலுக்கை இரவு முழுக்க அந்த மணத்துக்கை கொசுக் கடியிலை படுத்துக் கிடப்பம். அப்ப அம்மாக்களும் எப்பிடியோ தொடர்பேற்படுத்தி வா வா என்டு கொண்டு திரிவினம். நீ வா நாங்கள் என்ன கஸ்டப்பட்டெண்டாலும் அங்கை அனுப்பிறம் இங்கை அனுப்பிறம் என்டுவினம். ஆனால் அவையளை [illegible]

தமிழ் ஆவணக்காப்பகம்

வராது. அங்கை அண்ணை எவ்வளவோ கஷ்ரப்பட்டுக் கொண்டிருக்கிறார். எங்களோடை நிக்கிற பொடியள் நாளாந்தம் வீரச்சாவடைந்து கொண்டிருக்கிறாங்கள். இந்தியனை அடிச்சுக் கலைக்க வேணும் என்டதைத் தவிர வேற எதுவும் சிந்தனையிலை வராது."

இவ்வாறு தான் தன் போராட்ட வாழ்வெனும் பெரு நதி ஓட்டத்தினை அங்குமிங்கும் சிறு சிறு துளிகளாக அள்ளித் தெளித்துத் தெளித்து தன் போராளிகளை உருவாக்கினார். தலைமையின் தொடர்பு கிடைக்காமல் போனபோது கூட அவரது எண்ணங்கள் எவ்வாறு அமையும் என உணர்ந்து அதற்கேற்ப போராளிகளை வழி நடத்திய அவரின் வீரம் அற்புதமானது. தேசியத் தலைவருக்கு மிக நெருக்கமாக நின்று பணி செய்தவராக இருந்த போதும் தன் இறுதிக் காலம் வரை தலைவர் அவர்களின் ஆற்றலின் வீச்சுக்களிலிருந்து அபரிதமான புதிய புதிய தரிசனங்களை பெற்றுக்கொண்டே இருந்தார். அந்த அனுபவத் திளைப்புக்களை தன் போராளிகளோடு தினசரி பகிர்ந்து கொண்டும் இருந்தார்.

1995.07.16 யாழ்ப்பாணம், சங்கானை, சண்டிலிப்பாய் பகுதி மீது அப்போதைய சந்திரிக்கா அரசு முன்னேறிப்பாய்ச்சல் என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. பெருமளவு மக்களின் உயிரிழப்புக்களுக்கும் பொருள் இழப்புக்களுக்கும் காரணமான இந்த நடவடிக்கையை எதிர்த்து முறியடிப்புத் தாக்குதல் ஒன்றுக்கு தேசியத் தலைவர் அவர்கள் திட்டமிடுகிறார். மிகவும் வெற்றிகரமாக புலிப்பாய்ச்சல் எனும் இச்சமர் நடந்து முடிந்திருந்தது. அடுத்த சில நாட்களில் தன் போராளிகளின் சந்திப்பு நிகழ்வொன்றில் சந்திரிகா அரசுடனான சமாதானத் திரை கலைந்து மீண்டும் போர் மூண்டு விட்ட அக்கால அரசியல் இராணுவ நிலைப்பாடுகள் பற்றி மக்களுக்கு எவ்விதம் விளக்கம் கொடுக்க வேண்டும் எனத் தெளிவு படுத்திக் கொண்டிருந்தார். "சந்திரிகா அரசு பெரிய கற்பனையோடு மேற்கொண்ட இந்நடவடிக்கையை நாங்கள் முறியடித்துள்ளோம். இந்த வெற்றிக்காக எமது தலைவர் எந்தளவு தன்னை வருத்தி இரவு பகல் பாராது உழைத்தார் என்ற விடயத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்தச் சண்டையைப் பற்றி அண்ணை இரவிரவா தளபதிகளோடை கதைச்சுக் கொண்டிருக்கிறார். நள்ளிரவு கடந்திட்டுது எங்களுக்கு நித்திரை கண்ணைச் சுழட்டுது. ஒரு மாதிரி சந்திப்பு முடிந்து வெளியாலை வாறம். அடுத்தநா அண்ணையைச் சந்திக்க எங்கடை கடற்புலித் தளபதி சூசை வந்து நிற்கிறார். எனக்கு விசராக்கிப் போட்டுது. அண்ணை விடிய விடிய நித்திரையும் இல்லாமல் உழைக்கிற உழைப்புக்கு உந்தச் சண்டை வெற்றியிலைதான் முடியும் என்டதை அப்பவே உணர்ந்தேன்" எனக் கூறினார். ஆம் புலிப்பாய்ச்சல் நடவடிக்கை தரைவழியாக மேற்கொள்ளப்பட்ட அதே நேரம் காங்கேசன்துறை கடற்படைத் தளத்திலுள்ள பெரும் கடற் சமர் ஒன்றினை கடற்புலி அணியினர் நடாத்தியிருந்தனர். எமது தலைவர் அவர்கள் எமது போராட்டத்திற்கு நெருக்கடிகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதை எவ்வாறு முறியடித்து வெல்லுகின்றார் என்பதனை தன் போராளிகளுக்கு ஊட்டுவதன் மூலம் தலைவருக்குப் பக்கபலமாக இருந்து என்ன இடர்பாடுகள் வந்தபொழுதும் நம்பிக்கையோடும் உறுதியோடும் உழைக்க வேண்டும் என்ற உணர்வை வளர்த்தார்.

1998 ஓயாத அலைகள் - 02 கிளிநொச்சி மீட்புச்சமரின் வெற்றிக் களிப்பில் அனைவருமே திளைத்திருந்தபோது இந்த வெற்றிக்கான மூலவேர் எமது தலைவர் அவர்கள் தான் என்பதைத் தன் போராளிகளுக்கு விளங்கப்படுத்துவதற்கு ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார் பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள். "முதல் நாள் சமரில் எமது அணிகள் பல இடங்களை மீட்டெடுக்கின்றன. இரண்டாம் நாள் சமரில் எம்மால் மீட்கப்பட்ட சில இடங்களை எதிரி மீண்டும் கைப்பற்றுகிறான். சமர்க்களம் மிகவும் தீவிரமடைகிறது. அப்போது தொடர்ச்சியாக களமுனையில் நிற்கின்ற காரணத்தால் போராளிகள் பலர் சோர்வடைகின்றனர். தளபதிகளும் நம்பிக்கையைத் தளர

தான் நான் என் வாழ்நாளில் மறக்க முடியாத அண்ணையின் ஒரு உணர்ச்சி பூர்வமான தோற்றத்தைப் பார்த்தேன். "சரி இனி இந்தச் சண்டையை நான் மாத்திக் காட்டுறன்" என மிகவும் உறுதியோடு தலைவர் அவர்கள் தெரிவித்தார். தளபதிகளை அழைத்துக் கட்டளைகளைப் பிறப்பித்தார். நிலைமைக்கேற்ப புதிய திட்டங்களை வகுத்து உடன் செயற்படுத்தத் தொடங்கினார். மூன்றாம் நாள் காலை புலரத் தொடங்கிய போது களமுனையிலிருந்த போராளிகளும் தளபதிகளும் அறிவிக்கின்றார்கள் "ஆமி ஓடிக்கொண்டிருக்கிறான்" என்று இவ்வாறு தான் தலைவர் அவர்களின் முடிவெடுக்கும் ஆற்றல் பற்றியும் அது எவ்வாறு எம்மை எல்லாம் வெற்றிக்குச் சொந்தக்காரர்கள் ஆக்குகின்றது என்பது பற்றியும் உணர்த்தினார்.

சமாதானப் பேச்சுக்களின் முக்கிய பிரதிநிதியாக சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் கலந்துகொண்டு தமிழீழத்தின் இராஜதந்திரியாக சர்வதேச சமூகத்திற்கு தமிழர் தரப்பின் போராட்ட நியாயப்பாடுகளை எடுத்துரைத்துக் கொண்டிருந்த காலப்பகுதியில் 'சமாதானப் பேச்சுக்கள்' என்பதற்குப் பின்னாலுள்ள எதிரியின் குள்ளநரித்தனங்கள் பற்றியும் சர்வதேச சமூகத்தின் மனநிலை பற்றியும் இவை அனைத்தையும் கையாளும் எமது தேசியத் தலைவர் அவர்களின் மதிநுட்பமான இராஜதந்திர காய்நகர்த்தல்கள் பற்றியும் தன் போராளிகள் பொறுப்பாளர்களுக்குத் தொடர்ச்சியாக எடுத்துரைத்த வண்ணமே இருப்பார். ஒரு தடவை "இந்த முறை பேச்சுக்குப் போறதுக்கு முதல் உண்மையிலை எங்களுக்கொரு பெரிய பிரச்சினை இருந்தது. என்னென்டால் எங்கடை விமானப் படையைப் பற்றின விடயம். சிறிலங்கா அரச தரப்பு அதைப் பெரிய விடயமாக்கிக் கிண்டப் போறாங்கள். அனுசரணையாளர்களும் இதைப் பற்றித் தான் கதைக்கப் போறாங்கள். ஊடகக்காரர்களும் இதைப் பற்றித்தான் பிடுங்கப் போகிறார்கள். என்ன செய்யிறதென்டு நாங்கள் முழுசிக் கொண்டிருந்தம். ஆனால் அண்ணை சிம்பிளாச் சொன்னார் "ஓம் விமானம் வைச்சிருக்கிறம் என்டு சொல்லு" அப்ப பிறகென்ன நாங்களும் வலு சந்தோசமாய் அங்கை போனால் அவங்கள் பேச்சுத் தொடங்கின உடனுமே இந்த விசயத்தைத் தான் எழுப்பினாங்கள். நாங்கள் சொன்னம் "விமானம் தானே ஓம் அது எங்களிட்டை இருக்குது" என்று. அவங்கள் அவ்வளவு பேரும் விறைச்சுப் போனாங்கள். உண்மையிலை அண்ணை சொன்ன மாதிரி நாங்கள் ஒத்துக் கொண்டபடியால் சிறிலங்கா அரசு தரப்புக்கு அடுத்த கேள்விக்கு இடமில்லாமல் போட்டுது. இல்லாட்டில் அதையே வைச்சு பிடுங்கு பிடுங்கென்டு பிடுங்கிக் கொண்டிருந்திருப்பாங்கள். யோசிச்சுப் பாருங்கோ எங்கடை அண்ணை எதிரியையும் இந்த உலகத்தையும் எவ்வளவு வடிவா எடைபோட்டு வைச்சிருக்கிறார் என்டு. அதோடை இன்னுமொன்டையும் விளங்கிக் கொள்ளுங்கோ. அண்ணை சும்மா ஒன்டையும் சொல்லமாட்டார். இனி வரப்போற சண்டையிலை உலகத்துக்கது தெரியவரும்"என பூரிப்போடு அவர் கூறிக்கொண்டிருந்தார்.

தமிழீழ தேசியத் தலைவரைப் பற்றி கதைக்கும் போது அந்த எண்ணங்களுக்குள் ஆழமாக லயித்து மிகவும் உள்ளார்ந்த ரீதியில் கதைத்துக்கொண்டிருப்பார். வார்த்தைகள் மிக இயல்பாக ஒரு பிரவாகம் போல கொட்டிக்கொண்டே இருக்கும். ஒரு சம்பவத்தை ஒரு தடவை மட்டுமல்ல பல தடவைகளில் பல போராளிகளின் மத்தியில் விளக்கிய வண்ணமே இருப்பார். அவரோடு அடிக்கடி தொடர்புபடும் போராளிகளுக்கும் பொறுப்பாளர்களுக்கும் தெரியும், எமது போராட்டத் தலைமை மீதான பற்றுறுதியுடன் ஒவ்வொரு போராளிகளும் வளரவேண்டும் என்பதே அவரது வேணவாவாக இருந்தது. அவரின் ஆன்மாவின் பாடலே அண்ணையாகத்தான் இருந்தார்.

26.03.2007 அன்று வான்புலிகள் தென்னிலங்கையில் கட்டுநாயக்கா இராணுவ விமானப் படைத்தளம் மீது தாக்குதல் நடாத்தி

பறந்தது. பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் அந்த வெற்றிக்கான உழைப்பைச் செலுத்திய வான்புலிகளின் திறனை வியந்து தன் போராளிகளுக்குக் கூறிக்கொண்டிருந்தார். "இந்த வெற்றிக்குக் காரணம் அந்தப் போராளிகளின் இடைவிடாத முயற்சியும் உழைப்பும் நம்பிக்கையும் தான். முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை" என்பதை வான்புலிகளைப் பாராட்டிய தலைவரின் உணர்வுகளைக் கூறி தெளிவுபடுத்தினார்.

அனுராதபுர இராணுவ விமானத் தளத்தினுள் கரும்புலி அணியும் வான்புலிகளும் இணைந்து நடாத்திய வெற்றிகரமான சமர் அவரிடம் பெரு வகையை ஏற்படுத்தியிருந்தது. "அனுராதபுரத் தளம் துடைத்தழிக்கப் பட்டுவிட்டது" எனக் கூறி மகிழ்ந்த அவர் இன்னுமொன்றையும் கூறினார். "எல்லாப் பிரச்சினையும் எங்கடை தலையிலை தான் என்டு பார்த்துக் கொண்டிருந்த உலகத்திற்கு ஒரு இரவிலை எங்கடை பலம் என்னென்டிறதைக்காட்டி எல்லாப் பிரச்சினைகளையும் எதிரியின்ரை தலைக்கு மாத்தியாச்சிது" எனக் கூறினார். இந்த 'எல்லாளன்' வெற்றி நடவடிக்கையில் சிறப்பாகச் செயற்பட்ட போராளிகளுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உயர் இராணுவ விருதுகளை வழங்கி மதிப்பளித்தார். மரபு வழிப் படைத்துறை வளர்ச்சியின் உயரிய அம்சமான இந்த விருது வழங்கும் நிகழ்வுதான் இந்த விடுதலை வீரனின் நெருப்புவிழிகள் இறுதியாகத் தரிசித்த வரலாற்றுக் காட்சி. அந்தக் கணங்களில் அவரது மன எழுச்சி எவ்வாறு இருந்திருக்கும். அதனை எவ்விதமாகத் தன் போராளிகளோடு உரையாடத் துடித்திருப்பார். ஆனால் அதற்கு மறுதினமே தேசியத் தலைவரிடம் 'பிரிகேடியர்' என்ற தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அதிஉயர் இராணுவ நிலையைப் பெற்று தன் நினைவுகளை தமிழ் நெஞ்சங்கள் தோறும் நிலைபெறச் செய்து விடுதலைப் பயணத்தின் பாதியில் விடைபெற்றுக் கொண்டார்.



அவர் 'தமிழீழம்' என்கின்ற சுதந்திர தேசத்தை அதன் ஒளிமயமான எதிர்காலத்தை தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்தும் செயற்பாட்டிலிருந்துமே தரிசனம் செய்தார். அதனால் தான் தலைவரின் கட்டளைகளை மட்டுமே ஏற்று நடக்கும் தளபதி என்ற தன்மைக்கும் அப்பால் தலைவரின் சிந்தனை ஓட்டத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் செயல் வடிவம் கொடுக்கும் சிற்பியாக தன் தாய் நாட்டின் விடுதலையை செதுக்கிக் கொண்டிருந்தார்.

அவர் மாவீரர் ஆவதற்கு முதல்நாள் அரசியல்துறையின் மகளிர் பொறுப்பாளர்களை சந்தித்தபோது இவ்வாறு கூறியிருந்தார் "ஒரு போராளி எவ்வளவு காலம் இயக்கத்தில் இருக்கிறான் என்பது முக்கியமில்லை. அவன் உண்மையான போராளியாக மாற வேண்டுமானால் விழுப்புண் ஏற்று இயங்க முடியாத நிலையை அடைந்திருக்க வேண்டும் அல்லது மாவீரராகி இருக்க வேண்டும் அல்லது தமிழீழம் கிடைத்திருக்க வேண்டும்." ஒரு போராளி இறுதி வரை கடினமாக உழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். இன்று தான் மாவீரர் ஆகியதன் மூலம் நிலையான போராளி என்ற தகுதியை பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் அடைந்து விட்டார்.

இசைச்செல்வி அவர்களை மனப்பூர்வமான வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்ட அந்தப் புரட்சியாளனின் திருமண நிகழ்வு கூட ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாகவே அமைந்தது. ஒரு ஆணும் பெண்ணும் வாழ்வில் இணையும் நிகழ்வு பெரியோர்களின் ஆசியுடன் அமைய வேண்டுமே தவிர ஊர் கூடும் பெருவிழாவாக அமைய வேண்டியதில்லை எனக் கருதினார். தனக்கு எல்லாமுமாகிய தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் குடும்பம் உட்பட ஓரிரண்டு குடும்பங்களுடன் பத்துப் பதினைந்து பேரோடு நடந்தேறியது அந்தத் திருமண நிகழ்வு. வீடுகளிலே நடாத்துகின்ற கொண்டாட்டங்கள் பற்றி அவர் தன் போராளிகளோடு பகிர்ந்து கொண்ட போது இவ்வாறு கூறினார் "நாங்கள் ஒரு போராட்டச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மக்கள் பல வேறுபட்ட துன்ப துயரங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். போராளிகளாகிய நாங்கள் மக்கள் ஏற்றுக் கொண்டு மதிக்கத்தக்க வகையில் எங்களுடைய வாழ்வின் நடைமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்". தனது போராளிகளும் இவ்வாறான கொள்கைப் பண்பு கொண்டவர்களாகவே இருக்கவேண்டும் என விரும்பினார். இரண்டு மழலைச் செல்வங்களைக் கொண்ட அவரது குடும்பத்திற்கும் பல விசேட தினங்கள் வந்துதான் போனது. அரை மணித்தியாலமோ ஒரு மணித்தியாலமோ ஓடி வந்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து விட்டு தன்கடமைகளை நோக்கிச் சென்று விடும் அவருக்கு அந்தக் கூரைக்குள்ளே வசிப்பும் மனிதர்களைத் தவிர வெளியிலிருந்தினர்களின் வருகைக்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. அந்தக் குடும்பத்தின் எந்த நிகழ்வுகளுமே வாசற்படிக்கு வெளியே சென்றதில்லை. அவரது இறுதி வணக்க நிகழ்வுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டின் முன்றலில் கொட்டகை அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது அவரது துணைவியார் கலங்கி அழுதவாறு கூறினார் "உங்கடை தமிழ்ச்செல்வன் அண்ணேன்ரை வீட்டிலை ஒரு நிகழ்வுமே நடக்கேல்லை. இப்ப அவருக்கு நிகழ்வு நடக்கப்போகுது".

ஆம் அந்த நிகழ்வு நடந்தது. அது என்ன ஒரு குடும்பத்தின் நிகழ்வா? ஒரு விடுதலை அமைப்பின் நிகழ்வா? ஒரு தேசத்தின் நிகழ்வா? இல்லையே உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழினத்தின் இதயத்தைப் பிழிந்த நிகழ்வு. தனது குடும்பத்துடன் ஒரு முழு நாளையேனும் செலவிடுவதற்கு நேரம் கிடைக்காத இந்தப் புரட்சி வீரனுக்கு உலகத் தமிழினமே தன் நாட்களை ஒதுக்கி அவரை நினைவு கூரும் நிகழ்வுகளை நடாத்தியது. ஏனெனில் அவரது வாழ்வின் மணித்துளிகள் ஒவ்வொன்றும் தனக்காகவன்றி தன் இனத்தின் விடுதலைப்பணிக்காகவல்லவோ கழன்று கொண்டிருந்தது.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களிடம் தீர்க்கமான பல விடயங்களை முன்வைப்பார். அவை ஒவ்வொன்றுமே ஒரு புரட்சிகரமான அரசியல் போராளியின் பண்புகளை வளர்த்தெடுப்பதாகவே அமையும். அவரது இறுதி வணக்க நிகழ்வு அவர் கூறிய கருத்தொன்றினை மீள் நினைவூட்டியது. "நாங்கள் அரசியல்வாதிகளல்ல. அரசியல் போராளிகள். எங்களுக்கு தனிப்பட்ட பெயர், புகழ் எதுவுமே தேவையில்லை. எமது தலைவர் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு அமைய மக்களின் விடுதலைக்காக உண்மையாக உழைக்க வேண்டும். அர்ப்பணிப்பு உணர்வோடு எமது கடமைகளை சிரமேற்கொண்டு செய்ய வேண்டும். நாம் அப்படிச் செயற்படுகின்றபோது நிச்சயமாக மக்கள் எம்மைப் போற்றுவார்கள்". ஆமாம், தன் மக்களின் விடுதலைக்காக உண்மையான அர்ப்பணிப்புடன் உழைக்கின்ற போது அந்தப் போராளியின் மீது மக்கள் இயல்பாகவே எத்தகைய அன்பைச் செலுத்துவார்கள் என்பதையும் அந்த வீரனின் இழப்புக்காக எவ்வளவு தூரம் வருந்துவார்கள் என்பதையும் அவரது வீரச்சாவு நிகழ்வு வெளிக்காட்டியது. தாயகத்திலும் தாயகத்திற்கு வெளியிலும் அவரை நினைவு கூர்வதற்காக அணிதிரண்ட மக்கள் வெள்ளமும் அவர்கள் வெளிப்படுத்திய உள்ளத்து உணர்வுகளும் தன் வயிற்றுப் பிள்ளை ஒன்றை இழந்து விட்டது போல தமிழ் தாய்மார்கள் புலம்பி அழுத காட்சிகளும் வரலாற்றின் சாட்சிகளாக இருக்கும்.



"தமிழீழத் தமிழர்கள் மட்டுமல்ல உலகத்தில் வாழும் அனைத்துத் தமிழர்களும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால் அவர்கள் வாழுகின்ற நாடு எதுவாக இருந்தாலும் அங்கும் அவர்கள் மதிப்போடும் நிம்மதியோடும் வாழவேண்டுமானால் தமிழர்களுக்கென ஒரு நாடு நிச்சயம் அமைய வேண்டும். அது தமிழீழத் தனியரசாகவே அமையும்" என்பதில் அந்த மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை தமிழீழத் தேசியத் தலைமை மீதான பற்றுறுதியை ஒட்டுமொத்தத்தில் உலகத் தமிழினமே எமது தலைமையின் பின்னால் அணிதிரண்டு நிற்கின்ற உண்மையை நம்பிக்கையோடு எடுத்துச்சொல்வார்.

நள்ளிரவு தாண்டிய பின்னரும், மழை கொட்டிக்கொண்டிருந்த இருள் அடர்ந்த இரவிலும், வன்னியின் காட்டுக் கிராமங்களின் பள்ளமும் திட்டியுமான வீதியோரங்களில் தம் பாசத்துக்குரிய மாவீரனின் திருவுருவப் படத்திற்கு ஒற்றைச் சுடர் ஏற்றி விட்டு அந்தச் சுடரொளியில் ஈரமலர்களுடன் இதயம் வெம்பியழ, தம்நெஞ்சுக்கு மிக நெருக்கமான இனிய புன்னகை சிந்தும் தம் வீரமைந்தனின் வித்துடலைக் காண காத்துக் கிடந்தார்கள் மக்கள். இவர்களின் பிள்ளைகள் தானே இன்று வீட்டுக்கொருவராய் தீரத்தோடு எல்லையில் நின்று எதிரியைத் தோற்கடித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த உறவோடும் உரிமையோடும் போர்க்குணம் மிக்க புலி மகனின் தாய்மடியாக தமிழீழ மண்ணே சிலிர்த்துப் போயிருந்தது. வானத்திலே பெருத்த இரைச்சலோடு மிரட்டிக்கொண்டிருந்த எதிரியின் குண்டுவீச்சு விமானங்களை மக்கள் சக்தி அலட்சியம் செய்துவிட்டு பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் வித்துடல் ஊர்தியின் பின்னால் அணிவகுத்தனர்.

வன்னியின் கிராமங்களில் குடை விரித்த பெருமரங்கள், பொது நோக்கு மண்டபங்கள், பள்ளிக் கட்டடங்கள் என அவர் தன் மக்களையும் போராளிகளையும் சந்தித்து விடுதலைத் தீ வளர்த்த இடங்கள் ஒவ்வொன்றும் இன்று வெறுமையாகிக் கிடக்கின்றது. அவர் தன் போராளிகளிடம் மிகவும் அழுத்தமாக ...

ஒவ்வொருவரும் பணியாற்ற வேண்டும். மக்களை அணி திரட்ட வேண்டும். மக்கள் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். இதனைத் தான் அண்ணை எதிர்பார்க்கின்றார்" என்பதுதான். அதுபோலவே 1987 இல் தியாகி லெப்.கேணல் திலீபனின் இறுதி ஊர்வலம் மக்களின் ஒருமித்த எழுச்சியின் வெளிப்பாடாக இருந்தது. அதன் பின் 2007 இல் பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வனின் இறுதி ஊர்வலம் உலகமெல்லாம் வாழும் தமிழின உணர்வாளர்களை இலட்சியத்தால் ஒன்றிணைத்த எழுச்சியின் பெரு வெளிப்பாடாக அமைந்தது.

வெளிநாட்டு இராஜதந்திர சுற்றுப்பயணங்களை முடித்துவிட்டு தாயகம் திரும்பும் ஒவ்வொரு தடவையும் தன் போராளிகள் பொறுப்பாளர்களிடம் தான் பெற்ற அனுபவங்களையும் தன் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளுவார். புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்கள் எமது தேசியத் தலைவர் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை அந்த நம்பிக்கையை மெய்ப்பித்து விரைவில் விடுதலையை வென்றெடுக்கப் போராடும் எமது தலைவருக்கு நாம் பக்க பலமாகச் செயற்பட வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துவார். தமிழகத் தமிழ் மக்கள் அதிகமாக வதியும் தென்னாபிரிக்கா பயணம் பற்றி மிகுந்த சிலிர்ப்போடு நினைவு கூருவார். "தமிழீழத் தமிழர்கள் மட்டுமல்ல உலகத்தில் வாழும் அனைத்துத் தமிழர்களும் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால் அவர்கள் வாழுகின்ற நாடு எதுவாக இருந்தாலும் அங்கும் அவர்கள் மதிப்போடும் நிம்மதியோடும் வாழவேண்டுமானால் தமிழர்களுக்கென ஒரு நாடு நிச்சயம் அமைய வேண்டும். அது தமிழீழத் தனியரசாகவே அமையும்" என்பதில் அந்த மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை தமிழீழத் தேசியத் தலைமை மீதான பற்றுறுதியை ஒட்டுமொத்தத்தில் உலகத் தமிழினமே எமது தலைமையின் பின்னால் அணிதிரண்டு நிற்கின்ற உண்மையை நம்பிக்கையோடு எடுத்துச்சொல்வார்.

இன்றைய நவீன பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களையும் அந்த நாடுகளில் மக்களின் நலன் பேணும் சேவைகளையும் ஆழமாக உற்று அவதானித்ததன் மூலம் எமது தமிழீழ தேசம் எவ்வாறானதொரு அபிவிருத்தி அடைந்த தேசமாக அமையவேண்டும் என்பதைப் பற்றியும் மக்களின் நலன்கள் எவ்வளவு உச்சமாக பேணப்படவேண்டும் என்பதைப் பற்றியும் தனக்குள்ளே அகன்ற கனவை வளர்த்திருந்தார். அந்தக் கனவின் வெளிப்பாடாகவே தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையில் உதிக்கும் எண்ணங்களுக்கு நவீன சிந்தனையோடு செயல்வடிவம் கொடுத்துக் கட்டியெழுப்பினார். "ஐரோப்பாவிலை வருசத்திலை அரைவாசிக் காலம் பனிகொட்டுது.

படுத்தா கிடக்கிறான். காது கண்ணை எல்லாத்தையும் மூடிக்கொண்டும் இரவு பகல் பாராமல் உழைச்சுக்கொண்டே இருக்கிறான். அதனாலைதான் இந்தளவு முன்னேறியிருக்கிறான். அந்த நாடுகளோடை ஒப்பிட்டுப் பார்த்தால் எங்கடை நாட்டின்ரை காலநிலை எவ்வளவு சிறப்பானது. வருசம் முழுக்க உழைக்கக் கூடியது. எங்கடை தமிழீழம் ஒரு சொர்க்க பூமி" எனக் கூறும் போது கண்ணாடிக்குள்ளே ஜொலிக்கும் அந்த இலட்சிய விழிகளில் எதிர்காலத் தமிழீழம் பற்றிய கனவு மிளிரும். "ஒரு காலத்திலை ஜப்பான் தானொரு பேரரசாக வரவேணும் என்று செயற்பட்டது. ஆனால் இரண்டாம் உலகப் போர் இந்த நிலையை மாற்றியமைத்தது. அமெரிக்காவினால் அணுகுண்டு வீசப்பட்டு ஜப்பானின் நகரங்கள் அழிந்தது. அதன் பின் ஜப்பானியர்கள் தமது கனவை மாற்றிக் கொண்டனர். குறுகிய காலத்திற்குள் கடுமையாக உழைத்து உலகின் கைத்தொழில் பொருளாதார வல்லரசாக தம்மை வளர்த்துக்கொண்டனர். என்னிடம் ஒரு ஜப்பானியர் சொன்னார் "உலகிலேயே மிகவும் சுறுசுறுப்பான கடின உழைப்பாளிகள் நாம் என்பதில் பெருமைப்படுகிறோம் என்று" இவ்வாறு தன் வெளி உலக அனுபவங்களை எல்லாம் தமிழீழ தேசத்தின் எதிர்கால சந்ததியின் நல்வாழ்வுக்கான உழைப்பாக மாறவேண்டும் என்பதும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தேசத்தைக் கட்டியெழுப்பும் உழைப்பாளிகளாக மாறவேண்டும் என்பதுமே அவரது பெருவிருப்பாகவிருந்தது.

பெண்களின் உரிமைகளை மதித்து அவர்களின் உணர்வுகளைப் புரிந்து நடந்துகொள்வதில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உணர்வுகளை பிரதிபலிப்பவராகவே காணப்பட்டார். பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வு தனக்கு எவ்வாறு வளர்ந்து வந்தது என மிக இயல்பாக ஒரு தடவை பெண் போராளிகளுடனான சந்திப்பின் போது வெளிப்படுத்தினார். "நானும் இந்த சமூகத்திலைதான் பிறந்து வளர்ந்தனான். ஆரம்பத்திலை நாங்கள் தமிழ்நாட்டிலை பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போதுதான் நாட்டிலை இருந்து பெண் போராளிகள் ஆரம்பப் பயிற்சியை எடுப்பதற்காக வந்திருந்தார்கள். எங்களுக்கு ஒரே அதிசயம். இதென்னடா இது. என்னென்று பொம்பிளையள் ஆமியோடை சண்டை பிடிக்கிறதென்று. அதற்குப் பின்னர் எமது தேசியத் தலைவர் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலில் அவர்கள் பயிற்சி எடுத்து சாதிக்கத் தொடங்கின பிறகு தான் எங்கடை பெண்கள் எவ்வளவு வல்லமையானவர்கள் என்பதை நான் புரிந்துகொண்டேன்" எனக் கூறியவர் தன் வழிநடத்தலில் பல நூறு பெண் போராளிகளை உருவாக்கினார். இன்று நெருக்கடி மிக்க போர்க்களங்களை வழிநடத்தும் பெண் தளபதிகள் தொடக்கம் ஆரம்பப் பயிற்சியை முடித்து களமுனையில் பணிபுரியும் அரசியல்துறையின் இளம் பெண் போராளி வரைக்கும் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தமக்குத் தந்த ஆலோசனைகளையும் அன்பையும் புரிந்துணர்வையும் நன்றியோடு நினைவு கூருபவர்களாகவே உள்ளனர்.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் மண்ணில் பெண்களை இழிவாக நடத்தும் எதிரி படைகளுக்கு பதிலடி கொடுப்பதற்காக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் எதிர்பார்ப்பிற்கமைய ஒரு மகளிர் அணி உருவாக்கப்பட்டது. கடினமான பயிற்சிகளைப் பெற்ற அரசியல்துறை மகளிர் அணி லெப்.கேணல் தணிகைச்செல்வி அவர்களின் தலைமையில் நடவடிக்கையில் இறங்குவதற்குத் தயாரானது. அவர்களை தனது வாகனத்தில் தலைவர் அவர்களைச் சந்திப்பதற்காக அழைத்துச் செல்கிறார் பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள். அது ஒரு திருவிழாக் காலம். வீதி வழியே கூட்டம் கூட்டமாகப் பெண்கள் பளபளக்கும் பட்டாடைகளோடு சென்றுகொண்டிருக்கின்றனர். அந்தக் காட்சி அவரது மனதில் ஏற்படுத்திய உணர்வலைகளை பெண் போராளிகளோடு இவ்வாறு பகிர்ந்து கொண்டார். "உன் நடவடிக்கை... போற பிள்ளைகள் எவ்வளவோ கஷ்டப்பட்டு கடும் பயிற்சி ...

யாகவும் நம்பிக்கையோடும் இருந்தார்கள். ஆனால் வெளியே நான் பார்த்த பெண்கள் முற்றிலும் வேறுபட்ட உணர்வோடு இருந்தார்கள். இந்தப் பிள்ளைகளும் இவ்வாறானதொரு சமூகத்திலை இருந்துதானே வந்தார்கள். இவர்களை எமது தலைவர் அவர்கள் எவ்வாறான இலட்சிய உறுதிமிக்க சாதனையாளர்களாக உருவாக்கியுள்ளார்" எனக் கூறி பெருமிதப்பட்டார்.

சமூகப் பெண்களின் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான பல வேலைத்திட்டங்கள் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதில் மிக அக்கறையோடும் உறுதுணையாகவும் இருந்தார். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வேலைத்திட்டங்கள் பல கட்டமைப்புக்களாகச் செயற்படுத்தப்பட்டபோது அதற்கான ஆலோசனைகளையும் தந்து வளங்களையும் ஒழுங்குபடுத்திவிட்டு அந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் மகளிர் பொறுப்பாளர்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு இடமளித்து ஊக்கமளித்து தவறுகளைத் தட்டித் திருத்தி நிறைவுகளை மனமாரப் பாராட்டி பெரும் பலமாக நின்றார்.

சமூகப் பிரச்சினைகளால் வஞ்சிக்கப்பட்ட பெண்கள் தம் எதிர்காலத்தை சீரமைத்துக் கொள்ளும் பொருட்டு பாதுகாப்பாக வாழும் இல்லங்களுக்குச் சென்று அவர்களோடு உரையாடும் போது அவர்களின் உணர்வுகளை ஆழமாகப் புரிந்துகொண்ட சகோதரனைப் போலவே அப்பெண்கள் உணர்வார்கள். இவ்வாறான வேலைத்திட்டங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மகளிர் பொறுப்பாளர்கள் அவரை அணுகுகின்றபோது அப்பணியை மிகவும் முதன்மைப்படுத்தி ஒழுங்குகளை மேற்கொள்கின்ற பண்பு அற்புதமானது. ஒரு தைப்பொங்கல் தினத்தன்று மனநலம் பாதிப்புற்ற பெண்களின் இல்லத்திற்குச் சென்று அவர்களோடு உணவருந்தி அமைதியிருந்து உறவாடி அன்போடு கேட்டார் "NTT பார்க்கிறனீங்களோ" "இல்லையில்லை, நீங்கள் ஒன்று அனுப்பிவிடுங்கோவன்" குழந்தைகளைப் போன்ற மனங்கொண்ட அவர்கள் மிக இயல்பாகக் கேட்டார்கள். "கட்டாயம் அனுப்பிவிடுகிறேன்" என்று விடைபெற்றார். தன் கனதியான பணிகளின் மத்தியிலே இவ்விடயத்தை சற்று மறந்து போனார். சில வாரங்களின் பின் அங்கு சென்ற மகளிர் பொறுப்பாளரிடம் "இவர் குணா பாவா ஒரு NTT அன்ரனா தாறெண்டவர். இன்னும்வர இல்லை. ஆள் வரட்டும் என்று பார்த்துக்கொண்டிருக்கிறம்" என மிகவும் உரிமையோடும் சண்டித்தனமாகவும் கூறினார்கள். இத்தகவல் அறிந்த மறு தினமே அவர்களுக்குரிய தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி அன்ரனா அங்கு உயர்த்தப்பட்டது. பேதலித்துப் போன அந்தப் பெண்களின் மனங்களுடன் உற்ற சகோதரன் போல அவர் கொண்டிருந்த உறவு அடுத்த தைப்பொங்கலுக்கும் தம்மிடம் தம்பி குணா பாவா வருவார் என்ற நம்பிக்கையோடு அவர்களைக் காத்திருக்கச் செய்கிறது.

விடுதலைப் போராட்டத்தில் மாவீரர் ஆனவர்களின் துணைவிமார், குழந்தைகள் விடயத்தில் அதிக அக்கறையும் கவனமும் கொண்டவராக அம்மாவீரர்களின் குழந்தைச் செல்வங்களுக்கு அன்பைப் பொழியும் மாமாவாக இருந்தார். அவர்களின் எதிர்காலம் வளம் மிக்கதாக அமையவேண்டும் என்பது அவரது பேரவா. யாழ் மாவட்டத்தின் உள் நடவடிக்கை ஒன்றில் வீரச்சாவைத் தழுவிய மேஜர் மிதுனன் என்ற மாவீரனின் ஒரேயொரு ஆண் குழந்தைக்கு நவம்பர் எட்டாம் திகதி அன்று மூன்றாவது பிறந்த தினம். தான் கட்டாயம் அக்குழந்தைக்கு அன்றைய நாளில் வாழ்த்துச் சொல்ல வேண்டும் என விரும்பினார். அந்தத் தினத்தை தனக்கு நினைவூட்டி விடுமாறு மகளிர் போராளி ஒருவருக்குக் கூறியிருந்தார். அந்த நாளும் வந்தது. அந்த நாளிலே ஒரு மூதாளர் பேணகத்தில் பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் எட்டாம் நாள் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே மேஜர் மிதுனனின் மகன் தன் ... சிரித்தபடி காட்சி தந்துகொண்டிருந்தான் ...

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamilarchive

தமிழ் மாமா என்ன கொடுக்க நினைத்திருந்தாரோ தெரியவில்லை. ஆனால் அந்தப் பெண் போராளி, தமிழ் மாமா அன்போடு அவனை அள்ளி அணைத்தபடி சிரித்துக் கொண்டிருந்த புகைப்படத்தைச் சட்டமிட்டு கண்ணீரோடு பரிசளித்தார். இன்னொரு மாவீரனின் மனைவி பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் வித்துடலின் மீது கண்ணீர் சொரிந்து கதறினார் "அண்ணா ஒரு ஆலமரத்துக்குக் கீழை இருந்த மாதிரி நம்பிக்கையோடை இருந்தம்". ஒரு மாவீரனின் சகோதரி துடித்தாள் "அண்ணா எங்கடை வீட்டுப் பிணக்கெல்லாம் நீ தானே தீர்த்து வைப்பாய். உனக்காக மரத்திலை முத்தமிட்ட மாதுளம்பழம் இருக்குதண்ணா. பிள்ளைகளைக்கூட நான் பிடுங்க விடுகிறதில்லையே". இவ்வாறு தான் தமிழினமே ஒவ்வொரு உறவு சொல்லி அரற்றியது. துடித்தது. இட்டு நிரப்ப முடியாத அவரின் இடைவெளியை இனி அவரின் நினைவுகளும் இலட்சியமும் நிரப்பும்.

ஆறுதல் கூறியபோது அவர் சொன்னார் "சிங்களவனைப் பார்க்கிறதுக்கு அவன்ரை தலைவர்மார் வந்துபோறாங்கள். எங்களைப் பார்க்கவா மக்கள் எங்கடை தலைவர் உங்களை அனுப்பி வைச்சார். அவருக்கு நன்றி சொல்லுங்கள்" கண்களிலே நீர் முத்துக்கள் உருண்டோட விரக்தியும் வேதனையும் மிகுந்த அந்த சூழலிலும் தமது தலைவனின் அன்பை நினைத்துருகிய அந்தப் பண்பு நிறைந்த மக்களின் உணர்வை அங்கு பணியாற்றிய போராளிகள் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களிடம் பகிர்ந்துகொண்டபோது அவரது விழிகளும் கசிந்தன. உண்மையில் மக்களின் மீது ஆழமான பாசம் கொண்ட தேசியத் தலைவர் அவர்களின் பரிவையும் கனிவையும் மக்களிடம் எடுத்துச் செல்லும் பிரதிநிதிகளாகவே அரசியல் போராளிகள் திகழவேண்டும் என்பது பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் எதிர்பார்ப்பாகும்.



மக்களின் இடப்பெயர்வுச் சம்பவம் என்பது அவர்களது இருப்பையே ஆட்டங்காணச் செய்யும் மிகத் துன்பகரமான நிகழ்வு. கையில் எடுத்த பொருட்களோடு கால் போன போக்கில் பாதுகாப்புத் தேடி ஓடும் மக்களுக்கு அனைத்து வசதிகளையும் உருவாக்கிக் கொடுத்தல் என்பது போராடும் மண்ணில் எத்தனை அசாத்தியமானது. ஆனாலும் தான் நேசித்த மக்களின் உயிர்கள் பசி, பட்டினியினாலோ, நோய், நொடிகளினாலோ காவு கொள்ளப்பட்டு விடாமல் தடுப்பதற்காக அவர் பட்டபாடுகள் நிச்சயம் தனித்துவமான ஒரு வரலாற்றுப் பதிவாகவே அமையும்.

ஆழிப்பேரழிவு ஏற்பட்ட போது அந்தரித்து நின்ற மக்களின் காலடியில் அவர்களுக்கான சேவைகளைக் கொண்டு சென்ற திறன், அரச அரசார்பற்ற நிறுவனங்களையும் மக்கள் தொண்டர்களையும் மிக வேகமாக ஒருங்கிணைத்து செயற்படுத்திய விதம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. 'அனர்த்த முகாமைத்துவம்' போன்ற பெரிய படிப்புக்கள் எல்லாம் படித்து பட்டம் வாங்கிய வெளிநாட்டு நிறுவனப் பிரதிநிதிகள் மனமுவந்து பாராட்டும் அளவுக்கு விடுதலைப் புலிகளின் நிர்வாகத் திறனை உலகத்தின் முன்னே நிறுத்தினார். இதற்குக் காரணமானது என்ன? எந்த மக்களுக்காக உயிர் விலை கொடுத்துப் போராடுகின்றோமோ அந்த மக்கள் உயிர் துடிக்கும்போது அதனைப் பார்த்துக் குமுறும் ஒரு மக்கள் போராளியின் இதயத்துடிப்பின் வேகம் தான் அவரது செயலிலும் தெரிந்தது.

தென் தமிழீழத்தின் எல்லை வரை அவரது அரசியல் போராளிகளின் அணி பணியாற்றியது. அங்கே அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப் பிரதேசத்தில் மக்கள் அடைக்கலம் புகுந்திருந்த ஒரு

மக்களுக்குத் துன்பங்கள் வருகின்ற போது உடன் அவர்களுக்கருகில் அரசியல் போராளிகள் நிற்க வேண்டும் என்பார். சிறிலங்காப் படைகளின் வான்குண்டுத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பாதிக்கப்பட்ட செய்தி அவருக்குக் கிடைத்த அடுத்த கணம் அவர்களுக்கான மீட்புப் பணிகளையும் மருத்துவப் பணிகளையும் நிவாரணப் பணிகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பாளர்களை உடன் அழைத்து அறிவுறுத்தல்களை வழங்கி அவர்களது பணியை வேகப்படுத்திவிட்டுத்தான் அடுத்த பணிக்குச் செல்லுவார்.

கொட்டுகின்ற மழை காலங்களில் வன்னியின் பல வீதிகள் வாய்க்கால்களாகவே இருக்கும். மக்கள் தம் வழமையான பணிகளை ஆற்றுவதற்கு பெரிதும் சிரமப்படுவார்கள். அவ்வாறான பொழுதுகளில் மக்கள் பாதுகாப்போடு பயணம் செய்வதற்கும் வழித்துணையாளர்களாக அவர்களின் சுமைகளைக் காவிச்சென்று வழங்கும் சுமைதாங்கிகளாகப் போராளிகள் செயற்படவேண்டும் என வலியுறுத்திக் கொண்டே இருப்பார். மிகப் பெரிய வீதி அமைப்புக்களை வடிகாலமைப்புக்களை மேற்கொள்ள முடியாத இப்போராட்ட சூழலில் மக்களை அணி திரட்டி அவர்களுக்கூடாகவே இவ்வாறானபணிகளை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம்தான் மக்களுக்கு தமது வீதி, தமது கிராமம், தமது தேசம் என்ற பற்றுதல் வளர்ந்து செல்லும் எனக் கூறுவார்.

எமது படைபலம் பெருகுகின்ற போதுதான் தேசத்தின் விடு

"பணிபவன் நிமிர்வான்" இது அடிக்கடி அவர் கூறுவது மட்டுமல்ல. அவரின் செயலாகவும் இருந்தது. தான் நித்தமும் சந்திக்கும் போராளிகள், மக்கள் எவராக இருந்தாலும் விழுப்புண்ணடைந்த இயலாத காலோடு ஊன்றுகோல் துணை கொண்டு எழுந்து நின்று இனிமையான சிரிப்புடன் வணக்கம் கூறி வரவேற்கும் பண்பு எந்த நெஞ்சங்களையுமே நெகிழ்ச்செய்யும். பாரிய மனச் சுமைகளோடு அவரிடம் வருபவர்கள் பஞ்செனப் பறக்கும் உற்சாகத்தோடு விடைபெற்றுச் செல்லுவார்கள். மக்களிடம் கூறுவார் "நாங்கள் உங்களின் பிள்ளைகள். நீங்கள் தான் எங்களுடைய பெற்றோர்கள். உங்களிடம் வரும் போராளிகளை அண்ணா, ஐயா, அக்கா என மரியாதைக்காகவும் அழைக்க வேண்டாம். தம்பி, மகன் என்று பாசத்தோடு அழையுங்கள். அல்லது உரிமையோடு பெயரைச் சொல்லி அழையுங்கள்".

யில் அனைவருமே மூழ்கியிருந்தபோது மக்களின் மேம்பாட்டுக்கான பல பணிகளில் தடங்கல்கள் ஏற்படவே செய்தது. ஆயினும் விரைவில் அத்தடங்கல்களை நிவர்த்தி செய்து தலைவர் அவர்களின் எதிர்பார்ப்பிற்கமைய மக்களுக்கான பணிகளை மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு போராளிகளுக்கான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி புதுப்பொலிவோடு அனைத்துப் பணிகளும் முடுக்கி விடப்பட்ட வேளையில் எதிர்பாராத பேரதிர்வாக பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களின் இழப்பு ஏற்பட்டுவிட்டது. ஆயினும் அவரின் உணர்வுகளால் நிறைந்து போயிருக்கும் இதயங்களோடு அவரது போராளிகள் அவரால் வடிவமைக்கப்பட்ட பணிகளை முன்னெடுத்துச் செல்லுவார்கள்.

அரசியல் பணி செய்கின்ற போராளிகள் அறிவும் ஆளுமையும் நிறைந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக பல கருத்துக்களை தொடர்ச்சியாக அவர்களோடு பகிர்ந்த வண்ணமே இருப்பார். மிக அண்மையில் அவரால் தெரிவிக்கப்பட்ட இரு விடயங்கள் போராளிகளின் அறிவாற்றல், மக்கள் உறவு எவ்விதம் அமைய வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களாகும். "நீங்கள் மக்கள் மத்தியில் செல்லுகின்ற போது பூத்துக் காய்த்து கனி தருகின்ற செழித்த மரங்களாக செல்ல வேண்டும். பட்ட மரங்களாக அல்ல." ஆம். செழித்த மரங்களைத் தேடித்தான் பறவைகள் வரும். நிழல் தேடும் மனிதர்கள் வருவார்கள். பட்டுப்போன மரங்களைத் தேடி எவருமே வருவதில்லை. எனவே அரசியல் போராளிகள் மக்களுக்குத் தமது அறிவை, விடுதலை உணர்வை வழங்கக்கூடிய திறனுள்ளவர்களாக இருக்க வேண்டும் என விரும்பினார். ஒரு போராளியின் ஆளுமை விருத்தி பற்றி மிக அழகாக சுருக்கமாக கூறிய கருத்து இதுதான் "எமது அறியாமை விலக விலக ஆளுமை இயல்பாகவே உருவாகும்". அவரது நீண்ட போராட்டப் பட்டறிவு இவ்விதமான அனுபவ முதிர்வுகளை அவரிடம் ஏற்படுத்தியிருந்தது.

பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் அடிக்கடி கூறுகின்ற இன்னுமொரு மிக முக்கியமான விடயம் என்னவெனில் மக்களுடனும் போராளிகளுடனும் எவ்விதம் அணுகவேண்டும் என்பது தான். அதற்கு அவர் கூறுகின்ற மிகப் பெரிய உதாரணம் எமது தேசியத் தலைவர் அவர்கள் தான். "ஓரிருவரோடு ஆரம்பித்து இன்று உலகமே வியந்து பார்க்கும் பாரிய படைபலத்தோடும் பல நிர்வாகக் கட்டமைப்புக்களோடும் ஒரு நாட்டையே உருவாக்கியுள்ள எமது தலைவர் எப்பொழுதாவது எவருக்காவது கை நீட்டி ஒரு அடி அடித்திருப்பாரா? அல்லது ஆத்திரத்தில் ஒரு கெட்ட வார்த்தையை உபயோகித்திருப்பாரா? இல்லையே. அண்ணைக்கும் கோபம் வரும். வந்தால் முறையற்ற விதத்தில் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியதே இல்லை. மாறாக, போராட்டப் பாதையில் தான் கடந்துவந்த நெருக்கடிகள் பற்றியும் அந்த நெருக்கடி காலங்களில் தன் உடனிருந்து உச்ச சாதனைகளைச் செய்த மாவீரர்களைப் பற்றியும் போராட்டம் வெல்லப்பட வேண்டும் என்ற நம்பிக்கையோடு அணிதிரண்டு நிற்கும் மக்களின் எதிர்காலம் பற்றியும் எடுத்துரைப்பார். அந்த நேரம் அண்ணைக்கு முன்னால் அமர்ந்திருப்பவருக்கு பேச்சுவாங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு தோன்றாது. ஒரு பேராசிரியரின் முன்னால் அமர்ந்து விரிவுரையில் கலந்துகொண்டிருக்கும் உணர்வே ஏற்படும். வெளியிலே வரும் போது எமது தவறை நாமே இனங்கண்டு கொள்ளுவோம். இன்னும் மூச்சோடு வேலை செய்ய வேண்டும் என்கின்ற உறுதி பிறக்கும்". இவ்வாறு கூறும் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறும் இன்னுமொரு விடயம் "எமது தலைவர் ஒரு பல்கலைக்கழகம்" என்பது தான்.

"பணிபவன் நிமிர்வான்" இது அடிக்கடி அவர் கூறுவது மட்டுமல்ல. அவரின் செயலாகவும் இருந்தது. தான் நித்தமும் சந்திக்கும் போராளிகள், மக்கள் எவராக இருந்தாலும் விழுப்புண்ணடைந்த இயலாத காலோடு ஊன்றுகோல் துணை கொண்டு எழு

நெஞ்சங்களையுமே நெகிழ்ச்செய்யும். பாரிய மனச் சுமைகளோடு அவரிடம் வருபவர்கள் பஞ்செனப் பறக்கும் உற்சாகத்தோடு விடைபெற்றுச் செல்லுவார்கள். மக்களிடம் கூறுவார் "நாங்கள் உங்களின் பிள்ளைகள். நீங்கள் தான் எங்களுடைய பெற்றோர்கள். உங்களிடம் வரும் போராளிகளை அண்ணா, ஐயா, அக்கா என மரியாதைக்காகவும் அழைக்க வேண்டாம். தம்பி, மகன் என்று பாசத்தோடு அழையுங்கள். அல்லது உரிமையோடு பெயரைச் சொல்லி அழையுங்கள்". தன் மக்களிடம் பிள்ளையாகப் பணிந்து நின்ற இந்த விடுதலை வீரன் எதிரியின் முன்னால் எரிமலையாக நிமிர்ந்து நின்றார். சமாதான பேச்சுக்களில் பங்குபற்றிய சந்தர்ப்பங்களில் சிறிலங்கா அரச தரப்பினர் தனது புன்னகையைப் பற்றிக் கூறிய கருத்தொன்றினை தன் போராளிகளிடம் நினைவு கூர்ந்தார். "தமிழ்ச்செல்வன் தன்ரை கருத்திலை இருந்து கொஞ்சமும் மாறமாட்டார். சிரிச்சு சிரிச்சு தன்ரை நிலைப்பாட்டிலை பிடிவாதமாக இருப்பார். நஞ்சுச் சிரிப்பு" என எதிர் தரப்புக் கூறியபோது அதனை அவர் மிக நிமிர்வோடு ஏற்றுக்கொண்டார். எப்பொழுதுமே நாங்கள் எதிரிக்கு இனிப்பானவர்களாக இருக்க முடியாது என்பதே அந்த இலட்சிய வீரனின் கொள்கையாக இருந்தது. அதனால் தான் இன்று தமிழ் நெஞ்சங்கள் யாவிலும் நிமிர்ந்து நிற்கின்ற மலையாகி விட்டார்.

எமது நீண்ட போராட்டப் பாதையில் எத்தனையோ இழப்புக்கள், வேதனைகள், சோதனைகள். அந்த நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் வல்லமையை எங்கள் தலைவரே தந்தார். அந்த ஒப்பற்ற ஆளுமையின் வீரியம் தமிழர்கள் ஒவ்வொருவரினதும் ஆன்மாவிலே விடுதலையின் கனலை மூட்டிவிட்டுள்ளது. மனிதர்கள் அழிந்து போகலாம். ஆனால் மனித குலத்தின் மகத்தான சுதந்திர தாகம் என்றுமே அழிவதில்லை. முன்னோக்கிச் சென்றவர்களின் தடங்களைப் பற்றித் தொடர்ந்தபடியே மனித குலத்தின் விடுதலை நோக்கிய வாழ்வு அசைகிறது. சென்ற மாதம் பள்ளி மாணவ முதல்வர்களுக்கான கருத்தரங்கொன்றில் ஒரு உயர்வகுப்பு மாணவி கேள்வி ஒன்றை எழுப்பினாள். "எங்கள் போராட்டம் அடுத்தடுத்த தலைமுறை என நீண்டு செல்லப் போகிறதா?" இதற்கான பதிலையும் அங்கு கூடியிருந்த மாணவர்களே தேடிக் கண்டறிய முனைந்துகொண்டிருந்தனர். மலர்ந்த முகங்களோடு பல ஆரோக்கியமான கருத்துக்களை உற்சாகமாகத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். இறுதியாக ஒரு மாணவி எழுந்தாள். எந்தப் பிசிறும் இன்றி அவளது பதில் மிகவும் தெளிவாக இருந்தது. அதனைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் நெஞ்சங்கள் சிலிர்த்து நிறைந்தது. "தமிழர்களுக்கான தமிழீழத் தனியரசு அமையும் வரை போராட்டம் தொடரும்" இதுதான் அவளது பதில். அதிகமதிகம் படித்த புத்திஜீவிகள் எனக்கருதப்படுகின்ற சிலர் தமது சுயநலன் காரணமாக இன்றுவரை குழப்பிக்கொண்டு தடுமாறும் விடயத்திற்கு இந்த இளைய தலைமுறையின் பதில் எத்தனை பொருத்தமானது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்களாக அடுத்த சந்ததி உருவாகும் போது இந்த மண்ணின் விடுதலைக்காக கொடுக்கப்படுகின்ற எந்த விலைகளும் நிச்சயம் வீண்போகாது. இவ்வாறானதொரு போராட்ட தெளிவு மிக்க மக்கள் சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவே பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் அயராது பாடுபட்டார். அவரது கனவு நிச்சயம் நனவாகும். ஆயினும் அடுத்த சந்ததிக்கு நாம் விட்டுச்செல்ல வேண்டியது விடுதலைக்கான சுமைகளை அல்ல. விடுதலை பெற்ற சுதந்திர வாழ்வை. எனவே அவருக்காக ஒருமித்து ஒலித்த தமிழரின் உணர்வெழுச்சி இறுதி வெற்றியை வென்றெடுக்கும் வரை எமது தேசியத்தலைவரின் கரங்களை பலப்படுத்த வேண்டும். அதுவே அந்த மாவீரனின் கனவை நனவாக்கும். பிரிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தன் இனிய புன்னகையோடு எம்மை இலட்சியப்பயணத்தில் தொடர்ந்தும் வழிநடத்துவார். தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை விரைவில் பெற்றெடுத்து அவரது இலட்சியத்தை ஈடேற்றுவோம்.

# சீனத்தயாரிப்பு முத்துமாலை



அன்பரசு



உலகின் தொழிற்சாலை என்று வர்ணிக்கப்படும் சீனாவில் தயாரிக்கப்படாத பொருளே இல்லை எனலாம். அவர்கள் ஒன்றையும் விட்டு வைப்பதாக இல்லை. அமெரிக்கா, யப்பான், ஜேர்மனி ஆகியவற்றின் ஏகபோகமாக இருந்த மோட்டார் கார் தயாரிப்பிலும் அவர்கள் இறங்கி விட்டார்கள். விலையும் குறைவு பொருளும் விலைக்கேற்றது. சீனா தயாரிக்கும் முத்துமாலை வேறுவகையானது. இந்துமா கடலோர நாடுகள் பலவற்றுடன் இணைந்து சீனா பாரிய துறைமுகங்களை அமைத்து வருகிறது. ஒவ்வொரு துறைமுகமும் ஒரு முத்தாகும். அனைத்தும் இணைந்து சீனாவுக்குச் சார்பான முத்துமாலையாகவும் இடம் பெறுகின்றன. இராணுவ ஆய்வாளர்கள் இதை Chian's Pearl Necklace என்று குறிப்பிடுகிறார்கள். அதாவது சீனாவின் முத்து மாலை என்று பொருள்.

மூன்றாம் உலகப் போரின் வெற்றி தோல்வி இந்து மாகடலில் தீர்மானிக்கப்படலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அப்படியானதொரு போர் நடக்குமோ தெரியவில்லை. ஆனால் அதற்கான அணிவகுப்புகள் தொடங்கிவிட்...

வகை ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம் என்று என்னால் சொல்லமுடியவில்லை. நான்காம் உலகப்போரில் கல்லும் வில்லும் அம்பும் சட்டியும் பயன்படுத்தப்படும் என்று மாத்திரம் உறுதியாக நம்பலாம். இந்து மாகடலுக்கு ஏன் இந்த முக்கியத்துவம் மத்திய கிழக்கிலிருந்து ஆசியாவின் பசுபிக் எல்லைவரையான இந்துமாகடல் ஊடாக கடற்பாதைகள் வரலாற்றில் முன்னர் எப்போதும் இல்லாத முக்கியத்துவம் பெற்றுள்ளன. உலகின் 70 வீதமான எண்ணை இக்கடற்பாதைகள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக மிகக் கூடுதலான எண்ணையைப் பயன்படுத்தும் சீனாவுக்கு இக்கடற்பாதைகளின் பாதுகாப்பு அதிமுக்கியமாகியுள்ளது.

இந்தியக் கடற்படையின் கொள்கை வகுப்பாளரான கேரளத்தைச் சேர்ந்த பேராசிரியர் கே.எம். பணிக்கர் 1945 தொடக்கம் இந்துமாகடல் இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அரபிக்கடல் வங்காள விரிகுடா என்பன உள்ளிட்ட கடற்பிராந்தியங்களும் அவற்றை ஒட்டிய இலங்கை ...



கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும், என்று பணிக்கர் வலியுறுத்தினார். அவர் மறைந்து பல வருடங்களாகியும் அவருடைய இந்தியக் கடலாதிக்கக் கோட்பாட்டை இந்தியக் கடற்படை அதிகாரிகள் மறந்து விடவில்லை. ஜுலை 2007 இல் தனது உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்த இந்தியக் கடற்படை அட்மிரல் சுரேஷ்மேத்தா உலக அரங்கில் இந்தியா தனக்குரிய இடத்தைப் பெற முயற்சிக்கிறது என்றார். இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரான சித்தான்சு கார் இந்து மாகடலின் கடற்பாதைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு எமக்கு இருக்கிறது என்றார்.

இந்து மாகடலின் கடற்பாதைகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பலத்தையோ பாதுகாப்பை உறுதி செய்யும் நிலையிலோ இந்தியா இருக்கவில்லை. எண்ணை ஏற்றிச் செல்லும் உலகின் எல்லாக் கடற்பாதைகளிலும் அமெரிக்கக் கடற்படை ஆதிக்கம் செலுத்தியுள்ளது. மத்தியகிழக்கின் ஹோர்முஸ்குடா மலாக்கா நீரிணை, தென்கிழக்கு ஆசிய கடற்பாதைகள் அமெரிக்க கடற்படையின் கண்காணிப்பில் இருக்கின்றன. அதுமாத்திரமல்ல சீனாவும் இந்துமா கடலில் தனது பிரசன்னத்தை உறுதி செய்து வருகின்றது. இந்தியா ஒருபோதும் இந்துமா கடலாதிக்கத்தை எட்டக்கூடாது என்பது சீனாவின் நீண்ட நாட்கொள்கை. மியன்மார் எனப்படும் பர்மாவிற்குச் சொந்தமான கொக்கோஸ் தீவுகளில் பாரியளவு துறைமுக வசதியையும் கண்காணிப்பு மையத்தையும் சீனா நிறுவியுள்ளது. அதிலிருந்து இந்தியாவின் கிழக்குக் கரையோரத்தையும் ஒரிசா மாநிலத்தில் இந்தியா நடத்தும் நீண்டதூர விசை ஏவுகணைத் தளத்தையும் சீனாவால் கண்காணிக்க இயலும்.

கொக்கோஸ் தீவின் துறைமுக வசதிகளுக்கு நிகரானதொன்றைச் சீனா பெரும் பொருட்செலவில் பாகிஸ்தானின் குவதரில் கட்டியெழுப்பியுள்ளது. அரபிக் கடல் தொட்டு மத்திய கிழக்கின் பாரசீக வளைகுடா வரை குவதரில் இருந்து கண்காணிக்க முடியும். வைத்து எடுத்துச் செல்லும் களஞ்சிய வசதிகளையும் குவதர் கொண்டுள்ளது.

இன்று சீனாவின் எண்ணைத் தேவையில் அரைப்பங்கு மலாக்கா நீரிணை ஊடாக எடுத்துச் செல்லப்படுகிறது. தாய்வான் பிரச்சினை சூடுபிடிக்குமாதலால் மலாக்கா நீரிணை ஊடாக எடுத்துச் செல்வதை அமெரிக்காவால் தடுக்க முடியும். மாற்று யோசனைகளைச் சீனா ...

வைக்கப்படும் எண்ணை பாக்கிஸ்தானிலிருந்து சீனாவுக்குச் செல்லும் கரக்கோரம் இமயமலை நெடுஞ்சாலை மூலம் கொண்டு செல்லும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தனது எண்ணைத் தேவைகளுக்குச் சீனா தனது முழுத் தேவையில் 45 வீதத்திற்கு மேலாக மத்திய கிழக்கு நாடுகளில் தங்கி இருப்பதால் இந்து மாகடலின் கடற்பாதைகளின் பாவனையைச் சீனாவால் தவிர்க்க முடியாது. இதற்காகச் சீனா தனது கடற்படையைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. சீனக் கடற்படையின் வேகமான வளர்ச்சியும் அணுசக்தியில் இயங்கும் கப்பல்களும் நீர்மூழ்கிகளும் இந்தியக் கடற்படைக்கு மாத்திரமல்ல எதிர்காலத்தில் அமெரிக்கக் கடற்படைக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பது உறுதி. முன்னொரு காலத்தில் நிலத்தைக் கைப்பற்றுவதற்காக வல்லாதிக்க நாடுகள் சண்டையிட்டன. இப்போது எண்ணைக்கும் எரிவாயுவுக்குமாகச் சண்டை செய்யும் காலம் பிறந்துள்ளது. சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் போர் தொடங்குமாயின் அது எண்ணை வளத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காகவே இருக்கும் என்பது ஆய்வாளர் முடிவு.

டிசம்பர் 20, 2004 ஆம் வாரத்திற்குரிய நியூஸ்வீக் சஞ்சிகை மூலம் கசிய விடப்பட்ட செய்திப்படி சீனா - அமெரிக்கா எண்ணைப்போர் ஏற்கனவே தொடங்கி விட்டது. தனது எண்ணைத் தேவையைப் பெறும் முயற்சிக்கும் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் அமெரிக்கா பாரியளவில் அச்சுறுத்தலாக இருக்கின்றது என்று சீனா தீர்மானித்து விட்டது. அதனடிப்படையில் சீனா தனது பாதுகாப்பிற்காக முத்துமாலையைத் தயாரிப்பதாக அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி நியூஸ்வீக் செய்திவெளியிடப்பட்டுள்ளது. முத்துமாலை என்ற பதம் எதைக் குறிக்கும் என்ற விளக்கத்தையும் அதே அதிகாரிகள் வழங்கியுள்ளனர்.

துறைமுகங்கள் கண்காணிப்பு மையங்கள் விமான நிலையங்கள் ஆகிய மூன்றும் முத்துமாலையில் இடம் பெறும். முத்துமாலையின் பிரதான நோக்கம் மத்திய கிழக்கு ஆபிரிக்கப் பிராந்தியங்களில் இருந்து தென்சீனக் கடலுக்கு எண்ணைக் கப்பல்களைப் பாதுகாப்பாக நகர்த்துவதாகும். முத்துமாலை நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்படுகிறது. ஆங்காங்கே மாற்று ஒழுங்குகளும் செய்யப்படுகின்றன. கரக்கோரம் மலைப்பாதை மூலம் குவதரில் இருந்து கொண்டு செல்வது பற்றி ஏற்கனவே பார்த்தோம். மியன்மாரின் வங் ...

யூனான் மாகாணம் வரை ஒரு நெடுஞ்சாலையை சீனா அமைத்து வருகிறது. மலாக்கா நீரிணையில் முழு அளவில் நம்பியிருப்பதை இந்தத் தரைப்பாதை தவிர்க்கும் என்று சீனா நம்புகிறது. தாய்லாந்திற்கும் மலேசியாவிற்கும் இடையில் இருக்கும் ஒடுங்கலான தரைப்பரப்பில் பனாமாக் கால்வாய் போன்றதொரு ஒழுங்கைச் செய்யும் தூரநோக்குத் திட்டம் சீனாவிடம் உண்டு. இது கைகூடினால் தென்சீனக்கடலும் இந்து மாகடலும் தொடங்கப்பட்டு மலாக்கா நீரிணை தனது செல்வாக்கை இழந்து விடும். அத்தோடு சிங்கப்பூர் துறைமுகத்தின் வருமானமும் காணாமற் போய் விடும்.

மேற்கூறிய ஒடுங்கலான தொடுப்பு தரைப்பரப்பின் புவியியல் பெயர் இஸ்த்மஸ் ஒப்கிறா அமெரிக்காவுடன் முரண்பட தாய்லாந்து தயங்குவதால் வெட்டும் பணிகள் இப்போதைக்குத் தொடங்கப்படமாட்டாது. இந்தக் கால்வாய் நடைமுறைக்கு வந்தால் உலக அரங்கில் தாய்லாந்தின் செல்வாக்கு பன்மடங்காக உயர்ந்துவிடும்.

முத்துமாலைத் தயாரிப்பில் சீனா வியப்பூட்டும் பல வெற்றி முத்துக்களைப் பெற்றுள்ளது. காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் தட்டிக் கொண்டு போவது போல் மாலைதீவில் சீனத் துறைமுகம் கட்டுவதற்கு மாலை தீவு அரசு பெருந்தொகை பணத்தைப் பெற்றுக்கொண்டு அனுமதியளித்துள்ளது. வங்காள தேச அரசும் சித்தாகொங் துறைமுகத்தை மேம்படுத்திப் பாவிப்பதற்கு சீனாவுக்கு அனுமதி வழங்கியுள்ளது. சிறிலங்கா அரசும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் கட்டி விரிவாக்கும் திட்டத்தை சீனாவிடம் கையளித்துள்ளது. கி.பி. 2ம் நூற்றாண்டில் இத்துறைமுகம் கொடவயட்ட பட்டன என்ற பெயரில் கிழக்கு மேற்கு கரையோரக் கப்பற்பாதையின் கேந்திர இடத்தில் இருந்தது. இதற்குப்பின் திருமலையில் அனல் மின்நிலையத்தை அமைப்பதற்கும் சிறிலங்கா இராணுவத்திற்குத் தேவையான எல்லாவகை ஆயுதங்களை வழங்குவதற்கும் இந்தியா வேகமாக முன்வந்துள்ளது. அனல் மின்நிலையம் அமைக்கும் சாட்டில் இந்தியக் கடற்படையும் திருமலை துறைமுகத்தில் தரித்து நிற்கலாம் என்ற செய்திகள் அடிபடுகின்றன. அழகான பெண்ணொருத்தி இரு வாலிபர்களுக்குச் சமகாலத்தில் கண்சாடை காட்டுவது போல் சிறிலங்கா இந்தியாவையும் சீனாவையும் விட்டுப்பிடிக்கிறது.



# நேர்காணல்: திரு.இரட்ணசோதி

நேர்கண்டவர் க.சிறிகாந்

எமது நீண்ட கால போராட்ட வரலாற்று நதியில் சமநேரத்தில் எம்மோடு சேர்ந்து பயணித்து வரும் கலைஞர்கள் வரிசையில் தமிழீழத்தின் கராத்தே சங்க தலைவரும், யோகாசன ஆசிரியருமான திரு. ரட்ணசோதி அவர்களை எங்களுடைய எரிமலை வாசகர்களுக்காக சந்திக்கின்றோம். அவர் தமிழீழத்தில் கராத்தே கலையின் நிலை தொடர்பாக பேசியவை.....





**தமிழீழத்தின் கராத்தே சங்க தலைவர் என்ற ரீதியிலே புதிதாக கராத்தே கற்கவிரும்பும் மாணவர்களுக்கும் அத்தோடு கற்றுவருகின்ற மாணவர்களுக்கும் எவ்வகையிலான ஒழுங்குகள் செய்திருக்கின்றீர்கள்.**



சில வருடங்களுக்கு முதல் அதாவது சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கராத்தே கலை பயிலுதல் என்பது தமிழீழத்தில் ஓர் ஒழுங்கு முறையில் இருக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விருப்பத்திற்கிணங்க கற்று வந்தார்களே தவிர ஒரு முறையியல் ரீதியாக இல்லை. ஒழுங்கு என்றால் நாங்கள் எதை பார்க்கிறோம் என்றால் இன்றைக்கு சர்வதேச ரீதியிலே கராத்தே முன்னெடுக்கப்படுகின்றது; அந்த தரத்திற்கு அமைவாக எங்களுடைய மாணவர்களையும் கொன்டு செல்ல வேண்டும் என்பதே தேசியத் தலைவரின் விருப்பம். எல்லோரும் அவர் அவர் விருப்பதிற்கு பழக்கினால் சர்வதேச மட்டத்தில் எங்களுடைய மாணவர்கள் பங்குகொள்ள முடியாமல் போகும். எனவேதான் சர்வதேச கராத்தே சம்மேளனம் என்ன செய்கிறது என்றால், இந்த அமைப்பு தான் சர்வதேச ரீதியிலே கராத்தே ஒழுங்கினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. அத்தோடு சர்வதேச ரீதியிலே அங்கீகரிக்கப்பட்ட வகையிலான கராத்தே முறையினை அதாவது வடிவத்தினை ஏற்றுக்கொண்டுள்ளது. சோட்டோக்கான், சிந்தேரியோ, வதேரியோ, குயிறியோ என்பன அங்கீகரிக்கப்பட்ட கராத்தே வடிவங்களாகும் தனித்தனி வடிவங்களும் அவை பயிலும் முறைகளும் புத்தகங்களாக சர்வதேச ரீதியிலே சர்வதேச கராத்தே சம்மேளனம் வெளியிட்டிருக்கின்றது. அதற்கு ஏற்பவே கராத்தே போட்டிகள் சர்வதேச ரீதியிலே இடம்பெறும். அண்மையில் ஒலிம்பிக்கில் கூட சர்வதேச







கராத்தே சம்மேளனத்தினுடைய கராத்தே விதிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன இதை நோக்காக கொண்டே தமிழீழத்திலும் நாங்கள் சோட்டாக்கான் கராத்தே வடிவத்தினை தேர்ந்தெடுத்ததுடன் தமிழீழத்திலுள்ள எல்லா கராத்தே பயிற்றுவிப்பாளர்களையும் ஒருங்கிணைத்து தமிழீழ கராத்தே சம்மேளனம் ஒன்றை நிறுவியுள்ளோம். தமிழீழ தேசியத் தலைவருடைய விருப்புக்கு இணங்க அண்மையில் வீரச்சாவடைந்த பிறிகேடியர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அத்தோடு ஒவ்வொரு வருடமும் தமிழீழத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் போட்டியாளர்களை அழைத்து 'மேஜர் சுலப்பிரியா ஞாபக கேடயத்திற்கான' கராத்தே போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது. இப்போட்டிகள் அனைத்தும் சர்வதேச கராத்தே சம்மேளனத்தின் சட்டதிட்டத்தின் படிதான் நடாத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழீழ கல்விக்கழகம் கராத்தே கலையை பாடசாலைகளில் பயிற்றுவிப்பதற்கு ஊக்கிவித்து வருகிறது. என்ன காரணத்திற்காக அவ்வாறானதொரு முக்கியத்துவம் கராத்தேக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்று கூறமுடியுமா?**

தமிழீழ தேசியத் தலைவரின் நோக்கத்திற்கு ஏற்ப எதிர்கால தலைமுறை உடல், உள ரீதியாக ஆரோக்கியம் மிக்கவர்களாவும், தேசப்பற்றுள்ளவர்களாவும், வீரம் நிறைந்தவர்களாவும் ஆண் பெண் பேதமில்லாமல் சம நோக்கோடு வளர வேண்டும் என்பதற்காகவும். அத்தோடு சர்வதேச ரீதியிலே பார்த்தால் கூடதெரியும் சீனா, யப்பான், கொரியா, இந்தியா பாடசாலை ரீதியாக கராத்தே கலை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பாடசாலை பாடதிட்டத்தில் அல்ல. நாங்கள் படிக்கின்ற காலத்தில் பாடசாலை மட்டத்தில் (pt) பிசிக்கல் ரெயினிங் இருந்தது. ஆனால் இப்பொழுது பாடசாலை ரீதியாக அவ்வாறானதொரு பயிற்சி இல்லை எனவேதான் கராத்தே கலை ஊடாக கற்கும் மாணவர்களுக்கு சுறுசுறுப்பை ஏற்படுத்தவும் உடல், உள ஆரோக்கியத்தை பேணவும், தமிழீழ விளையாட்டுத்துறை தமிழீழ கல்விக்கழகத்துடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது. இப்பொழுது ஆண்டு 6,7 மாணவர்களுக்கு தேசிய ரீதியாக பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. அடுத்த வருடம் 8ஆம் ஆண்டு மாணவர்களையும் சேர்த்துக்கொள்வதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக எங்களுடைய கராத்தே சம்மேளனம் தலைவரின் அனுசரணையோடு கராத்தே கற்பிக்கும் ஆசிரியர்கள் எல்லோருக்கும் சிறு தொகையிலான கொடுப்பனவும் முன் நடவடிக்கையாக வழங்கப்பட்டுவருகின்றது. இதைத் தவிர பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை மட்டங்களிலான கராத்தே சுற்றுப் போட்டிகளும் நடாத்தப்பட்டு ஊக்குவிப்பும் வழங்கப்பட்டு வருகின்றது. மலரப்போகும் தமிழீழத்தில் ஆரோக்கியமான வீரியமுள்ள இளைய தலைமுறையினரை வளர்த்தெடுத்து மாவீரர்களின் உன்னத அர்ப்பணிப்பின் விளைவாக பெற்றெடுக்க தமிழீழத்தை



யாரும் விலைபேச விடாமல் கட்டிக்காக்கும் தேசப்பற்றுள்ள சக்தியினராக உருவாக்குவதே ஆகும்.

**சமாதானகாலப்பகுதியில் ஆசியாவில் சிலநாடுகளுக்கிடையே இடம்பெற்ற கராத்தே போட்டிகள் கொழும்பில் இடம்பெற்றன. தமிழீழத்தில் இருந்தும் கூட வீரர்கள் கலந்துகொண்டு பதக்கங்களும் பெற்றிருந்தார்கள். இது தொடர்பாக கூறுங்களேன்?**

எங்களுடைய மாணவர்கள் கராத்தே கலையில் எந்த நிலையில் இருக்கின்றார்கள் என்று நாடிபிடித்துப்பார்க்கும் ஓர் சந்தர்ப்பமாகத்தான் அப்போட்டிகள் அமைந்திருந்தன. சமாதான காலப்பகுதியில் முதல்முதலாக காலாவத்தை என்னும் இடத்திலும் தொடர்ந்து கண்டியிலும் போட்டிகள் இடம்பெற்றன, இப்போட்டியிலே பங்குகொள்வதற்காக தமிழீழத்தில் இருந்தும் சுமார் 30 வீரர்கள்

சிறுவர் இல்லங்களும், வெளிமாணவர்களும் அடங்குவர்) அங்கு சென்ற பின்னர்தான் நிறைய விதிமுறைகள் என பல விடயங்களை தெரிந்துகொண்டோம். எமது போட்டியாளர்களுக்கு போட்டிகள் கடினமானதாக இருக்கவில்லை, புதிய சில விதிமுறைகள் தெரியாமல் இருந்தன. இருந்தும் எங்கள் வீரர்கள் நிறைய பதக்கங்கள் வென்று வெற்றி வாகை சூடி வந்தார்கள். அத்தோடு அங்கு சென்றதன் பின் நிறைய விடயங்கள் தெரிந்து கொள்ளவும், பல நாட்டு போட்டியாளர்களோடு போட்டியிடுவதன் மூலம் மனப்பயம் அகன்று அவர்களுக்கு சமமாக எங்களையும் மாற்றிக்கொளும் சந்தர்ப்பமாகத்தான் அப்போட்டிகள் அமைந்தன. எங்களது வீரர்கள் அங்குசென்றதும் பல்நாட்டு வீரர்களும் எங்களது வீரர்களை ஊக்குவித்தார்கள். காரணம் எங்களது வீரர்கள் மனோ பலம், உடல்பலம் நிறைந்தவர்களாகையால்தான். ஆனால் இப்போ குறிப்பிட்ட காலப்பகுதியில்தான் உலக கராத்தே சம்மேளனத்தின் சட்டதிட்டங்கள் அறிமுகமானது. இப்பொழுது நாங்கள் அம்முறையை பின்பற்றிவருகின்றோம் அத்தோடு இலங்கை கராத்தே சம்மேளனத்தில் எங்களுக்கு இன்னமும் அங்கீகாரம் இல்லை. அதைப்பெறுவதற்கான முயற்சியில்தான் நாங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

**சர்வதேச கராத்தே சம்மேளனத்துடன் அல்லது சர்வதேச கராத்தே அமைப்புகளுடன் எவ்வகையிலான தொடர்புகளை பேணிவருகின்றீர்கள் ?**

2005 ஆம் ஆண்டு எங்களுடைய கராத்தே செயற்பாட்டை ஊக்குவிப்பதற்காக லண்டனில் இயங்கும் பாரம்பரிய கராத்தே சம்மேளனம் சர்வதேச சோட்டோகான் அமைப்பின் ஊடாக எனக்கொரு அழைப்பு விடுத்திருந்தது அதற்கு பிரதம ஆசிரியராக இருக்கும் சென்சிகவாசோ இவர் அகில உலகத்தில் எட்டாவது




சித்திரை மாதம் ஓர் பயிற்சிபட்டறை நடத்தியிருந்தார். எனக்கும் அதற்கானதொரு அழைப்பு வந்தது. நானும் கருத்தரங்கில் கலந்துகொண்டு நிறைய விடயங்களை பெற்றதுடன் தமிழீழத்திற்கு திரும்பி கற்பிக்கும்முறையில் நிறைய நுட்பங்களையும் விதிகளையும் புகுத்த முடிந்தது. இப்பொழுதும் அவர்களுடனான தொடர்புகள் இருந்துவருகின்றது. யப்பானில் இருக்கும் பாரம்பரிய சோட்டோகான் கராத்தே சம்மேளனம், லண்டனில் இருக்கும் பாரம்பரிய கராத்தே சம்மேளனம், லண்டனில் உள்ள உலக கராத்தே சம்மேளனம் இவை அனைத்தையும் சர்வதேச கராத்தே சம்மேளனம் தான் மேற்பார்வை செய்துவருகின்றது. இதற்கு பிரதமராக சென்சி லீ சிமித் என்பவர் இருக்கின்றார். அவரை 2004 ஆம் ஆண்டு கிளிநொச்சிக்கு அழைத்து மிகப்பெரிய பயிற்சிப்பட்டறை ஒன்றை நடாத்தியிருந்தோம். தமிழீழத்தில் இருந்து எட்டு மாவட்டங்களில் இருந்தும் கராத்தே கற்கும் வீரர்களை அழைத்து பயிற்சிகளும் வழங்கி அவருடைய கையொப்பத்துடன் சென்சி கவாசோவின் முத்திரை பதிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கி எங்களுடைய தொடர்பை உறுதிப்படுத்தி மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சி ஒன்றை மேற்கொண்டதோடு அடுத்த கட்ட நடவடிக்கையாகத்தான் லண்டன் சென்று அவர்களுடைய பயிற்சி பட்டறையில் கலந்துகொண்டேன். தாயகத்திற்கு வந்து மாணவர்களை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல லண்டனில் இயங்கும் பாரம்பரிய கராத்தே சம்மேளனத்துடனும், சர்வதேச சோட்டோகான் அமைப்புடனும் தொடர்புகளை பேணிவருகின்றோம்.

**கராத்தேயின் வகைகள் தொடர்பாகவும் நீங்கள் எவ்வகையிலான கராத்தே வகையை கைக்கொள்கின்றீர்கள் அத்தோடு கராத்தேயின் தோற்றவாய் பற்றியும் கூறுங்கள்?**

உண்மையில் கராத்தே இந்தியாவில்தான் தோற்றம் பெற்றதாக கூறப்படுகின்றது. போதிதர்மா என்ற புத்ததுறவி இந்தியாவில் இருந்தார் அங்கிருந்து பின்னர் சைனாவிற்கும், யப்பானிற்குமாய் தர்மபோதனைகள் செய்துவரும்வேளை தங்களது உடல் நலத்தைப் பேணவும் கொடிய விலங்குகளிடம் இருந்து



பாதுகாத்துக்கொள்ளவுமே தற்காப்பு கலையை பழகியிருந்ததாக கூறப்படுகின்றது. ஆனால், கராத்தே கலை யப்பானில் இருக்கும் ஒக்கினாவாவிற்தான் தோற்றமுற்றதாக வரலாறு கூறுகின்றது. சோட்டோகான் கராத்தேயின் தந்தை வொனகோசி கிட்சன் அவர்கள் ஒக்கினோவாவிற்கு சென்று அங்குதான் கராத்தே கலையைக் கற்றுக்கொண்டார். ஏன் அவர் கராத்தே பயிலவேண்டிவந்ததென்றால், அவர் ஓர் குறைமாதக் குழந்தையாகத்தான் பிறந்தார். அவரை அவரது தந்தை நல்லஆரோக்கியமுள்ள குழந்தையாக வளர்த்தெடுக்கவே ஒக்கினாவாவிற்கு அனுப்பினாராம். அந்த காலப்பகுதியில் யப்பானில் மன்னராட்சி நிலவியது. அங்கே கராத்தே கற்றுக்கொள்ள முடியாத நிலை. இளைஞர்கள் கராத்தே கற்று மன்னருக்கெதிராக கிளர்ச்சிசெய்வார்கள் என்று எண்ணி கராத்தே கற்க தடை இருந்த நிலையிலும் ஒக்கினாவாவில் மாத்திரம் மறைமுகமாக ஒருசிலர் கற்பித்துவந்தார்கள். பின்னர் 1922 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யப்பான் பல்கலைக்கழகத்தில் அங்கிகரிக்கப்பட்டதோர் கலையாக பக்குசோக்கு பல்கலைக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் கராத்தே கற்பதால் உடல், உளரீதியாக ஏற்படும் மாற்றங்களை வொனகோசி கிட்சன் அவர்கள் மக்களுக்கு நிறுவிக்காட்டிய பின்னரே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்போது சர்வதேச ரீதியில் கராத்தே கலை முன்னெடுக்கப்படுகின்றது.
உண்மையில் சோட்டோகான் கராத்தே என்பது உடல், உள ஆரோக்கியத்தை வளர்ப்பதாகும்.
கராத்தேயில் தடுப்புத்தான் முதன்மையாக வலியுறுத்தப்படுகின்றது. அதாவது கராத்தே வீரன் என்பவன் அடிப்பவன் அல்லன். தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்பவன்.
மனஒருமைப்பாடு, ஆசிரியர்களுக்கு பணிவு, பெரியோர்களுக்கு பணிவு இவற்றைப் புகட்டுவதுதான் கராத்தேயில் பிரதானமாகும்.
அத்தோடு கராத்தேக்கான சீருடை என்பது கராத்தே வீரனின் பயிற்சிக்கு ஏற்றதாய் வெண்ணிறத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் மனச்சாந்தி உள்ள யப்பான் கலாச்சாரத்தை வெளிப்படுத்திநிற்கின்றது. இதைவிட சோட்டோகான் கராத்தேக்குரிய கட்டளைகள் அனைத்தும் யப்பானிய மொழியிலேயே உலக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் யப்பானியர்கள் தங்கள் ஆளுமையை இந்த கராத்தே கலையின் ஊடாக வெளிப்படுத்திவருகின்றார்கள் என்பது தான் நிஜம்.

**கராத்தே கலைக்கான உடையை நாடுகள் தங்களுக்கு ஏற்ற வகையிலே அவரவர் கலாசார முறையில் வடிவமைக்க முடியுமா? இதை உலக கராத்தே சம்மேளனம் ஏற்றுக்கொள்ளுமா?**

கராத்தே கலைக்கான உடையை கிமோனோ என்று யப்பான் மொழியில் அர்த்தப்படும். இதைவிட யப்பானின் தேசிய உடையும் இதுவாகத்தான் இருக்கின்றது. சர்வதேச கராத்தே சம்மேளனம் கராத்தே கலை தொடர்பாகவும்




கற்கும் முறைகள் தொடர்பாகவும் ஒழுங்கு விதிகளை கொண்டுள்ளது. அதில் ஒன்றுதான் கராத்தேக்கான உடைகள். கற்கும் யாவரும் உரிய உடையைத்தான் அணிந்திருக்கவேண்டும் என்பது சட்டம். வேறு எந்த நிறமும் சேராத வெண்ணிற ஆடையாக இருக்கவேண்டும். வெண்மை பரிசுத்தமானது. எனவே கராத்தே வீரனின் உள்ளமும் உடையைப்போல வெண்மையாக உள்ளன்பு கொண்டிருக்கவேண்டும் என உணர்த்துகின்றது. மற்றும் உடை அணிவதற்கே முறையிருக்கிறது. அம்முறையை பின்பற்றாவிட்டாலும் போட்டியாளர் போட்டியில் இருந்து விலக்கப்படவேண்டும் என்றும் சட்டம் உண்டு. மொத்தத்தில் நாம் பார்க்கும்போது கராத்தே ஒரு கலையாகும். கராத்தே கலை இரண்டு வகையாக பயிற்சிக்கும் போட்டிகளுக்குமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஸ்போட்ஸ் கராத்தே, வைடெல் கராத்தே. விளையாட்டு கராத்தே என்பது புள்ளிகளை நோக்காகக்கொண்டு சட்டதிட்டங்களைக் கொண்டிருக்கும். மாறாக வைடல் கராத்தே என்பது எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உயிர் நிலைகள் மீது தாக்குவதாகும். எதிரி கடுமையானதோர் ஆயுதத்தை வைத்துக்கொண்டு நம்மைத் தாக்கவருகிறான் என்றால் அந்தப் பயங்கரத்தில் இருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள அவனது உயிர்நிலைமீது தாக்கும் நன்முயற்சியில் ஈடுபடமுடியும். இதைத்தான் கராத்தே கூறுகின்றது.



கராத்தேக்கலை மீது எமது தேசியத்தலைவர் அவர்களின் பார்வை ஆண்கள் மாத்திரம்தான் கராத்தே கற்க வேண்டும் என்று இல்லாமல் பெண்களும் சமநிலையில் கற்றுக்கொள்ளவேண்டும், அத்தோடு தங்களின் பாதுகாப்பை தாங்களே உறுதிசெய்யவும்வேண்டும் என விரும்புகின்றார். அந்த வகையில் தமிழீழத்தில் உள்ள பெண்கள் கராத்தே கலையில் எந்த நிலையில் இருக்கின்றார்கள்? அவர்களுக்கு கராத்தே கற்கும் வாய்ப்பு எவ்வாறு உள்ளது?

ஆரம்பத்தில் பெண்கள் கராத்தே பயில்வதென்பது ஓர் கேள்விக்குறியாகத்தான் இருந்துவந்தது. எங்களுடைய சமூகத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு பெண்கள் சைக்கிள் ஓடுவதைக்கூட குற்றமாக பார்க்கும் நிலைதான் இருந்தது. ஆனால் இன்று கராத்தே கலை என்பது பெண்களுக்கு ஒரு பொக்கிசமாக திகழ்கின்றது. இப்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை எடுத்துப்பார்த்தால் பலரும் இருக்கின்ற இடத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு என்பது கேள்விக்குறியான நிலையிலையே இருக்கின்றது. அவர்களின் கன்னியத்திற்கான ஆபத்து, அவர்கள் பயணத்தின்போது ஏற்படும் ஆபத்துக்கள் எனப் பல. இந்தச் சம்பவங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், பெண்கள் தங்களுடைய பாதுகாப்பை தாங்களே உறுதி செய்ய வேண்டிய நிலையுள்ளது. எனவே கராத்தே கலையை ஒவ்வொரு பெண்ணும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது காலத்தின் தேவையாகியுள்ளது. அந்த வகையிலே தமிழீழ தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப தமிழீழப் பெண்கள் கராத்தேக் கலையில் மிகவும் சிரத்தைகொண்டு கற்று வருவதையும் காணமுடிகிறது. இதற்கு சான்று பகரும்படியாக மேஜர் ஈழப்பிரியா அவர்களைக் கூறமுடியும். விசேட படையணியிலிருந்து கராத்தே கலையில் ஆண்களுக்கு நிகராக பல சாதனைகளைச் செய்து கறுத்தப்பட்டி வீராங்கனையாக மண்ணில் விதையாகிப்போகியும் அவரின் சாதனைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இருப்பதுடன் வருடந்தோறும் ஈழப்பிரியா கேடயத்திற்கான கராத்தேப் போட்டிகளை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பிற்கிணங்க கராத்தே சம்மேளனம் விளையாட்டுத்துறையுடன் இணைந்து நடாத்திவருகின்றது. இன்னும் நிறையப்பெண்கள் சாதனைகளைப் படைத்து தற்காப்புக் கலைக்குப் பெருமைசேர்த்து தருகின்றார்கள் என்பதுதான் உண்மை.

கராத்தே கலையில் மாத்திரம் பேர்பெற்றவர் என்று இல்லாமல் யோகா பயிற்சியிலும் சிறந்து விளங்கும் நீங்கள் யோகாசனத்தின் முக்கியத்துவத்தைக் கூறமுடியுமா?

உலகத்தில் அதிசிறந்த கலை எது என்றால் யோகா கலையைத்தான் நான் கூறுவேன். நான் இந்த வயதிலும் கராத்தே கலையைச் சிறப்புறச் செய்யமுடிகின்றதென்றால் அதற்குப் பின்புலமாக மன ஒருமைப்பாட்டைப் பேணிநிற்பது யோகப்பயிற்சிதான். இன்றைக்கு யப்பானைப் பார்த்தால் தெரியும் எந்தப் பயிற்சியையும் ஆரம்பிக்கும் முன்னர் சுவாசப்பயிற்சியில் ஈடுபட்ட பின்னரே தங்கள் பயிற்சியில் ஈடுபடுவோர்கள். உடலை இசைவாக்குகின்ற பயிற்சிகள் எல்லாமே யோகாசனப்பயிற்சிதான். நான் இன்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கும் யோகாதான் காரணம். யோகப் பயிற்சிசெய்தால் குறிப்பிட்டநேரம் ஒதுக்கி, விடாமல் தொடர்ந்து செய்துவரவேண்டும். குறிப்பிட்ட காலம் மட்டும் செய்துவிட்டு விடக்கூடாது. யோகாவில் முதன்மையானது மூச்சுப் பயிற்சியாகும். இப்பயிற்சியை ஆர்முடுகல் அமர்முடுகல் அடிப்படையிலே மூச்சை இழுத்து

தமிழீழ தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப தமிழீழப் பெண்கள் கராத்தேக் கலையில் மிகவும் சிரத்தைகொண்டு கற்று வருவதையும் காணமுடிகிறது. இதற்கு சான்று பகரும்படியாக மேஜர் ஈழப்பிரியா அவர்களைக் கூறமுடியும். விசேட படையணியிலிருந்து கராத்தே கலையில் ஆண்களுக்கு நிகராக பல சாதனை களைச் செய்து கறுத்தப்பட்டி வீராங்கனையாக மண்ணில் விதையாகிப்போகியும் அவரின் சாதனைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இருப்பதுடன் வருடந்தோறும் ஈழப்பிரியா கேடயத்திற்கான கராத்தேப் போட்டிகளை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பிற்கிணங்க கராத்தே சம்மேளனம் விளையாட்டுத்துறையுடன் இணைந்து நடாத்திவருகின்றது.

யோகாப்பயிற்சியை எவன் ஒருவன் விடாமல் செய்து வருகிறானோ அவன் ஆரோக்கியமுள்ளவனாகத்தான் இருப்பான். பொதுவாக சிலர் நினைப்பதுண்டு யோகாப்பயிற்சி என்பது மென்மையான பயிற்சி, கராத்தே பயிற்சி என்பது இறுக்கமான பயிற்சி, இவை இரண்டிற்கும் தொடர்பிருக்கின்றதா என்று. அப்படி அல்ல. இறுக்கமும் மென்மையும் கலந்ததுதான் எங்களுடைய கராத்தேப் பயிற்சி ஆகும். இந்த மென்மையூடாக உடல்வலிமையையும், மனஆரோக்கியத்தையும் உருவாக்குவதுதான் யோகாபயிற்சி. கராத்தே பயிற்சியும், யோகாப்பயிற்சியும் ஒருங்கே ஒருவனுக்கு ஏற்படுமாக இருந்தால் சிறந்த ஒருவனாக இருப்பான். யோகாப்பயிற்சியை ஆணாக இருக்கட்டும் பெண்ணாக இருக்கட்டும் சிறுமியர், வயோதிபராக இருக்கட்டும் அவர்களின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததாகும். இப்பயிற்சியை முறைப்படி கற்று வந்தால் உடல் உள் உறுப்புக்கள், வெளி உறுப்புக்கள் ஆரோக்கியமாக இருக்கும் என்பது

பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரந்தான் கராத்தே கற்பித்து வருகின்றீர்களா..?

1974ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது நான் கராத்தே பயின்று வருகின்ற நாள்முதல் என்னையொரு ஆசிரியராக என்னுடைய குரு அறிமுகப்படுத்தினார். அந்தக் காலந்தொடக்கம் மாணவர்களுக்குக் கற்பித்து வருகின்றேன். அத்தோடு எங்களது சுதந்திரப்போராட்டம் வலுவடைந்த காலப்பகுதியிலிருந்து போராளிகளுக்கும் கற்பித்து வருகின்றேன்.

மாணவர்களுக்கும் போராளிகளுக்கும் கராத்தே கற்பிப்பதில் ஏதாவது வேறுபாடு இருக்கின்றதா?

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி முறையைப் பார்த்தால் விளையாட்டு கராத்தே முறையிலே (ஸ்போட்ஸ் கராத்தே) புள்ளிகள் பெறும்நோக்கோடு தொடுகைமுறைப் பயிற்சிகளே வழங்கப்படுகின்றன. மாறாக போராளிகளைப் பொறுத்தமட்டில் கையுறை வழங்கி மென்முறையைத் தவிர்த்துத்தான் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். போராளிகள் போர்க்களத்தில் எதிரிகளை எதிர்த்து சண்டையிடும் சமயங்களில் எதிரியை அடித்து வீழ்த்தவேண்டிவரும். அதற்காக சர்வதேச விதிகளின்படி வைடல் கராத்தே எனும் முறையைப் பின்பற்றி எதிரியின் உயிர் நிலைகளைத் தாக்கி தங்கள் இருப்பை உறுதிசெய்யும் முறையில் கற்பிக்கிறோம். சிலர் இக்கலையை வர்மக்கலை என்று அழைப்பார் கிட்டத்தட்ட அதே மாதியாகத்தான் இந்த வைடல் கராத்தே முறை அமைந்துள்ளது.

கராத்தே நிலைகளை குறிக்கும் சின்னமாக பட்டியின் நிறங்கள் திகழ்கின்றன. அதன் படி நிலைகளை கூறுங்களேன்?

அதாவது முதலாவது பட்டி பத்தாவது (டென்த் கியூ) பத்தாவது நிலையில் இருக்கும் மாணவப்பருவத்தின் நிலை கூடி 9ஆம் நிலைக்கு தகுதிபெறும் நிறம் வெள்ளையும் 9பதில் இருந்து 8ஆம் நிலைக்கு உயர்த்தப்படும்போது அதன் நிறம் மஞ்சளும் தொடர்ந்து 7இன் நிறம் ஒரேஞ்சும் 6இன் நிறம் பச்சையும் 5இன் நிறம் நீலம் அல்லது நாவல் நிறமாகவும் 5ஆம் நிலையில் இருந்து 4ன்காம் நிலைக்கு தகுதிபெறும் போது நாவல்நிறம் இரண்டு என்று இருக்கும். பின்னர் மூன்றாவது நிலைக்கு உயர்த்தப்படுகின்றபோது நிறம் மண்நிறம். இந்த மூன்றாவது நிலையில்3, 2, 1 என்று உயர்த்தப்படும் அதாவது கறுத்தப்பட்டியை பெறுவதற்கான முன்நிலையாக இருக்கும் இவ்வாறாகதொடர்ந்து பயிற்சிகளைபெறுகின்ற வேளைதான் சோட்டோகானுக்கான கறுத்தப்பட்டி தகுதிநிலையை பெறுவார். முதல்வெள்ளை நிற மாணவப்பருவ நிலையில் இருந்து கடுமையான தொடர் பயிற்சிகளையும் பெற்றுவர முதலாவது கறுத்தப்பட்டியை இரண்டரைவருடங்களில் பெற இயலும்.தொடர்ந்து இரண்டாவது கறுத்தப்பட்டியைபெற இரண்டுவருடங்களும், மூன்றாவது கறுத்தப்பட்டியைபெற மூன்று வருடங்களும், நான்காவது கறுத்தப்பட்டியைபெற நான்கு வருடங்களும், ஐந்தாவது கறுத்தப்பட்டியைபெற ஐந்து வருடங்களும் இவ்வாறான கால இடைவெளியிலேயே பட்டி நிலை உயர்த்தப்படவேண்டுமென்று யப்பானியர்கள் நியமித்திருக்கின்றார்கள். யப்பானியர்களின் கராத்தே நிலையென்பது உயர் தரமான நிலையைப் பார்த்தல் என்பது மட்டும் அல்லாமல் பயிற்சிக்கு ஒழுங்காக வருதல், நன்நடத்தை சரியாகப் பேணப்படுவது, ஆசிரியர்களுக்கு அடக்கமாக இருக்கவேண்டும் என்பதுடன் மண்நிறப் பட்டி பெற்றவர் இளைய மாணவர்களுக்கு வகுப்பு கொடுத்தல் வேண்டும், அத்துடன் வகுப்புகொடுப்பர் மண்நிறப் பட்டிக்குத் தகுதியானவரா என்று திறன் மீட்டல் செய்யப்படவேண்டும். எந்த அளவிற்குப் போட்டிகளில் பங்கெடுத்துக்கொள்கின்றார் இவ்வாறாகத்தான் பட்டி படிநிலைகள் உயர்த்தப்படும்.

# உழைப்பு

மு.கந்தசாமி



கடின உழைப்பின் மூலம் தாயக மக்கள் பொருண்மிய வளத்தைக் கட்டி எழுப்பி வருகின்றனர்.

பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் உள்ள பல்வேறு சிரமங்களையும் தாங்கிக் கொண்டு உற்பத்திச் செலவுக்கும் கட்டுப்படியாகாத நிலையில் எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருண்மிய வளத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் பொருளாதாரத் தடைக்கு முகம் கொடுத்து மேற்கொண்டு வருவதே விவசாய நடவடிக்கையாகும்.

பிறதுறைகளைக் காட்டிலும் வேளாண்மை தொழிலில் விவசாயிகளின் கடின உழைப்பு தேவைப்படுவதுடன் வெயில், மழை, குளிர் இவைகளைப் பொருட்படுத்தாது எமது விவசாயிகள் மேற்கொண்டு வரும் உழைப்பால் தாயக மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். வேளாண்மைத் தொழிலில் உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் உற்பத்தியாளருக்குக் கிடைப்பதில்லை.

உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருட்களுக்கு போதிய சந்தை வாய்ப்புக்களும் அரிதாகவே இருக்கின்றது. நெருக்கடியான போராட்ட சூழலில் உழவன் உற்பத்தியை மேற்கொண்டால் தான் மக்களைப் பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்ற முடியும் என்ற நோக்கோடு உழவன் உழுகின்றான். உலகம் என்ற மாபெரும் தேருக்கு பொருத்தப்படும் மிகச்சிறிய அச்சாணி சரியாகப் பொருத்தப்படாது விட்டால் அந்தத் தேரே சரிந்துவிடும் தாயக மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே உழவன் உழைக்கின்றான்.

இதுபற்றி வள்ளுவரும் ஒரு குறளில் குறிப்பிட்டுள்ளார். "உழு

பொறுத்து"

சிறிலங்கா அரசு காலத்திற்குக் காலம் தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எமது தேச விடுதலையை வென்றெடுப்பதற்காக தேசியத் தலைவர் தாயக விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து தனது அணியில் ஆட்களைத் திரட்டி சிறிலங்கா அரசிற்கு எதிராக விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுக்க தொடங்கியதும் தமிழ்மக்கள் மீது பல கெடுபிடிகளை பல வடிவங்களிலும் கட்டவிழ்த்து விடத் தொடங்கியது.

இதில் முதற்கட்டமான நடவடிக்கையாக பொருண்மிய வளத்தைச் சீரழிக்கும் நோக்கில் பொருளாதாரத் தடைகளை மக்கள் மீது திணித்தது. இதன் மூலம் மக்களைத் தனது பக்கம் திசை திருப்ப முனைந்தது. இதுமட்டுமல்லாது மக்களின் வாழ்வாதாரத்திற்கான முக்கிய மூலமான உணவில் தனது பலத்தைக் காட்டியது.

தாயகப்பிரதேசத்தில் உற்பத்தி மேற்கொள்வதற்கான விதை பொருட்கள் உற்பத்திற்கான உள்ளீடுகள், உபகரணங்கள் இயந்திர சாதனங்கள், அவற்றின் உதிரிப்பாகங்கள், இயந்திர சாதனங்களுக்கான எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் என்பவற்றிற்குக் கூட தடைவிதித்தது.

> எமது தேச விடுதலையை வென்றெடுப்பதற்காக தேசியத் தலைவர் தாயக விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து சிறிலங்கா அரசிற்கு எதிராக விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுக்க தொடங்கியதும் சிறிலங்கா அரசு தமிழ்மக்கள் மீது பல கெடுபிடிகளை பல வடிவங்களிலும் கட்டவிழ்த்து விடத் தொடங்கியது.
>
> இதில் முதற்கட்டமான நடவடிக்கையாக பொருண்மிய வளத்தைச் சீரழிக்கும் நோக்கில் பொருளாதாரத் தடைகளை மக்கள் மீது திணித்தது.



இத்தடைகளின் காரணமாக 1990ம் ஆண்டு காலப்பகுதியில் எமது தேசியத் தலைவர் அவர்களால் திட்டமிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனம் (ரூட்) என்ற பெயரில் தமிழ்மக்களின் பொருண்மிய வளத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் வாயிலாக தாயக மக்களுக்கான உணவு மற்றும் போசாக்கான சத்துணவு போன்றவற்றை தாயக மண்ணில் உற்பத்தி மேற்கொள்வதும் எதிரியின் பொருளாதாரத் தடைக்கும் உற்பத்திப் பொருட்கள் உள்ளீடுகள் ஆகியவற்றிற்குமான தடைக்கும் மாறாக ஈடுகொடுக்கக் கூடிய வகையில் கிராம மட்டங்களில் கிராமிய உற்பத்திக்குழுக்களை தமிழீழ ஆய்வு நிறுவனம் நிறுவியது.

இதன் மூலம் கிராமங்களில் உள்ள மூலவளங்களை இனம் கண்டு திறமைசாலிகள் புத்திஜீவிகள், ஆகியோரும் இனம் காணப்பட்டனர்.

இவர்களூடாக கிராம ரீதியில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் அடிப்படையில் கால் நடைகளில் எடுக்கப்படும் பாலிலிருந்து போசாக்கான உணவுப் பொருட்களை கிராம ரீதியான உற்பத்தியிலீடுபட்டனர்.

இதனடிப்படையில் சிந்து பால் வெல்லம் என்னும் (ரொபி) பொருள் தயாரிக்கப்பட்டு சிறிலங்காவிலிருந்து இங்கு வரும் ரொபிகளுக்கு மாற்றீடாக மக்களுக்கு வழங்கப்பட்டதுடன் பாலுற்பத்தியிலிருந்து பல பொருட்களைத் தயாரித்தும் மக்களுக்கான போசாக்கான பண்டங்களும் கிடைக்கக் கூடியவாறும் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

மற்றும் பயிர் உற்பத்திக்குத் தேவையான உள்ளீட்டுப் பொருட்களை கால்நடைகளின் கழிவுகளிலிருந்தும் உள்ளூரில் கிடைக்கும் தாவரங்களின் கழிவுகளிலிருந்தும் மூலப் பொருட்களாக பயன்படுத்தி பயிர் உற்பத்திக்கான உள்ளீட்டுப் பொருட்களை கிராம ரீதியில் உற்பத்தி செய்து உற்பத்திக்காக வழங்கி உற்பத்தியை ஊக்குவித்தனர்.

இதற்கமைவாக மக்கள் தாமாக முன்வந்து இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள், இன்றி பயிர் உற்பத்தியை மேற்கொண்டதில் வெற்றியும் கண்டனர். மற்றும் எரிபொருள் தடை காலத்திலும் நீர்ப்பாசனம் செய்வதற்கும் நீர் இறைப்பதற்கும் மாட்டின் வலுவைப் பயன்படுத்தி 'கமலை' நீர் இறைப்பு முறையை பயன்படுத்தி வெற்றி கண்டனர்.

இதன் காரணமாக எமது மக்களின் பணம் சிறிலங்காவிற்கு எடுத்துச் செல்லாது தடையானதுடன் எமது மக்களின் வாழ்வாதாரமும் அதிகரித்தது.

அத்தோடு எமது சுற்றுச் சூழலும் மாசுபடுவது தடுக்கப்பட்டதுடன் பொருண்மிய வளமும் மேம்பாடு பெற்றது. எமது மக்கள் நோயின்றி வாழ சிறிலங்கா அரசு விதித்த பொருண்மியத் தடை பெரிதும் உதவியது.

இதுபோன்று தாயகப்பகுதிகளில் கிடைக்கும் பழவகைகள், பனைவளம், இவற்றிலிருந்தும் போசாக்கான பல பானங்கள் உணவுப்பொருட்கள் தயாரித்து மக்களின் பாவனைக்காக விடப்பட்டது இதனால் உள்ளூர் உற்பத்திகள் அதிகரித்து எமது பொருண்மிய வளம் மேம்பாடு அடைந்து கொண்டிருக்கின்றது. அது மென் பொருண்மைய ஒத்துழைப்பும் அவசியமானது.

Tamileelam Archive

# வீறு - 8

## உதடுகள் அசைந்தன

உதடுகள் அசைந்தன
உதடுகள் அசைந்தன



● தமிழ்க்கவி

வடிவழகியின் அழகிலும் அளவில்லாத அவள் காதலிலும் தன்னைப் பறிகொடுத்த சங்கிலியன், அவளை நல்லூர் மாடவீதியின் புறத்தே அமைந்துள்ள பூங்காவில் அடிக்கடி சந்தித்து வந்தான். வடிவழகி அவன்மேல் உயிரையே வைத்திருந்தாள். ஆனால் அவள் அப்படி சங்கிலியனைக் காதலிப்பதும் சந்திப்பதும் யாருக்கும் தெரியாது. அப்படியிருக்க இன்று, சந்தடி கண்டதும் பரபரப்பாக எழுந்து ஓடினாள் வடிவழகி. சுபாதிட்டாவின் கண்ணில் பட்டுவிட்டோமே என்று அவள் நெஞ்சம் பதைத்தது. சிவபூசையில் கரடி புகுந்தாற்போல் புகுந்த சுபாதிட்டா சங்கிலி என்றழைக்கப்படும் இரண்டாம் செகராஜசேகரனைத் தூக்கி வளர்த்தவர். அவனுக்குப் போர்ப்பயிற்சிகளும், கலைகளும் கற்பித்தவர். அவனது வீரம் மட்டுமே யாழ்ப்பாணத்தைக் காக்க வல்லது என்று கண்டு கொண்டவர்.

"சங்கிலியா? இது என்ன?" சீற்றத்துடன் எழுந்தது அவர் கேள்வி.

"எது குருதேவா?"

"நாடாளும் மன்னன் ஒரு பெண்ணின் மடியில் விழுந்து கிடப்பது?"

"அரசர்கள் காதலிக்கக்கூடாது என்று ஏதும் விதிமுறை..."

"இல்லைத்தான் ஆனால் நீ..."

"நான்..."

"சங்கிலியா, நீ சென்றவாரம் வரை நீ உன் எண்ணத்தின் படி நடந்தாய். கவலையில்லை. ஆனால் இனி..."

"இனி..."

"சங்கிலியா... நீ சிறுவனல்ல... உன்னை இந்த நாடு தன் பாதுகாவலனாக ஏற்றுக் கொண்டு விட்டது"

"இல்லை ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டது"

"சங்கிலி நீ அறியாமல் பேசுகிறாய்.."

"இல்லை குருதேவா, அண்ணன் பண்டாரனுக்குப் பின்பு இந்த அரசுரிமை அண்ணன் பரநிருபனுக்கே சொந்தம். அப்படியிருக்க நீங்கள் முறையில்லாமல் என்னை இப்பதவியில் அமரச் செய்தீர்கள்" இதைக் கேட்ட சுபாதிட்டா விரக்தியாகச் சிரித்தார்.

"அரச முறைக்கு நீ சொல்வது சரிதான். ஆனால் சிங்கவாகு



"சங்கிலியா... நீ சிறுவனல்ல... உன்னை இந்த நாடு தன் பாதுகாவலனாக ஏற்றுக் கொண்டு விட்டது"

"இல்லை ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டது"

"சங்கிலி நீ அறியாமல் பேசுகிறாய்.."

"இல்லை குருதேவா, அண்ணன் பண்டாரனுக்குப் பின்பு இந்த அரசுரிமை அண்ணன் பரசுரனுக்கே சொந்தம். அப்படியிருக்க நீங்கள் முறையில்லாமல் என்னை இப்பதவியில் அமரச் செய்தீர்கள்" இதைக் கேட்ட சுபாதிட்டா விரக்தியாகச் சிரித்தார்.

தப்பியவனை நஞ்சு பலிகொண்டது" பெருமூச்சு விட்டபின் தொடர்ந்தார். "பண்டாரன் பதவியேற்று மூன்று மாதங்கள் முடிவதற்குள் ஒரு படுபாவி நந்தவனத்தில் மறைந்து நின்று கட்டாரியால் குத்திக் கொன்றான்".

"குருவே அந்தப் பாவியை இன்னும் சிறையில் வைத்திருக்கிறோமல்லவா? ஏதாவது பேசினானா?..."

"ம்... பேசவைக்க முயற்சிகள் நடக்கின்றன. அவன் பேசுவான். சங்கிலியா பரநிருபசிங்கன் வைத்தியத்தில் கவனம் செலுத்துமளவிற்கு, அரசியலில் கவனம் செலுத்தவில்லை. தென்னிலங்கையில் வந்துள்ள பறங்கியர் மன்னார்த்தீவு, ஊர்காவற்துறை போன்ற இடங்களுக்கு வந்து செல்வதாகத் தெரிகின்றது. வன்னியர்களும் எமக்குத் தரும் திறையை ஒழுங்காகச் செலுத்துவதில்லை. மேலும் கொட்டியாரம், பணங்காம வன்னிமை இரண்டும் கண்டியரசனின் மேலாண்மையை ஏற்கச் சித்தமாய்



இரு கைகளையும் உயர்த்தித் தூண்களின் சக்கரவடிவப் பிறையில் முடியப்பட்ட சங்கிலியின் மீது கோர்த்த நிலையில் அந்த மறியற் கைதி தலைகுனிந்து நின்றான். யாழ்ப்பாண இராட்சியத்தின் இணையற்ற மன்னன் செகராஜசேகரனின் கைகள் அவன் தலையை நிமிர்த்தின.

"எய்தவன் இருக்க அம்பை நோவதில்லை நாம். உண்மையைச் சொல் யார்? யார் உன் எசமானன்?...." துவண்டுபோய்க் கிடந்த அந்தக் கொலைகாரன் தலை நிமிர்ந்தான். செகராஜசேகரனாம் சங்கிலியனின் கருணை பொங்கும் விழிகளை ஒருகணம் நேராகப் பார்த்தான். அவன் உதடுகள் அசைந்தன.

நாட்டுக்குத் தேவையானது வீரம் செறிந்த ஒரு தலைமை. அறிவு நிரம்பிய ஆட்சி. அது...அது... நீதான்..."

"ஆனால் இதை உலகம் ஒப்பாது"

"நாங்கள் எங்களுக்கெதிராகச் சதி செய்யும் வன்னியர்களை முதலில் ஒழித்துக் கட்டுவோம்",
என்ற போது வாயிற் காவலன் விரைந்து வந்தான்.

"பணிகின்றேன் குருதேவா" என்ன விசயம் என்பது போல் நிமிர்ந்து பார்த்தனர் சங்கிலியும் கூபாதிட்டாவும்.

"கொலையாளி பேசுவதாக தங்களுக்கு வியனம் அனுப்பியுள்ளனர் பிரபோ"

"அப்படியா.... இதோ வருகிறோம்." சங்கிலியும் கூபாதிட்டாவும் சிறைச்சாலையை நோக்கி விரைந்தனர்.

* * * * *

அடப்பங்கட்டிப் புறப்பட்ட பரநிருபசிங்கன் மலைநாட்டிலிருந்து பல அரிய மூலிகைகளையும் சேகரித்துக்கொண்டு புறப்பட்டபோது அன்றைக்கென்று பெருமழை பிடித்துக் கொண்டது. அனுராதபுரத்துக் காடுகளுக்கூடாகப் பயணஞ்செய்த பரநிருபசிங்கனை பெருமழை தடுத்துவைத்துக் கொண்டது. மழை ஓய்ந்து புறப்பட்டவனைக் கண்டோ என்னவோ அருவியாறு அசையவிடவில்லை. அவனைக் கடந்து பொங்கிப் பெருகி கட்டற்றுப் பாய்ந்தது அந்தக் காட்டாறு. மினெ[illegible]

சீதாவாக்கைக்குச் செல்ல முடியாதபடி மாஓயாவும் சீறிப்பாய்ந்தது. இருபுறமும் ஆற்று வெள்ளத்தைப் பார்த்தபோதே பரநிருபனின் எண்ணமும் சீற்றங்கொண்டது. என்ன செய்வது செல்லா இடத்துச் சினம் தீது. இருபுறமும் ஆற்றுவெள்ளத்தைப் பார்த்தவாறே பயணம் செய்ய வேண்டியவர்கள் காத்திருந்தனர். தற்காலிகமாக காட்டுத் தடிகளைக் குத்தி காட்டுக் கொடிகளால் வரிந்து பரண்போல அமைக்கப்பட்டிருந்த பாலம் ஒருபுறம் அறுந்து நதியோட்டத்துடன் அல்லாடிக் கொண்டு இருந்தது. ஒருபுறம் சாய்ந்த பெருமரங்களின் வேர்களை நீர்கிளறி மேலே தூக்கிவிட்டது. அப்படித் தூக்கப்பட்ட மரங்கள் நீரில் அள்ளுண்டு புரண்டு போய்க் கொண்டிருந்த காட்சி அழகுடன் அச்சத்தையும் விளைவித்தது. அலையின் ஓட்டத்தில் ஒரு பன்றி வேகமாக உருண்டதைக் கண்ட பரநிருபசிங்கனைத் திகில் பற்றிக்கொண்டது. முறிந்து வீழ்ந்த கிளைகளைப் பற்றியவாறே மந்திகள் தாவிக் கரைசேர்ந்தன. மழை சற்று ஓய்வதும், பின்பு உக்கிரம் கொள்வதுமாகப் போக்குக் காட்டிக்கொண்டிருந்தது. பரநிருபசிங்கன் வேறுவழியின்றி அவ்வூரிலுள்ள சத்திரத்தில் தங்க வேண்டியதாயிற்று. இரவு நெடுநேரமாகியும் அவனால் உறங்க முடியவில்லை. சத்திரத்தின் விட்டத்தைப் பார்த்தவாறே உறங்கிவிட முயற்சிசெய்தான். ஒரு இளவரசனுக்குரிய ஆரவாரம் எதுவுமின்றி ஒரு நாடோடிபோல அவன் வந்துகொண்டிருந்தான். காரணம் அவனது தொழில் வைத்தியம். அதுவும் மூலிகை வைத்தியம். பாதுகாவலர்களுடன் பயணஞ் செய்தால் அவன் மூலிகைகளைத் தேடவோ அவற்றை முகர்ந்து கசக்கி ஆய்வு செய்யவோ முடியாது. அவனது மூலிகை [illegible]ரிய முக்கியமானதாக இருந்ததால் சாதாரண

பிரஜைகள்போல ஒரு துணி மூட்டையுடன் புறப்பட்டு விட்டான். சத்திரத்தில் மழை காரணமாக சனம் அன்று அதிகமாகவே காணப்பட்டது. ஆகவே சந்தடியும் அதிகந்தான். பேச்சுக் குரல்கள் சம்பந்த சம்பந்தமில்லாமல் அவனைத் தொட்டு மீண்டன. ஆனால் ஒருவர் பேசிய விடயம் அவனை வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்திருக்க வைத்தது.

"அப்படியானால் முடிசூட்டு விழா கோலாகலமாக நடந்ததோ?"

"அட போப்பா, சங்கிலி இளவரசன் முடிசூட மறுத்து விட்டார்."

"ஏனாம்?"

"ஏனென்றா கேட்கிறாய், சிங்கவாகு மன்னர் நஞ்சினால் கொல்லப்பட்டார் அல்லவா?"

"ஆமாம், ஆமாம், யாரோ தேசத்துரோகி ராஜத்துரோகி அவரைக் கொன்றுவிட்டான்."

"ம்"

"பிறகு மன்னர் பண்டாரன் அவர்களை, அவர் நந்தவனத்தில் உலவிக் கொண்டிருந்த போது ஒரு பாவி கத்தியால் குத்திவிட்டான்."

"அப்போ மன்னர் பண்டாரன்"

"அந்த இடத்திலே இறந்துவிட்டார்"

"அடப்பாவிகளா, தமிழர்களுக்குப் போதாத காலம்"

"ம்...ம்..."

"அந்தப்பாவி" "அதுதான் கொலைகாரன் தப்பிவிட்டானா?"

"விடுவார்களா... மடக்கிப் பிடித்துவிட்டார்கள்"

"அது தானே, இப்போ இது யாருடைய சதி என்பது தானே புரிந்திருக்கும்".

அந்தக் கடும் மழையிலும் குளிரிலுங்கூடப் பரநிருபசிங்கனுக்கு வேர்த்துக் கொட்டியது. அடுத்த வாரிசு தானே என்பதில் அவனுக்கொரு புளகாங்கிதம் கூட ஏற்பட்டது. ஆனால்... என்னயிது இவர்கள் பேச்சில் ஒரு மறுதலிப்புத் தெரிகிறதே.

"ஆமாம் சங்கிலி செகராஜசேகரன் அவர்கள் அரசகட்டில் அமரவேண்டியதாயிற்று".

"வந்தால் என்ன... வராவிட்டால் என்ன... ஆட்சிப் பொறுப்பை அவர் கையில் விட்டால் தமிழர் கதி அதோ கதிதான்."

"சரி, சரி படுத்துக்கொள் விடிந்ததும் பேசிக்கொள்ளலாம்."

பேச்சுக் குரல்கள் ஓய்ந்தாலும் பரநிருபனின் உள்ளம் கொதித்தது. அவன் கைகளைப் பிசைந்தவாறே அங்குமிங்கும் நடைபயின்றான். "ச்சா, கொலையாளி அகப்பட்டாலும் அவன் பேசமாட்டான்" அதில் அவனுக்குச் சந்தேகமில்லை. "அரச பதவி மட்டும் தன் கைநழுவிப் போய்விடுமோ...." பரநிருபசிங்கன் தன் பற்களை நறநறவென்று கடித்தான். நாளை மறுநாள் பூரணை... கார்த்திகைப் பூரணை... அன்று கட்டாயமாக அரச கட்டிலில் மன்னர் குடும்பம் இருந்தாக வேண்டும். மன்னனும் பட்டத்து ராணியும் நல்லைக் கந்தனை வழிபட்டுவிட்டே சிம்மாசனத்தில் அமரவேண்டும். அரசனாக வேண்டிய நான் அனுராதபுரக் காட்டில் அருவிக் கரையில் ஓ... என்ன விதி? என்ன விதி? ஆற்று நீர் வடிந்தால் கூட அவன் கார்த்திகைத் திருவிழாவிற்குப் போக முடியாது. அவன் நிலைகலங்கிப்போய் நின்றான். அவனைப் புரிந்துகொண்ட வானம் மேலும் கலங்கிக் கண்ணீர் வடித்தது.
பரநிருபசிங்கன் எதுவும் செய்யத் தோன்றாதவனாய்த் தன் தலையில் அடித்துக்கொண்டான். பற்களைக் கடித்தான். கைகளைப் பிசைந்துகொண்டான். அவன்படும் துயரைக் கொஞ்சமும் இலட்சியம் செய்யாத மயில்கள் மகிழ்ச்சி மீதூர தோகை விரித்தாடின. மயில் பெட்டைகள் அதனை ரசித்துக் கொண்டே அருகிணைந்தன. இதைக் கண்டுவிட்ட மகிழ்வோடு வானமும் சிரிக்க ஆரம்பித்தது.

* * * * *

சிறைக்கூடத்தில் பலமான தூண்களில் பொருத்தப்பட்டிருந்த இலுப்பெண்ணைப் பந்தங்கள் ஒளியைக் கக்கிக் கொண்டிருந்தன. சங்கிலி செகராஜசேகரனின் வருகை அங்கு அறிவிக்கப்பட்டதும் காவலர்கள் விறைப்பாக நின்றனர். ஞானி கூபாதிட்டாவுடன் உள்நுழைந்த சங்கிலி செகராஜசேகரனைப் பாதாளச் சிறைக்குள் அழைத்துச் சென்றான் தண்டநாயகன். இரு கைகளையும் உயர்த்தித் தூண்களின் சக்கரவடிவப் பிறையில் முடியப்பட்ட சங்கிலியின் மீது கோர்த்த நிலையில் அந்த மறியற் கைதி தலைகுனிந்து நின்றான். யாழ்ப்பாண இராட்சியத்தின் இணையற்ற மன்னன் செகராஜசேகரனின் கைகள் அவன் தலையை நிமிர்த்தின.

"எய்தவன் இருக்க அம்பை நோவதில்லை நாம். உண்மையைச் சொல் யார்? யார் உன் எசமானன்?...." துவண்டுபோய்க் கிடந்த அந்தக் கொலைகாரன் தலை நிமிர்ந்தான். செகராஜசேகரனாம் சங்கிலியனின் கருணை பொங்கும் விழிகளை ஒருகணம் நேராகப் பார்த்தான். அவன் உதடுகள் அசைந்தன.

# புரிதல்

சு.ஞாலவன்



நிசப்தமான இரவின் அமைதியைக் கலைக்கும் வகையில் எழுந்த சத்தடியினால் தூக்கமே கூடவே குழம்பியிருந்தது. பாதி ஜீவன் தூங்க லோகத்தை விட்டு வரமறுத்தாலும் கலைந்து போகாத மீதி கண்களை இறுக மூடிவைத்திருந்தது.

அங்குமிங்குமாய் மாறிமாறிக்

வாழ்க்கை என்டிறதே போராட்டம் தானே அப்படியிருக்கப் போராடுறதுக்குத் துணியாமல் மூச்சை மட்டும் தக்கவைச்சுக் கொள்ளிறதையே வாழ்க்கையெண்டு

அனைத்தையுமே நாசம் செய்யும் அவற்றின் அட்டூழியம் ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

சனியன் ஏறி மிதிக்க வேணும் என்று மனம் வாயில் வந்ததால் திட்டித் தீர்த்தாலும் போர்வையை விலக்கி எழுவதற்கு மனம் மட்டும்

கேட்ட கீச்சல் சத்தத்துடன் குசினியில் புத்தக மேசையில் இன்னும் தூக்கத்தில் விளங்கிக் கொள்ளாத எங்கெங்கோ எல்லாம் தடல்புடலாகப் பொருட்கள் தட்டுப்பட்டும் விழுந்தவாறும் இருந்தன. சே! வந்திட்டுது திரும்பவும் அரைத்தூக்கத்தில் ஆத்திரம் மட்டும் முழுதாக வந்து தொலைத்தது. இன்று நேற்றல்ல சிலநாட்களாகவே அவைகள் புரியும் அட்டகாசம் அளவெல்லைகளைத் தாண்டியதாக இருந்தது. தின்பண்டங்கள் மட்டுமன்றி கைகளில் அகப்படும்

அனைச்சு அஞ்சு நிமிசம் ஆகேல்லை. அதுக்கிள்ளை வந்திட்டுதுகள். கடவுள் ஏன்தான் உதுகளைப் படைச்சாரோ தெரியேல்லை. முதல் நாள் கேட்டதைவிட அதிகப்படியான கீச்சுக் கீச்சுக்கள். அடாவடித்தனமும் அதிகமாகத் தான் இருந்தது. இரண்டைவிட அதிகமாக இருக்குமோ என முறுகினாலும் அதிகப்படியான கணக்குகளுக்கு இடங்கொடுத்து இதமான தூக்கத்தைக் குழப்பிவிட மனமில்லாமல் இருந்தது.

எத்தினை கழுதையள் எண்டாலும் இருக்கட்டும் நாளைக்கு விடிஞ்ச உடன உதுகளைத் தேடித்தேடித் தீர்த்துக்கட்டோணும் உள்மனம் ஆதங்கித்தது. நித்திரையைத் தொடர்வதற்காக மனதிற்குச் சொல்லப்பட்ட அந்த ஆறுதல் வார்த்தைகள் பகலில் அவை அதிகம் பார்வைக்கு அகப்படுவதில்லை என்ற உண்மையினால் அடிபட்டுப் போயின.

இன்டைக்கு மட்டும் என்னெண்டாலும் செய்து தொலைக்கட்டும் ஆற்றாக் கொடுமையில் அகப்பட்ட இறுதி ஆறுதலோடு முகத்துக்கு மேலாகப் போர்வை உயர்ந்தது. பக்கவாட்டாகக் காதுகளை அடைத்துக் கொள்வதற்கும் போர்வையை நன்றாகவே பயன்பட்டது. முதலில் கேட்ட இம்சைகளிலிருந்து செவிப்புலன் ஓரளவு விடுபட அப்பாடா இனிச் சிக்கலில்லை. நல்லதொரு நித்திரை அடிக்கலாம் என்ற அங்கலாப்புடன் மூடிய கண்கள் வியர்த்து விறுவிறுக்க மூச்சடைக்காத குறையில் மீண்டும் விழித்துக்கொண்டன. முகத்தை மூடிய போர்வையைக் கைகள் இழுத்தெறிந்தது. மூஞ்சையை மூடிக்கொண்டு என்னெண்டு படுக்கிறது அதே பரிந்துரையுடன் காதுகளுக்கும் விடுதலை கிடைத்தது.

அடுத்த கட்டமாகப் படுக்கையிலிருந்து அதிகம் நகராமல் எறிவதற்கு உகந்தவையாக ஏதாவது கைகளில் அகப்படாதா என்ற வாஞ்சையில் உடலை அசைக்காமல் கைகள் மட்டும் உலாவின. எல்லாப் பிரயத்தனங்களின் போதும் மிச்சமிருந்த பாதி நித்திரையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தலைமாட்டில் இருந்த தண்ணீர்குவளை அகப்பட்டது. நோ அருமந்தது அதால எறியக்கூடாது. ம், சில்வர் தானே எறிஞ்சாப்போல இப்ப என்ன உடையவே போகுது. அடுத்த சில நொடிகளில் சத்தம் கேட்ட திசையை நோக்கி பரிதாபத்துக்குரிய குவளை பறந்தது. சில நிமிடங்களுக்குச் சத்தம் குறைந்திருந்ததாகவே மனம் சொன்ன போதும் மீண்டும் கீக்...கீக்...கீக்!

அடுத்ததாக அகப்பட்டது ரோச்தான் சே எந்த மடையனாவது ரோச்சால எலிக்கு எறிவானா? என உள்மனம் சொன்னாலும் அறிவுமனம் ஆழமாகவே யோசித்தது. ரோச்சிற்குள் போடப்பட்டிருந்த மின்கலங்கள் ஒவ்வொன்றாக கழற்றப்பட்டு இரண்டுமுறை ஆத்திரம் தீரச் சத்தம் வந்த திசைநோக்கி எறியப்பட்டன.

தொடர்ந்தும் புரண்டு புரண்டு நித்திரைக்காகத் தவம் கிடந்த போதிலும் சில நிமிடமேனும் கண்ணை மூடமுடியாத ஆரவாரத்தின் மத்தியிலே அன்றைய இரவு கழிந்தது. சாளரங்களுக்கூடாக நுழைந்த வெளிச்சத்தில் இரவில் அந்த ஊடுருவிகள் நிகழ்த்தியிருந்த அட்டகாசம் புலப்பட்டது. எந்த நித்திரையைத் தொடரவேண்டும் என்பதற்காக எழுவதைத் தவித்திருந்தேனோ அந்த நித்திரை முற்றாக இழக்கப்பட்டிருந்தது. இதைவிட எலிப்பொறியை எடுத்து

வைச்சிருந்தால் கூட 3,4 மணித்தியாலம் ஆவது நிம்மதியாய் படுத்திருக்கலாம் பிந்திய ஞானம் சொல்லியது பொறியைத்தேடி எப்படியாவது இன்டைக்கு எடுத்திடோணும் இல்லாட்டி புதுசாய் ஒன்டை வாங்கிடோணும்! பிளேக் நோய்கூட உதுகளாலே தானே வர்றதாம் தூக்கத்தை இழந்த பட்டறிவில் விழிப்புணர்வு வற்புறுத்தியது. அந்த விழிப்புணர்வின் வெளிச்சத்தில் போர்வைக்குள் கிடப்பதற்காக இரவு கூறிக்கொள்ளப்பட்ட நியாயங்களை மீண்டும் நினைத்துப் பார்க்க மனம் கூசியது.

வெளியே வீதியில் வீட்டுக்கொருவரை விடுதலைக்காக அணிதிரளச்சொல்லும் வேண்டுகைகள் ஒலிபெருக்கிவழி விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வழமைபோலவே சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பிற்குட்பட்ட தாயகப்பகுதியில் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் பற்றிய செய்திகளைத் தாங்கியவாறு அன்றைய காலைப் பத்திரிகை மேசைமீது கிடந்தது. இரவு எறிந்த மின்கலங்கள் அறையின் மூலையில் ஏளனமாகப் பார்த்துக் கொண்டிருந்தன. கொஞ்சக்காலம் நிம்மதியைப் பார்த்து வாழ்க்கை முழுதுக்கும் நிம்மதியில்லாமல் இருக்கேலாது ஒருநாள் தூக்கம் போனால் போகட்டும் ஆனால் அதுக்குப் பிறகு நிம்மதியான வாழ்க்கை இருக்குது. வாழ்க்கை என்டிறதே போராட்டம் தானே அப்படியிருக்கப் போராடுறதுக்குத் துணியாமல் மூச்சை மட்டும் தக்கவைச்சுக் கொள்ளிறதையே வாழ்க்கையெண்டு திருப்திப்படக் கூடாது எலிப்பொறியின் அவசியமும் என்னுடைய பங்களிப்பின் அவசியமும் புரிந்தது.

# எதியோப்பிய சோமாலிய மக்களின்

அபிசீனியா என வரலாற்றுக் காலத்தில் பெயர் பெற்ற எதியோப்பியாவில் பலதேசிய இனங்கள் பிணைந்திருக்கின்றன. அவர்களில் பெரும்பான்மையோர் அம்காரி மற்றும் ஒரோமா இன மக்களாவர். ஏனையோர் சோமாலி, அஃபு, மகோ முதலான பற்பல மொழி பேசும் இனக்குழுக்களாவர்.

எதியோப்பியாவில் பெரும்பான்மையோர் ஒத்தொடக்ஸ் கிறிஸ்தவர்கள் ஆவர். ஆனால் சோமாலியர் இஸ்லாமியர்கள் அத்தோடு பழக்கவழக்கம் கலாச்சாரம் ஜீவனோபாயம் என்பவற்றில் ஏனைய எதியோப்பியர்களைக் காட்டிலும் எதியோப்பிய சோமாலிகள் வேறுபடுகின்றனர். இவர்கள் வாழ்கின்ற பிராந்தியம் ஒகடென் என அழைக்கப்படுகின்றது.

ஒகடென் எதியோப்பியாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வறண்ட மேட்டு நிலமாகும். இதன் வடக்கிலும் கிழக்கிலும் சோமாலியா எல்லையாக இருந்தது. வெறுஜன சனத்தொகையைக் கொண்டுள்ள இப்பிராந்தியத்தின் பெரும்பான்மையோர் சோமாலி இஸ்லாமியர்கள் ஆவர். 1891ல் எதியோப்பியாவினால் இப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது. 1936 இல் இத்தாலி சோமாலிலாந்துடன் இணைக்கப்பட்டது. 1941 இல் பிரிட்டனின்கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

● இரத்தினசபாபதி

இப்பிரதேசத்தில் வாழ்கின்ற பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு மாறாக 1948 இல் இப்பிராந்தியம் மீளவும் எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது. 1960 களில் இந்தப்பகுதி தனக்குரித்தானது எனச் சோமாலியா வெளிப்படையாக உரிமை கோரியது. 1977இல் ஒகடென் பகுதியில் சோமாலிய இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது. அப்போதைய சோமாலிய சர்வாதிகாரி சியாட் பாரே இதற்குத் தலைமை தாங்கியிருந்தார்.

1978ல் எதியோப்பிய இராணுவம் மீளக் கைப்பற்றி நிலைகொள்ளும் வரைக்கும் இருதேசங்களும் இப்பிராந்தியத்திற்காகக் கடும் போரில் ஈடுபட்டன. எதியோப்பியாவிற்கு ஆதரவாகச் சோவியத்யூனியனும் கியூபாவும் தமது ஆளணி, யுத்த தளபாட நிதிவசதிகளை அளித்திருந்தன. மறுவாத்தே அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் சோமாலியாவிற்கு உதவிகளை நல்கின. 1988 இல் எதியோப்பியாவும் சோமாலியாவும் சமாதான ஒப்பந்தத்தில் கைபெழுத்திட்ட போதிலும் இன்றும் சோமாலியா இப்பகுதிக்குத் தொடர்ந்தும் உரிமை பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

1990களின் தொடக்கத்திலிருந்து ஒகடென்னைத் தனித் தேசமாக்க வேண்டும் என்ற நோக்கில் விடுதலைப் போராளிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவ்வப்போது இப்போராட்டத்தினை அடக்க முடிகின்ற எதியோப்பிய அரசுகளால் இப்போராட்டத்தினை நிரந்தரமாக அடக்க முடியவில்லை. விடுதலை அவாவி நிற்கும் எந்தவொரு இனத்தினதும் முயலுகையும் மங்கியதாகச் சரித்திரம் இல்லை.

ஓரிடத்தை ஆக்கிரமிக்கின்ற அடக்குமுறையாளர்கள் முதற்கண் தமது ஆக்கிரமிப்பின் கோரங்களை மறைக்க அபிவிருத்தி என்றே தொடங்குவார்கள். இதன்வாயிலாக வரலாற்றுத் தடங்களை மறைத்தல் மக்களினை அற்பசொற்ப நலன்களுக்கு அடிமையாக்கித் தம் வசப்படுத்தல் என்பவையே அவர்களின் நோக்கங்களாகும்.

இவ்வாறான ஒன்றே மகிந்தவினது கிழக்கின் உதயம் புலிகளின் தற்காலிக பிரசன்னத் தவிர்ப்பை நிரந்தர மறைவாக எண்ணி குதூகலிக்கும் அற்பத்தனம். அது இதற்கு எதியோப்பிய அரசும் விதிவிலக்கானதல்ல. சோமாலி எல்லைக்குள் அமைந்ததாக இருக்கின்ற கிழக்கு எதியோப்பியாவின் தூர நிறைந்தது ஒரு வெளிப்புற எல்லையான ஜிகா பட்டினம் இப்போது இக்காரணத்தினாலேயே வேகமாக வளர்ந்து வருகின்றது.

எரித்திரியா தனி நாடாகியதை அடுத்து உருவாகிய எதியோப்பிய இணைப்பாட்சியின் அங்கங்களோடு கண்துடைப்பு அதிகாரத்தையும் பணத்தினையும் பகிருகின்ற அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து சோமாலி வலயத்தின் தலைநகராக ஜிகா பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கேற்ற புதிய கட்டமைப்புக்கள் அங்கரில் எழுந்து நிற்கின்றன. ஆனால் அம்மக்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகள் பற்றிச் சிந்திப்பார் எவருமில்லை.

இப்போது ஜிகாவில் புதிய பல்கலைக் கழகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அது மாணவர்களையும் உள்வாங்கத்தொடங்கியுள்ளது. மண்ஒழுங்கையை மாற்றி விரைவில் பொருத்தப்பாடுடைய சரியான விமான நிலையம் ஒன்றினை பெறவுள்ளது. நடமாடும் தங்கற்கூடங்களும் வந்து சேரவுள்ளன. இவையெல்லாம் அம்மக்கள் மத்தியில் எழுந்துள்ள விடுதலைக் கனலைத் தணிப்பதற்காக அடக்கு முறையாளனின் முயலுகையே.

இவ்வாறுதான் சந்திரிகா அம்மையாரினால் இஸ்லாமியத் தமிழர்கள் தமது சொந்த சோதரர்களாக தமிழர்களோடு கரம் கோர்த்து விடக்கூடாது என்கின்ற நோக்கிலேயே கண்துடைப்பிற்கு நெற்களஞ்சியச் சாலையில் ஒலுவில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதனை அப்போதிருந்த இஸ்லாமியத் தமிழ் அரசியல்வாதி தனது வெற்றியாக மார்தட்டியதும் யாவரும் அறிந்ததே. பல்கலைக்கழகம் அமைந்தது என்னவோ உண்மைதான், அது அமைந்து ஒரு தசாப்தமாகியும் இன்னமும் போதிய உட்கட்டமைப்பு வசதிகளும், கற்கை நெறிகளுக்கான வளங்களும் கொடுக்கப்படவில்லை என்பதிலிருந்து எவரும் அடக்குமுறையாளனின் நோக்கத்தை நன்கு விளங்கிக்கொள்வர்.

ஜிகா நீண்டகாலமாகவே விடுதலைப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த இப்பிராந்தியத்தின் பிரதான தலைமையகமாக விளங்கி வருகின்றது. கடந்த சில மாதங்களாக இது இன்னுமதிகமாக கொழுந்து விட்டெரிகின்றது. இங்கு நடக்கின்ற தாக்குதல்களை அல்ஹைதா இஸ்லாமிய அடிப்படைவாதிகளே காரணம் என்று எதியோப்பிய அரசாங்கம் குற்றஞ்சாட்டுகின்றது. ஆனால் எதிர்க்கட்சிகள் எதியோப்பிய இராணுவம் இப்பகுதிவாழ் மக்கள் மீது மேற்கொள்கின்ற நிட்டூரமே இதற்குக் காரணமெனக் குற்றஞ்சாட்டுகின்றன.

நீண்டகாலமாக இப்பிராந்தியத்தில் இயங்கி வருகின்ற ஒகடென் மக்கள் விடுதலை முன்னணி என்கின்ற அமைப்பினுடைய போராளிகளின் செயற்பாடுகளே இதற்கும் காரணம் எனக் கருதப்படுகின்றது. சோமாலியாவின் இடைக்கால அரசாங்கத்தை இஸ்லாமியத் தீவிரவாதிகளிடமிருந்து காப்பாற்ற கடந்த டிசம்பர் மாதத்தில் எதியோப்பியப்படைகள் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து இப்போராளிகளின் செயற்பாடுகள் புதிய பரிமாணத்தை எட்டியிருக்கின்றன.

சோமாலிகள் வாழும் இப்பிராந்தியம் தமது இராணுவம் தம் சகாக்கள் மீது போர் தொடுத்துள்ளதை விரும்பாது இருக்கலாம் அல்லது எதியோப்பியாவின் முன்னேற்றத்தை முடக்க சோமாலியர்கள் இப்பிராந்தியத்திற்குள் ஆயுத வளங்களை நகர்த்தியிருக்கலாம் என்பது பி.பி.சியின் எலிசபத் [illegible]




என்னதான் இருந்தாலும் எதியோப்பியாவின் சோமாலி வலயத்தில் புகைந்து கொண்டிருந்த புரட்சி நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு நன்கு ஆயுத மயப்படுத்தப்பட்டு நன்கு துணிவாக்கப்பட்டு சுவாலை விட்டு எரியத்தொடங்கி விட்டது என்பதே நிஜம்.

சீனர்களால் நடத்தப்படுகின்ற எண்ணெய் வயல் மீது நடத்தப்பட்ட ஏப்ரல் மாதக் குண்டுத் தாக்குதல் மே மாதத்தில் இடம்பெற்ற ஜிகா காற்பந்தாட்ட அரங்கத்தில் வைத்துப் பிராந்திய சனாதிபதியைக் கொல்ல எடுத்துக்கொண்ட முயற்சி ஆகிய இரு சம்பவங்களையும் அடுத்து ஆகஸ்ட் மாதத்தில் இருந்து எதியோப்பிய இராணுவம் இப்பிராந்தியத்தின் மையப் பகுதியான ஒகடென் பகுதியில் பெருமெடுப்பில் கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளினை முன்னெடுத்துள்ளது.

ஜிகா ஏற்கனவே நிறைந்த வன்முறைகளினை அனுபவித்திருக்கின்றது. இப்போதும் அது குமுறிக் கொண்டிருக்கும் எரிமலையாக காத்திருக்கின்றது.

அங்கு எதியோப்பிய இராணுவம் அதிகளவில் தலைகாட்டாவிட்டாலும் ஆனால் நன்கு நிலைப்பட்டு தம்மை மீறி நிலைமை போய் விடாதபடி அவதானிக்கின்றனர்.

அரச காரியாலயங்களிற்குள் செல்கின்ற மக்கள் நன்கு பரிசோதிக்கப்பட்டாலும் அந்த இடங்களில் தாக்குதல்கள் தொடர்வதாக அப்பகுதி அரச அதிகாரிகள் அங்கலாய்க்கின்றனர். ஆகஸ்ட் மாதத்தில் இடம் பெற்ற இரு குண்டுத்தாக்குதல்களின் விளைவாகப் பலர் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு அரசு ONLY அமைப்புத்தான் காரணம் எனக் குற்றஞ்சாட்டியிருந்தது ஆனால் இதனைக் குறித்த அமைப்பு மறுத்துள்ளது.

வழமை போன்று ஏனைய நாட்டு அடக்குமுறை இராணுவங்கள் குறிப்பிடுவது போன்று தாம் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக எதியோப்பிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது. ஆனால்

ணிறைந்த நெருக்கடிகளை எதிர்கொள்வது வெளிப்படையாகத் தெரிவதாகப் பல மனித உரிமை ஆர்வலர்களும் ஆதங்கப்படுகின்றனர்.

இப்பிராந்தியத்தின் பல பகுதிகள் தொடர்ந்தும் கொரில்லாக்களின் செல்வாக்கிலேயே இருக்கின்றன. இப்பிராந்தியத்தின் தெருக்கள் பலவும் படைப்போக்குவரத்தை முடக்குகின்ற நோக்கில் கண்ணிவெடிகளால் சிதறடிக்கப்பட்டுள்ளன. பிராந்திய அரச அலுவலகங்கள் மூடப்பட்டு வாகனங்களும் கொழுத்தப்பட்டு விட்டன. இப்பகுதிகளில் இப்பிராந்திய மக்களுக்கு விரோதமான பணமுதலைக்குச் சொந்தமான பேருந்துகள் கொரில்லாக்களால் நிறுத்தப்பட்டதையடுத்து இப்பகுதியில் பஸ் போக்குவரத்தும் இல்லாமல் போய்விட்டது. பிரதான வீதிகளுக்கு அப்பால் இருக்கின்ற கிராமங்களில் உணவு விநியோகங்கள் எதுவுமே இல்லாதபடியால் கடைகள் உணவகங்கள் எவையும் திறப்பதில்லை.

இப்பகுதியில் வாழ்பவர்கள் பெரும்பாலும் இடையர்களாக இருந்தாலும் சிறந்த போர்வீரர்களே. ஒருகாலத்தில் எதியோப்பிய இராணுவத்திற்குப் பல சிறந்த வீரர்களை இப்பிராந்தியம் கொடுத்திருக்கின்றது. அவர்களில் பலர் எதியோப்பியாவிற்காக எரித்திரியாவில் சமராடியிருக்கின்றனர்.

இப்போது அவர்களின் வீடுகள் எதியோப்பிய இராணுவத்தால் தாக்கப்பட்டு எரியூட்டப்படுகின்றன. இப்பிராந்தியத்தில் உணவு விநியோகம் இல்லாமல் இருப்பதால் கால்நடை வைத்திருப்போர் குறைந்த பட்சம் உயிர்வாழ்க்கைக்காக ஏதோ சமாளித்துக் கொள்கின்றனர். ஆனால் 'எதுவும் இல்லாதவர்களின் நிலைமை சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது' என ஒரு மனிதாபிமானப் பணியாளர் குறிப்பிடுகின்றார்.

விடியலின் வாயிலில் நிற்கின்ற ஒகேடான் விளிம்பிற்குச் சென்று சுதந்திரக் காற்றிற்காய் நெடும் பயணத்தை தொடர வேண்டிய நிலையிலேயே இருக்கின்றது.



# விடுதலைப் பிளிறல்

Tamileelam Archive

# உறுதி தாருங்கள்

ஆன்மா நடுக்குற விழித்தெழுந்தேன்.
மேனி கழுவ நீர் தெளித்தது வானம்
வெண்மடிப்பு அலைச்சேலை கட்டிவிட்டது
நீள்கடல்.
வண்ண மலர் வாசம் கூந்தல் தடவ
வசந்தாவணி மேலாக்கையானது.
கவலை தொலைத்து
விழி நிரம்பியெழுந்த எனக்கேன்
இத்துணையவிசாரம்.
உள்ளே என் பிள்ளைகள் உறக்கமற்றுத்தவிக்க
நானெப்படி உறங்க முடியும்.


மேடையிட்டு அலங்கார வளைவுகட்டி
வாசமலராலும் வத்திக்குச்சியாலும்
நிரப்பமுடியாத அழகு சுமந்து
கிடக்கிறது அவருள்ளம்.
சுவர் தீண்டித் தீண்டி
தாயுடன் பேசும்
கருப்பைக் குழந்தைகள் போல் - அவர்
உயிரூறிக் கலந்த சுவடுகளோடு
இன்குறுகிறேன் நாளும்.


முன்னூறு நாள் சுமந்த வலியிறக்கி - தன்
சிசுக்கண்டு மகிழ்கிறாள் தாய்
முன்னூறு வருடக்கடன் நிமிர்த்தி
முன்னூறு தசாப்த வலியிறக்கி
என்று மகிழ்வேனோ நான்.

மடியுதைக்கும் குழந்தைகளின்
ஆன்மவலி சுடுகிறது.
விடுதலை முழக்கம்
வான் முகடு கிழிக்கும் ஒரு நாளில்
நான் பிரசவிக்க வேண்டும்.

உறுதி தாருங்கள்!
கடன் முடிக்கும் பலம் பூண்டு
காலத்திரை கிழித்தென்
சுமை பகிர்வர்களென
உறுதி தாருங்கள்!

அம்புலி





பெப்ரவரி - 2008



# எரிமலை
# ERIMALAI

